

# ஞானச்சுடர்

சித்திரை மலர்

2009



ஓம்

முருகா

கொழும்பு தமிழ்ச் சங்கம்
நூலகம்
11 JUL 20

வெளியீடு

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை

# குறள்வழி



சிறப்பீனும் செல்வமும் ஈனும் அறத்தினூஉங்(கு)
ஆக்கம் எவனோ உயிர்க்கு.

பொருள்: தருமம் சிறந்த மோட்சந்தரும், இம்மை மறுமை வாழ்வுகளையும் தரும் ஆதலின் அறத்திலும் மேலான பெறத்தக்க செல்வம் வேறு இல்லை. (31)

அறத்தினூஉங் காக்கமு மில்லை யதனை
மறத்தலி னூங்கில்லை கேடு.

பொருள்: ஒருவனுக்குத் தருமஞ் செய்தலினும் பார்க்க மேலான நன்மையாதும் இல்லை. அத்தருமத்தைச் செய்யாது விடுதலின் மேலான கேடும் வேறு இல்லை. (32)

# நற்சிந்தனை



## மறப்பேனோ குருநாதன் தன்னை

### நேரிசை வெண்பா

இல்லையென் னாமல் இரப்போர்க்கொன் றீவரேல்
தொல்வினை யெல்லாந் தொலைந்துபோம் – நல்லைக்
குருநாதன் கூறினான் பொல்லாப்பிங் கில்லை
உருகாதோ நெஞ்ச முவந்து 1


உண்மை முழுதுமென் றோதுங் குருநாதன்
தன்னை மறப்பேனோ தாரணியில் – பின்னைபினித்
துஞ்சல் பிறப்புண்டோ சோர்வச்சந் தாமுண்டோ
கஞ்சமலர்த் தாளென்றுங் காப்பு 2

காக்குந் திருவடிகள் எந்நாளு மென்மனத்தில்
பூக்கும் பொறிவழியே போகாமல் – நோக்குமென்றும்
தேக்குஞ் சிவானந்தத் தேனமுதை யுண்டுமனம்
நீக்கமின்றி நிற்கும் நினை 3

நினைக்கு மடியாரை நீயேநா னென்றே
அணைக்குந் திருக்கரந்தா னென்னே – கனைக்குங்
கடல்சூழ் கவினிலங்கைக் கார்சூழ்நல் லூரான்
தொடுக்கும்வல் வேலைத் துதி 4

துதிக்க மதிதந்த தூயோன்றன் பாதம்
துதிக்க வினைகள் துகளாம் – மதிக்கருளும்
ஐயன் திருமதலை ஆறுமுகன் வீதியிலே
தெய்வமென நின்றான் தெளி 5

# ஞானச்சுடர்



கொழும்பு தமிழ்ச் சங்கம்
நூலகம்

வெளியீடு :

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலைபண்பாட்டுப் பேரவை




வெளியீடு - 2 சுடர் -136

# 2009 சித்திரை பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| வட இந்தியாவில்.... | செல்வி த. அம்பாலிகா | 1 - 3 |
| 'ராம' பிரம்மம் | திருமதி பா. சிவனேஸ்வரி | 4 - 6 |
| சைவக்குடும்பம்..... | சோ. குமாரசாமி | 7 - 8 |
| சைவ சமய பக்தி.... | க. நாகேஸ்வரன் | 9 - 10 |
| பாத்திரமறிந்து பிச்சைகொடு | கே.எஸ். சிவஞானராஜா | - 11 |
| வட இந்திய ஸ்தல யாத்திரை | | 12 - 15 |
| வேண்டுதல்கள் | திருமதி சி. யோகேஸ்வரி | 16 - 18 |
| இந்துசமயத்தில் பெண்கள் | செல்வி S.K. சிந்துரா | 19 - 22 |
| தொண்டர் தம் பெருமை... | ஆ. மகேசு | 23 - 24 |
| நித்திய அன்னப்பணி | | 25 - 26 |
| திருவிளையாடற் புராண.... | ஆறுமுகநாவலர் | 27 - 28 |
| வாசகர் கடிதம் | | - 29 |
| அருட்கவி சீ. விநாசித்தம்பி... | செல்வி தி. வரதவாணி | 30 - 31 |
| ஞானச்சுடர் வேலன்..... | வ. சிவநேசன் | 32 - 33 |
| ஆத்திசூடி | ஔவையார் | 34 - 55 |
| செய்திச் சிதறல்கள் | | 36 - 37 |
| நரை | வாரியார் சுவாமிகள் | 38 - 39 |
| ஆசாரக்கோவை | | 40 - 41 |
| சந்நிதியான் | ந. அரியரத்தினம் | 42 - 45 |
| தமிழகத் திருக்கோயில்.... | வல்வையூர் அப்பாண்ணா | 46 - 50 |


**அன்பளிப்பு:-**

**மலர் ஒன்று 30/= ரூபா**

**வருடச்சந்தா தபால்செலவுடன் 385/= ரூபா**

**சந்நிதியான் ஆச்சிரம சைவகலை பண்பாட்டுப் பேரவை**

**தொலைபேசி இலக்கம்:- 021- 2263406, 060- 2219599**

**FAX: 021- 2263406**

**பதிவு இல, Q.D/38/NEWS/2009**

**அச்சுப்பதிப்பு:- சந்நிதியான் ஆச்சிரமம், தொண்டைமானாறு.**

# ஞானச்சுடர்

# பங்குனிமாத வெளியீடு

## வெளியீட்டுரை:~

பங்குனிமாத ஞானச்சுடர் மலருக்கான வெளியீட்டுரையினை யா/ வீரகத்திப் பிள்ளை மகா வித்தியாலய அதிபர் திரு வ. கணேசமூர்த்தி அவர்கள் நிகழ்த்தினார்கள்.

அவர் தனது வெளியீட்டுரையில் சந்நிதி முருகன் என்ற பெருமையுடன் சந்நிதியான் அச்சிரமம் தனது அன்னதானப் பணியை மட்டும் கருத்தில் எடுத்துச் செய்யாமல் சமய, சமூக, கல்விப் பணிகளை மேற்கொண்டு வருகின்றது. குறிப்பாக எமது பாடசாலைக்கு என்ன உதவி தேவை என வந்து நின்றாலும் இல்லையெனாது வழங்குகின்ற அட்சய பாத்திரமாக சந்நிதியான் ஆச்சிரமமும் சுவாமிகளும் விளங்குகின்றனர்.

மேலும் இம்மலரானது எவ்வளவு பொருளாதாரக் கஷ்டங்கள், நாட்டுச் சூழ்நிலைகள் என்பன இடைஞ்சலாக வந்தபோதும் முருகனின் திருவருள் கைகூடியுள்ளதால் தொடர்ச்சியாகவும், சிறப்பாகவும், நேர்த்தியாகவும் வெளிவருகின்றதோடு, பாடசாலை மாணவர்களுக்கு பயன்தரு பாடப்புத்தகமாக கொள்ளக்கூடிய சிறப்பைக்கொண்டு விளங்குகிறது என தனதுரையை நிறைவு செய்தார்.

## மதிப்பீட்டுரை:~

135ஆவது பங்குனிமாத மலருக்கான மதிப்பீட்டுரையினை பொருளியற் கல்லூரி ஆசிரியரும், சைவ சமயக் கொள்கைகளுடன் அதீத ஈடுபாடு கொண்டவருமான திரு க. நித்தியதசீதரன் அவர்கள் நிகழ்த்தினார்கள்.

அவர் தனது உரையில் சைவ மக்கள் இறைவனை அடைவதற்கு ஒவ்வொரு மார்க்கங்களைக் கடைப்பிடிக்கின்றனர். அம் மார்க்கங்களுக்கும் சிந்தனைகளுக்கும் ஊன்றுகோலாகவும். அடித்தளமாகவும் இம்மலர் அமைந்துள்ளது என்றால் மிகையாகாது. சந்நிதியான் ஆச்சிரமத்தினது செயற்பாடுகள் உலக மனித விழுமியங்களைக் கட்டிக்காத்து வருவதோடு கடமை உணர்வு, ஒழுக்கங்கள், சைவசமயப் பண்புகள் போன்றவற்றை நன்நெறிப்படுத்துவதாகவும் ஞானச்சுடர் மலர் அமைகின்றது.

மேலும் இம்மலரானது புலம்பெயர்ந்து வேறு நாடுகளில் வாழும் மக்களுக்கும் சென்று எமது சமயத்தை கட்டிக்காத்து பேணி வருவதற்கு ஒரு வரப்பிரசாதமாகவே அமைந்துள்ளது. அத்துடன் நேரத்தினைக் கருத்திற்கொண்டு பங்குனிமாத மலரில் இடம்பெற்ற சுடர் தரும் தகவல், பொன்மொழிகள், கவிகள், குறுஞ்செய்திகள் மற்றும் ஆக்கங்கள் யாவும் தரமானவையே என்பதுடன் அவை ஒவ்வொன்றையும் சபையில் கூடியிருந்த அடியார்களுக்கு சுருக்கமாகவும் தெளிவாகவும் விளக்கிக் கூறியதுடன் தனது மதிப்பீட்டுரையை நிறைவு செய்தார்கள்.

உ

# சுடர் தரும் தகவல்

நாம் எல்லோரும் நம் வாழ்வு உயரவேண்டும் என்னும் சிந்தனையோடுதான் செயலாற்றி வருகிறோம். ஆனால் உயர்வு பெற்றவர்- பெறுகின்றவர் ஒருசிலரே ஆவர். அதற்கு என்ன காரணம்? உயர்வு அடைய வேண்டும் என்று எண்ணுகிறோமே தவிர அதற்குரிய வழிவகைகளை நாம் சிந்திக்கின்றோமில்லை. சிந்தித்து அதற்கு அமைவாக நாம் நடப்பதில்லை.

மனம்போல் வாழ்வு என்பார்கள். அதாவது எமது வாழ்வு எம் மன நினைவிற்கு தக்கவாறுதான் அமையும். நல்ல நினைவுடன் இருந்தால் அதாவது எம்மைச் சார்ந்தவர்களும், சமூகமும் நன்றாக வாழவேண்டும் என்னும் சிந்தனை நமதுள்ளத்தில் பதிந்து இருந்தால் எமது வாழ்வு சிறக்கும். உயரும். "கெடுவான் கேடு நினைப்பான்" என்பது முதுமொழி. பிறருக்கு கேடுசெய்ய எண்ணுபவன் தான் கெடுவதோடு தனது; சந்ததியினருக்கும் அந்த எண்ணத்தை வளர்த்து விடுகின்றான். எனவே நாம் ஒவ்வொருவரும் நம் மனத்தின் கண்ணே மாசு இல்லாத வகையில் வாழ முயற்சிக்க வேண்டும்.

மனதிலே மாசு இல்லாது இருத்தல் அனைத்து அறமும் ஆகும். அழுக்குத் துணியில் மேலும் மேலும் அழுக்குப் படிவதுபோல அற நூல்களைப் படிக்காத, அறிவுரைகளைக் கேளாதவர் மனதில் மாசு படியும். மாசு உடைய மனத்தை உடையவர்களது எண்ணங்கள் எதுவும் நிறைவேறாது. மாசில்லாத மனத்தை உடையவர் நினைத்த கருமங்கள் இறையருளால் இலகுவில் கைகூடும். மாசில்லா மனத்தவர் உள்ளத்தில் இறைவன் எழுந்தருளியிருப்பான்.

எனவே ஊரார் நலமாக வாழவேண்டும். உலகோர் நலமாக வாழவேண்டும். உயிர்கள் யாவும் இன்பமுற வேண்டும் என்று நினைப்பதன்மூலம் எமது வாழ்வையும் வளமாக்குவோம். நமது உள்ளம் உயர்ந்தால் நாம் உயர்வுபெற முடியும். இவ்வகைச் சிந்தனைகளோடு நாமும் எமது சமூகமும் செயலாற்றும்பொழுது எல்லாவித நன்மையையும் அடையமுடியும்.

உ

# சந்நிதியான் ஆச்சிரமத்தில் முருகேசு சுவாமிகள் குருபூசை 03.04.2009

மணியோசை கேட்கு தம்மா- சந்நிதியில்
மணியோசை கேட்கு தம்மா
பணிவான முருகேசு சுவாமி குருபூசை நாள்
மணியோசை கேட்கு தம்மா

மயில்வா கனஞ் சுவாமி மாநினைவு மண்டபத்தில்
முருகேசுச் சுவாமியார் குருபூசை
மதிக்கும் மோகனதாஸ் சுவாமியார் நடாத்தும்
மனமார்ந்த முருகனருள் குருபூசை

வருங் காலஞ் சிறப்பாகப் பெருங்கால மாயமைய
முருகேசுச் சுவாமிகளின் குருபூசை
இரும்பான மனமெல்லாம் கரும்பாகக் குழைவிக்கும்
முருகேசுச் சுவாமிகளின் குருபூசை

கோயி லடியா ரெல்லாம் கும்பிட்டு வந்திருக்கும்
குருநாதன் அன்னமிடுங் குருபூசை
கோடையிடி மத்தளமும் குலவும் சுருதி வாத்தியமும்
குமிறிடவே பிரசங்கஞ்செய் குருபூசை

சந்நிதிஆச்சிரமச் சைவப்பண் பாட்டுக் கலை
சபையோர்கள் நடாத்துகின்ற குருபூசை
சன்மார்க்க ஸ்ரீதரனும் அன்னைதாசனும் செய்த
சங்கீத கதாப்பிரசங்கக் குருபூசை

சந்ததமும் முருகனைச் சிந்தைசெயும் மோகனதாஸ்
சாமியது சங்கீதம் மழைமூழ்கி
வந்தனைசெய் தடியார்கள் சிந்தை பறிகொடுத்த
மகான் முருகேசுச் சாமி குருபூசை

கந்தனுக்கு விருப்பமான அன்னதான மிட்டவனின்
கால்மலரில் அடியார் தொழும் குருபூசை
காசினியில் மக்களெல்லாம் கண்டுகேட்டு அவனைப் பாடும்
கந்தனது ஆச்சிரமக் குருபூசை

ஆச்சிரமம் முட்டமுட்ட அடியார்கட் கன்னமிடும்
ஆறுமுகன் சந்நிதியான் குருபூசை
அடுத்தடுத்து அன்பர்கூட்டம் அத்தனைக்கும் தளராமல்
அருளியைந்து தொண்டர்புரி குருபூசை

அருள்முருகன் பணியாக அயராது மாலைவரை
அன்னமிட்டு விரதப்பணி அனைத்துஞ் செய்த
அயராது தொண்டு செய்யும் அத்தனை அன்பரையும்
ஆச்சிரமத் தார்களையும் வணங்கி ஏத்துவோமே.

*அன்பன்- முதுபெரும்புலவர்மணி கலாபூஷணம், ஆசிரியர்*
*வை.க. சிற்றம்பலம் அவர்கள்*

# சித்திரைமாத சிறப்புப்பிரதி பெறுவோர் விபரம்

**திரு சி. கணபதிப்பிள்ளை**
(பெருமாள் கோவிலடி, யாழ்ப்பாணம்)

**திரு நா. உமாசங்கர்**
(கயூரி வீடியோ விஷன், அச்சுவேலி)

**திரு நா. குகன்**
(குகன் ஸ்ரூடியோ, பருத்தித்துறை)

**திரு பொ. பாலசிங்கம்**
(பத்தமேனி, அச்சுவேலி)

**திரு இராசையா சற்குணதாஸ்**
(ஊரெழு கிழக்கு, சுண்ணாகம்)

**திரு மு. செல்லையா**
(இளை. ஆசிரியர், கந்தர்மடம்)

**திரு த. சிவலிங்கம்**
(வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்)

**திருமதி சிவராஜா**
(நன்நடத்தை உத்தியோகத்தர், கல்வியங்காடு)

**திரு க.வ. இரவீந்திரராஜா**
(விஞ்ஞானபீடம், யாழ் பல்கலைக்கழகம்)

**திரு கு.மு. இராஜேந்திரா**
(வட்டுக்கோட்டை)

**திரு கு. சண்முகநாதன்**
(ஸ்ரீ ராமகிருஷ்ண பவனம், கொக்குவில்)

**திரு க. இராமச்சந்திரன்**
(ஊரெழு கிழக்கு, சுண்ணாகம்)

**திரு வீ. கிருஷ்ணராஜா**
(ஆசிரியர், மானிப்பாய் இந்துக்கல்லூரி)

**திரு சி. கனகசபாபதி**
(சிவன்கோவிலடி, ஆவரங்கால்)

**திரு ம. குலநாதன்**
(நாதன் காரஜ், ஆவரங்கால்)

**திரு க. பாலசுப்பிரமணியம்**
(பதிவாளர், இமையாணன்)

**திரு செ. சிவராசா**
(வாசிகசாலையடி, உடுப்பிட்டி)
**திரு S. தர்மபாலகிருஷ்ணன்**
(தும்பளை, பருத்தித்துறை)
**திரு த. நடேசன்**
(உரும்பராய் தெற்கு, உரும்பராய்)
**திரு க. கிரிதரன்**
(திரு இல்லம், கரவெட்டி)
**திரு மா. சண்முகநாதன்**
(ராஜன் பேக்கரி, பருத்தித்துறை)
**திரு வீரையா சிவஞானம்**
(நவக்கிரிமேற்கு, புத்தூர்)
**திரு க.கு. கிருபாகரராசா**
(பிரதானவீதி, ஆவரங்கால்)
**திரு இ. மனோகரன்**
(மனோ லைற், கோப்பாய்)
**திரு அ. தவராசசிங்கம்**
(களஞ்சியப் பொறுப்பாளர், உடு. ப.நோ.கூ. சங்கம்)
**திரு சி. நந்தகுமார்**
(வங்கி ஊழியர், உரும்பராய்)
**திரு கு. லோகேந்திரன்**
(மில் ஒழுங்கை, மல்லாகம்)
**திரு ச. கனகராசா**
(துஷி மினிசினிமா, ஆவரங்கால்)
**திரு சி. விபுலானந்தஅடிகள்**
(லிகிதர், உடு. ப.நோ.கூ. சங்கம்)
**உரிமையாளர்**
(உமாபதி தொலைத்தொடர்பகம், உரும்பராய்)
**திரு இ. விஜயகருணா**
(விதுரன் மோட்டோர்ஸ், ஆவரங்கால், புத்தூர்)
**செயலாளர்**
(நகரசபை, வல்வெட்டித்துறை)
**திரு வ.க. சாம்பசிவம்**
(வில்லூன்றி, யாழ்ப்பாணம்)
**திரு செ. அமிர்தசாகரன்**
(அம்பாள் மோட்டோர்ஸ், ஆவரங்கால்)

**திரு சி. சக்திகிரீவன்**
(கிராம சேவையாளர், ஏழாலை)

**உரிமையாளர்**
(ராஜா மெடிக்கல் ஸ்ரோர்ஸ், சுண்ணாகம்)

**திரு தி. பாலசிங்கம்**
(அச்சுவேலி தெற்கு, அச்சுவேலி)

**திரு இ. ஜெயபரிபாலன்**
(உரும்பராய் கிழக்கு, உரும்பராய்)

**திரு சி. சுகிர்தலிங்கம்**
(புலோலி கிழக்கு, பருத்தித்துறை)

**திரு T. இரவீந்திரதாஸ்**
(சாமியன் அரசடி, கரவெட்டி)

**திரு ச. மகாதேவன்**
(ஜெயந்தி என்ரபிறைஸ், ஆவரங்கால்)

**தலைவர்**
(சுண்ணாகம் ப.நோ.கூ. சங்கம்)

**திரு தா. முத்துவேலு**
(சந்நிதிவீதி, உடுப்பிட்டி)

**திரு கு. மாணிக்கராசா**
(கிளை முகாமையாளர், உடுப்பிட்டி ப.நோ.கூ. சங்கம்)

**உரிமையாளர்**
(ஏகாம்பரம் ரெக்ஸ், யாழ்ப்பாணம்)

**திரு ஆ. மணிமாறன்**
(அராலிமத்தி, அராலி)

**திரு ந. ஜெயக்குமார்**
(விற்பனையாளர், உடுப்பிட்டி ப.நோ.கூ. சங்கம்)

**திரு க. ஞானச்சந்திரன்**
(நாகலிங்கம்வீதி, கொக்குவில்)

**திரு ஐ. வேலாயுதர்**
(வேல்வாசம், கோப்பாய்)

**திரு ஐ. நற்குணநாதன்**
(உடுவில், சுண்ணாகம்)

**திரு தம்பு சற்குருநாதன்**
(ஏழாலை மேற்கு, சுண்ணாகம்)

**திரு வே.க. கந்தையா**
(வியாபாரிமூலை, பருத்தித்துறை)

**திரு இரா. சிவலிங்கம்**
(கேசரிவிலா, கரவெட்டி)
**திரு வே. சந்திரசேகரம்பிள்ளை**
(சிறுப்பிட்டி, நீர்வேலி)
**திரு K. இராமச்சந்திரன்**
(சங்கானை)
**திரு த. இராஜசிங்கம்**
(நீர்வேலி)
**கு. செல்வலட்சுமி**
(உடுவில், சுண்ணாகம்)
**திருமதி P. நந்தகோபால்**
(பிளாக்றோட், சங்கானை)
**திரு ம. புலேந்திரன்**
(கரணவாய், கரவெட்டி)
**திரு த. விமலேஸ்வரன்**
(மாலிசந்தி, அல்வாய்)
**திரு வீ. செல்வராஜா**
(ஊரெழு கிழக்கு, சுண்ணாகம்)
**திரு கி. தவராசா**
(காந்தியூர், புலோலி)
**திரு சி. பாலபாரதி**
(கற்கோவளம், பருத்தித்துறை)
**திரு V. கனகநாயகம்**
(கனகேந்திரா தொலைத்தொடர்பு நிலையம், இணுவில்)
**உரிமையாளர்**
(அரவிந் போட்டோ, ஆனைப்பந்தி)

---

**சந்நிதியான் ஆச்சிரமம் மேற்கொண்டுவரும் நித்திய அன்னப்பணிக்கும் மற்றும் ஆச்சிரமத்தினால் நடாத்தப்படும் சகல சமுதாயப்பணிகளுக்கும் உதவிபுரிய விரும்புவோர் கீழே உள்ள முகவரியுடன் தொடர்புகொள்ளவும்.**

**காசுக்கட்டளை**
செ. மோகனதாஸ்
சந்நிதியான் ஆச்சிரமம்,
தொண்டைமானாறு.
T.P.NO. 021- 2263406
060 - 2219599
FAX.NO. 021- 2263406

**காசோலை**
செ. மோகனதாஸ்
க. இல. 7342444
இலங்கை வங்கி,
பருத்தித்துறை.

www. sannithiyan. org

உ

# வடஇந்தியாவில் கௌமாரத்தின் தோற்றமும், வளர்ச்சியும்



செல்வி அம்பாலிகா தம்பாபிள்ளை அவர்கள்

இந்துசமயத்தின் சண்மதப்பிரிவுகளில் ஒன்றாக கௌமாரம் காணப்படுகின்றது. கௌமார சமயப்பிரிவுக்குரிய முழுமுதற்கடவுளாக முருகப்பெருமான் சுட்டப்படுகிறார். அண்டசராசரம் எல்லாம் வியாபித்து நின்று இயக்குகின்ற பரம்பொருளாகிய இறைவனை அப்பனாகவும், அம்மையாகவும் பார்த்ததுபோல இளவலாகவும் குமரனாகவும் பண்டைய இந்துக்கள் கண்டு போற்றிவழிபட்டனர். தமிழரின் முழுமுதற்கடவுளாகவும் முருகன் போற்றப்படுகிறார். சிவனின் நெற்றிக் கண்ணிலிருந்து புறப்பட்ட பொறிகளின் மூலம் சரவணப்பொய்கையில் முருகன் தோற்றம் பெற்றான் எனக்கந்தபுராணம் கூறுகின்றது. பிரம்மாவாய் உலகத்தைப் படைத்தும், விஷ்ணுவாய் உலகத்தைக் காத்தும், உருத்திரனாய் உலகத்தை அழித்தும் நிற்கின்ற பரசிவசோதிப்பிழம்பே ஆறுமுகப்பெருமான் என்பது முருக உபாசகர்களின் நம்பிக்கையாகும். கலிகாலப் பாவங்களைப் போக்கவல்ல கலியுகவரதனாகிய கந்தவேட்பெருமானின் தரிசனமே என வியாசபகவான் தன்னை நாடிவந்த தவசிரேஷ்டர்களுக்கு கூறினார். தன்னை வழிபடுவோருக்கு எளிதில் கருணைபுரியும் தெய்வம் முருகன் என்பதை "ஸ்கந்தஸ்ய கீர்த்திம் அதுவாம் கலிகல் மஷநாசினீம்" என்ற சுலோகம் குறிப்பிடுகின்றது.

இனி வடஇந்தியாவில் கௌமாரத்தின் தோற்றமும் வளர்ச்சியும் சிறப்பாகக் காணப்பட்டது என்பதை வடமொழி இலக்கிய நூல்கள் ஆதாரமாகின்றன. வடமொழி இலக்கிய நூல்வரிசையில் எடுத்து நோக்கின் முதலில் வேதம் கூறும் கருத்தை ஆராய்வோம். வேதகாலத்திலே முருகப்பெருமானை "சுப்பிரமண்யம்" என வழங்குகின்றனர். சுப்பிரமண்யம் என்பதன் பொருள் பிரமஞானத்தில் விருப்பத்தை வளர்ப்பது என்பதாகும் வேதகால முனிவர்கள் தங்கள் யாகாதிகளை முடித்த போது சுப்பிரமண்யோம், சுப்பிரமண்யோம், சுப்பிரமண்யோம் என்று மும்முறை கூறுவதாக தைத்திரீயாரண்யகம் கூறும். மேலும் ஸ்கந்தனை அக்கினியுடன் தொடர்பு படுத்தி நோக்குகின்ற தன்மை மிகுந்து காணப்படுகின்றது. அதர்வவேதத்தில் ஸ்கந்தன் அக்கினியின் புத்திரன் (Agni Bhuth) என்று வர்ணிக்கப்படுகிறார். சதபதபிராமணத்தில் ஸ்கந்தன் உருத்திரனின் குமாரனாக அல்லது அக்கினியின் ஒன்பதாவது தோற்றமாகச் சித்தரிக்கப்படுகிறார்.

அடுத்தது வடமொழி இலக்கிய நூலான ஆகமத்தை எடுத்து நோக்கின் சிவாகமங்களான காமிகம், சுப்பிரபேதம், காரணம் முதலியன முருகனின் வரலாற்றுக் குறிப்புக்களைக் கூறுகின்றன. அம்சுமத்பேதம், உத்தரகாமிகம் முதலியனவும் முருகனைப்பற்றி கூறுகின்றன.

உத்தரகாமிகம் முருகனுக்கு தனிக் கோயில் அமைக்கும் முறையையும் அமைக்கக்கூடிய இடங்களையும் கூறும் மலை, ஆறு, சோலை, காடு, மரத்தடி, தலைநகரம் போன்ற இடங்கள் முருகனுக் குக் கோயில் அமைக்கக்கூடிய சிறப்பான இடம் என்று கூறுகின்றது.

இனி உபநிடதத்தை எடுத்து நோக்கின் சாந்தோக்கிய உபநிடதம் தரும் குறிப்பு முக்கியமானது. நாரதமுனிவர் ஒருமுறை மன அமைதியை இழந்து தவித்தவேளையில் முனிவர் சனற்குமார ரைச் சந்தித்து "ஸ்கந்தனே ஒளி, ஞானம் என்பவற்றைத் தருபவன்" என்று கூறு கிறார். எனவே உபநிடதங்களிலும் முரு கன் சிறப்பிக்கப்படுகிறார்.

அடுத்து முருகனின் மகிமையை இதிகாசங்களும் கூறத்தவரவில்லை. இதிகாசங்களில் ஒன்றான இராமாயணத் தில் விசுவாமித்திரர் இராம, இலட்சும ணருக்கு கங்கையின் வரலாற்றைப் பற்றிக்குறிப்பிடும்போது முருகனைப்பற்றி யும் அழகாக விபரிக்கிறார். மேலும் மகாபாரதம் முருகனை யோகபுருசனாகக் கூறும். குமரனின் பெயர்கள் பாரதத்தின் வனபர்வத்தில் 32ஆம் அதிகாரத்தில் தர் மனின் வேண்டுகோளுக்கு இணங்கத் தொகுத்துக் கூறப்பட்டுள்ளது. மேலும் பாரதத்தில் சல்யபர்வத்தில் ஜனமேயர் குமாரக்கடவுளது பிறப்புபற்றி விரிவாகக் கூறுகின்றார்.

இனி வடமொழிப்புராணங்கள் முரு கனின் பெருமையை எப்படிக் கூறுகின்றன எனப்பார்ப்போம். மச்சபுராணம், பத்ம புரா ணம், மார்க்கண்டேய புராணம், வாயு புராணம் என்பவற்றில் ஸ்கந்தனைப்பற்றிய விளக்கங்கள் மிக அழகாகக் காட்டப் பட்டுள்ளன. வடமொழி இலக்கிய நூல் களின் ஊடாக ஆராய்ந்தபிறகு அங்கு அரசாண்ட மன்னர்களும் ஸ்கந்தனை வழிபட்டதற்கான சான்றுகள் பல உள. குஷான மன்னனான குலிஷ்காவின் நாணயங்களில் முருகனது உருவம் பொறிக்கப்பட்டுள்ளது. இதுபோன்றே பௌதயர்களும் தமது நாணயத்தில் முருகனின் திருவுருவத்தை மயிலுடன் இணைத்துப் பொறித்துள்ளனர். குப்த மன்ன னான 1ஆம் குமாரகுப்தன் முருகன்மீது அளவுகடந்த ஈடுபாடு உடையவனாக விளங்கினான். அக்கால மெய்க்கீர்த்தியின் ஊடாக அறியக்கிடக்கின்றது. மேலும் "குமாரர்" என்னும் அவனது பெயரும், "ஸ்கந்தர்" என்னும் அவனது மகனது பெயரும் அவர்கள் முருகனை வழிபட்டு உள்ளனர் என்பதைக் காட்டுவதோடு குப் தர் காலத்தில் முருகனது இவ்விரு நாமங் களும் பெற்ற செல்வாக்கைக் காட்டு கின்றது.

மேலும் குப்தர் காலத்தில் மகா கவியாகப் போற்றப்பட்ட காளிதாசர் தான் இயற்றிய நூலுக்கு குமாரசம்பவம் எனப் பெயரிட்டார். ராஜஸ்தானில் குப்தர் காலத் தைச் சேர்ந்ததாகக் கருதப்படும் ஸ்கந்தக் கடவுளின் படிமம் பல கிடைத்துள்ளன. நாகர் என்னும் இடத்தில் இரண்டு கரங் களுடன்கூடிய மயில்மீது அமர்ந்த நிலை யில் உள்ள ஸ்கந்தனது புடைப்புச்சிற்பம் மிக அழகாகக் காட்டப்பட்டுள்ளது. ராஜஸ்தானைச் சேர்ந்த பைரத்தில் (Bairat) கிடைக்கப்பெற்ற குப்தர்காலத் தைச் சேர்ந்ததாகக் கருதப்படும் மூன்று முகங்களுடன் கூடிய மயிலின்மீது அமர்ந்தவண்ணமுள்ள ஸ்கந்தப்படிமம் ஜெய்ப்பூர் மத்திய கண்காட்சிக் கூடத்தில்

அரைகுறைப் படிப்பு என்றுமே அதிக ஆபத்து.

பாதுகாக்கப்பட்டு வருகின்றது. மேலும் ஸ்கந்தப்படிமம் ககுனியில் (Kakuni) கண்டெடுக்கப்பட்டு பாதுகாக்கப்பட்டு வருகிறது. இப் படிமம் கலை அம்சம் பொருந்தியதாகக் காணப்படுகின்றது.

பாணினி தனது வியாகரணசூத்திரத்தில் முருகனின் பெருமையை அழகாகக் கூறுகிறார். இதேபோல ஸ்ரீதத்துவ நிதியிலும் குறிப்பிட்டு உள்ளார். பதஞ்சலி தனது காலத்தில் சிவன், கந்தன், விசாகன் என்ற தெய்வங்களின் வணக்கம் இருந்ததாகக் கூறுகின்றார். வேத மாத்திரியின் விரதகண்ட என்ற நூலில் கார்த்திகேயன் என்ற தெய்வத்துக்குரிய புனித கிரியை, விரதம் என்பன குறிப்பிடப்பட்டுள்ளன. பழைய காலத்தில் பம்பாய் பிரதேசத்தை ஆண்டு வந்த சாளுக்கிய மன்னர்கள் "தங்கள் அரசு தங்களுக்கு கார்த்தியன் திருவருளால் கிடைத்தது" என்று கல்வெட்டுக்களில் பொறித்துள்ளனர்.

இப்படியாக மன்னர்களின் வரலாற்றுச் சான்றுகளின்மூலமும் அறியலாம். இப்படி பெருமைப்படுத்தப்படும் முருகனுக்குப் பல நாமங்கள் உள்ளன. அவையாவன சரவணபவன், விசாகன், வேலன், கார்த்திகேயன், சுப்பிரமண்யன், வேளைக்காரன், ஸ்கந்தன், குகன், ஆறுமுகன் எனப்பல நாமங்கள் காணப்பட்டாலும் முருகன் என்ற நாமம் சிறப்புக்குரியதாகும். முருகு என்பது அழகு. முருகு என்பதற்கு இளமை, மென்மை, மணம், கடவுள், தன்மை, தேன் என்ற பல பொருள்களைச் சொல்லலாம். மெல்லின, இடையின, வல்லின மெய் எழுத்துக்களுடன் (உ) என்ற உயிர் எழுத்து ஒன்றொன்றுடன் சேர்ந்து முருகு என்றாயிற்று. இம்மூன்றும் இச்சாசக்தி, கிரியாசக்தி, ஞானசக்தி இவைகளைக் குறிக்கும்.

அடுத்து முருகனுக்குரிய விசேட தினங்களாக கந்தசஷ்டி, திருக்கார்த்திகை என்பன. இவற்றோடு செவ்வாய், வெள்ளி தினங்களிலும் கந்தவேட் பெருமானை வழிபட்டால் உய்திபெறலாம்.

இப்படியாக வட இந்தியாவில் கௌமாரத்தின் தோற்றமும், வளர்ச்சியும் சிறப்புற்று விளங்கியதைக் காணலாம். முருகப்பெருமான் வடஇந்தியாவில் பிரமச்சாரியாகக் காணப்படுகிறார். ஆகவே வட இந்தியாவில் பழையகாலம் தொட்டு இன்றுவரை கந்தவேட்பெருமானின் மகிமையும், அவருடைய விசேட விரதங்களை அனுசரித்து கௌமார சமயத்தைப்போற்றி வருகின்றமை சிறப்பான அம்சமாகும்.

## வைகாசிமாத ஆலய விசேட உற்சவ தினங்கள்

1, 08,05,2009 சித்திரை 25 வெள்ளி
சித்திரா பூரணை விரதம்.

2, 24,05.2009 வைகாசி 10 ஞாயிறு
கார்த்திகை விசேட உற்சவம்

**மோசம் செய்து சம்பாதித்த பொருளின் தானத்தை இறைவன் ஏற்கமாட்டான்.**

உ

(தொடர்ச்சி...

# ராம பிரம்மம்

**திருமதி சிவனேஸ்வரி பாலகிருஷ்ணன் அவர்கள்**

சத்திய விரதன் என்னும் மன்னரின் மகன் சங்க சூடணன். அவன் ஆதிசேஷனை தவறாமல் தினமும் வழிபட்டு வந்தான். சங்கசூடணனின் குருநாதரின் மகள் சுமுகி. சுமுகி என்பதற்கு 'அழகான முகம் உடையவள்' என்பது பொருள். அவளுடைய உள்ளம் அழகானதல்ல. அவள் இளவரசன் சங்க சூடணனை விரும்பினாள். ஆனால் அவன், "குருநாதரின் மகள் எனக்குச் சகோதரி. நான் உன்னை விரும்பினால், என் சகோதரியை விரும்பிய பாவம் வந்து சேரும். அது அதர்மம். எனக்கு உன்மேல் கடுகளவும் விருப்பமில்லை. அடுத்த பிறவியிலும் நீ எனக்குச் சகோதரிதான், போ!" என்று சொல்லி சுமுகியை விரட்டி விட்டான். ஏமாற்றமடைந்த சுமுகி இளவரசனைப் பழிவாங்கத் தீர்மானித்து, தன் தந்தைமூலம் இளவரசன் தன்னிடம் தவறாக நடக்கமுயன்றான் என்று அரசனிடம் முறையிட்டாள். கோபங்கொண்ட சத்திய சந்தனான அரசன் தன் மகனாக இருந்தாலும், குருநாதர் மகளிடம் தவறாக நடக்கமுயன்றதற்கு சங்க சூடணனுக்கு மாறுகால்- மாறுகை வாங்குமாறு தண்டனை விதித்தான்.

அவன் மனம் வருந்தி, "ஆதிசேஷ பகவானே! மனதால் கூடப் பிறருக்குத் தீங்கு நினைக்காத எனக்கு இந்தத் தீங்கு வந்ததே" என்று முறையிட்டான். ஆதிஷேசன் அவன்முன் தோன்றி, "சங்கசூடணா! என்னதான் உயர்ந்த விதையாக இருந்தாலும் போட்ட உடனே முளைக்காது. நீ சொன்னபடி அந்த சுமுகி அடுத்தபிறவியில் உனக்குச் சகோதரியாகப் பிறப்பாள். அப்போது நானே அவளுக்குத் தண்டனை அளிக்கிறேன்!" என்று சொல்லி மறைந்தார்.

அதன்படி விபீஷணனாகச் சங்க சூடணன் பிறந்தான். சுமுகி சூர்ப்பனகையாகப் பிறந்தாள். ஆதிசேஷன் இலட்சுமணனாக அவதரித்து சூர்ப்பனகைக்குத் தண்டனை அளித்துத் தனது வாக்கை நிறைவேற்றினார். எனவேதான் அருணகிரிநாதர் 'விபீஷண சகோதரி சூர்ப்பணகை' என்றார். அங்கம் பங்கப்பட்ட சூர்ப்பனகை கரன், தூஷணன், திரிசிரனை, ராம இலட்சுமணருடன் போரிட்டு அவர்களை அழியுங்கள் என ஏவிவிட்டாள். அவர்களுடன் போர் புரிந்து ராமர் வென்றார்.

**வருகர தூஷணாவீரர் மாள (குனகிலயாரு) திருப்புகழ்**

**கண்டக வெங்கரனொடு திரிசிரனோடு (புருவச் செஞ்சிலை) திருப்புகழ்.**

சூர்ப்பனகை பின்பும் விடாது ராவணனிடம் சென்று சீதையின் அழகைக்கூறி மாபெரும் வீரனான அவன் அழிவுக்கு அடித்தளமிட்டாள். ராவணன் சீதையை நேரிற்கண்டு அவள் அழகைக்கண்டு விரும்பவில்லை. சூர்ப்பனகை சொல்லிச் சென்றதும் ஒரு காரியம் செய்தான். மாரீசனை மாயமானாக வரச்சொன்னான். ராமர் கையால் **மாய (இறக்க) மானாக வந்தான் மாரீசன்.**

**கோபமும் பொறாமையும் மனிதனைக் கொன்றுவிடும்.**

**'வடிவுடையமான்'– விடமும் வடிவேலும் (திருப்புகழ்)**

அவன் அழகைச் சொன்ன அருணகிரிநாதர், அவன் முடிவையும் நயம்படச் சொல்கிறார்.

**திருவைக் கொண்டொரு தண்டக வனமிசை**
**வரவச் சங்கொடு வந்திரு முழையுடல் சிதற– (புருவச்செஞ்சிலை)**
**திருப்புகழ்**

ராமரும் சீதையும் இருக்கும் தண்டக வனத்திற்கு மாரீசமான் அச்சத்தை சுமந்து வருகிறது. 'வஞ்சனை செய்வதில் நிகரில்லாதவன் மாரீசன்' ராமரின் அம்புபட்டு உடல் சிதறும்போது, "சீதா! இலட்சுமணா!" என்று ராமர் குரலில் கத்திக் கீழே விழுந்தான். அந்தக் குரல் கேட்டு, ராமருக்கு ஏதோ ஆபத்து என எண்ணிய சீதை, காவலாக இருந்த இலட்சுமணரை ராமரைப் பார்த்துவர அனுப்பிவைத்தாள். சீதையைத் தன்னந்தனியாக விட்டுவிட்டு இலட்சுமணன் போய்விட்டான். இராவணன் வருகிறான்.

**வீரத்தால் வல இராவணனார் – (திருப்புகழ்) ஆரத்தோடணி**

இராவணன் செய்த அரும்பெரும் செயல்கள் காரணமாக 'வீரத்தில் வல் இராவணனார்' என மரியாதையாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

**நதியுந் திருக்கரந்தை மதியுஞ் சடைக்கணிந்த**
**நட நம்பருற்றிருந்த கயிலாய**
**நக மங்கையிற் பிடுங்கு மசுரன்– (மதவெங்கரி)– திருப்புகழ்.**

கயிலைமலையை மிகுந்தவன்மையுடன் தன் தோளால் எடுத்தான். அப்போது பரமேஸ்வரன் தன் அழகிய திருவடியினால் அவனைக் கீழே விழச்செய்து மகிழ்ந்தார்.

**வலித்துத் தோள் மலை இராவணனவன்**
**எடுத்த போதுடல் கீழ் விழவே செய்து**
**மகிழ்ப் பொற்பாத சிவாய நம அரசம்பு**
**(எலுப்புத்தோள்) – திருப்புகழ்.**

ஆண்டவன் இருந்த மலையையே அகங்கார வசப்பட்டு தூக்கிய ராவணனின் அந்தப் பாவத்தை நீக்கி அவனுக்கு, "அரக்கன் தசமுகன் கைக்குக் கட்கமளிக்கும் பெரியோன்" என சந்திரஹாஸம் எனும் வாள் தந்தார் சிவபெருமான் என்கிறார். அந்த ராவணன் அட்டூழியம் செய்யக் கிளம்பி விட்டதை

**கமலாலய சீதையை, மோட்டன் வளைத்தொரு**
**தேர்மிசையே கொடு முகிலே போய்**
**(தாக்கமருக்கொரு)– திருப்புகழ்.**

தன்னந்தனியே இருந்த சீதை இராவணனிடம் அகப்பட்டு தப்புவதற்காக நாலாபக்கங்களிலும் ஓடினாள். ராவணமூர்க்கன் சீதையை வளைத்துக்கொண்டு ஒரு தேரில் ஏற்றி ஆகாய வழியாகப் போனான். 'தாமரை மலரில் இருக்கும் இலட்சுமிதேவியின் அவதாரமான சீதையை, இராவணன் இப்படிச் செய்துவிட்டானே!' என அருணகிரிநாதர் வருந்துகிறார்.

**உங்களைப் புகழ்ந்துரைக்கும்போது அடக்கமாயிருந்தால் அது பெரிய வெற்றி.**

**சானகி கற்புத் தனைச் சுடத்த(ன்) அ**
**சோக வனத்திற் சிறைப் படுத்திய**
**தானை அரக்கர் குலத் தரத்தனை வருமாள**

**(மானைவிடத்தை)– திருப்புகழ்.**

ஜானகியின் கற்புத் தீயில் தானும் தன் குலத்தவரும் மாளவே அசோக வனத்தில் சிறை வைத்தான்.

ராம, இலட்சுமணர் ஆச்சிரமத்திற்கு திரும்பிவந்து சீதையைக் காணாமல் 'எங்கே சீதை!' எனத் தேடத் தொடங்கினர்.

**இருங்கானகம் போய், இளங்காளை பின்போக**
**எங்கே மடந்தை யென ஏகி**

**(பெருங்காரியம்)– திருப்புகழ்.**

சீதையைக் காணாது தவிக்கிறார் ராமர். தேர் சென்ற தென்திசை வழி செல்கின்றனர். வழியிலே வீணைக் கொடியினையும், வில்முறிந்து கிடத்தலையும் காண்கிறார்கள். சாகக் கிடந்த சடாயுவைத் தழுவிக்கொள்கிறான் ராமன். விழித்துப் பார்த்த சடாயு, விழிநீர் பெருக்கி நிற்கும் வில்லாளர் இருவரையும் கண்கொண்டு பார்க்கிறார். 'விதியின் பிழை நீ இதற்கு என்னை வெகுண்டது' என்று இலட்சுமணனுக்கு அன்று கூறிய ராமனே தெளிவற்ற நிலையில் இருப்பதைப் பார்த்து சடாயு நல்லுரை சொல்கிறார்.

**அதிசயம் ஒருவரால் அமைக்கல் ஆகுமோ**
**துதியறு பிறவியின் இன்பதுன்பம் தான்**
**விதிவயம் என்பதை மேற் கொளாவிழன்**
**மதி வலியால் விதி வெல்ல வல்லமோ.**

விதிக்குக் கட்டுப்படாதவர் இல்லை. வாழ்க்கையில் வரும் இன்பதுன்பங்கள் விதிக்கு உட்பட்டன. அறிவின் வலிமையால் ஊழை வெல்லுதற்கு வல்லமை உடையோம் அல்லோம் என்று தேற்றுகிறான் சடாயு.

தான் ஈசுவர அவதாரம் என்று அறியாத ராமன், மனிதனாக மனச்சோர்வும், துயரங்களும் அடைந்தான். துன்பம் என்ன? இன்பம் என்ன? எல்லாம் ஈஸ்வரலீலை. ஆண்டவன் கருணாமூர்த்தியான பிராட்டியையும் கூட அழைத்துக்கொண்டு, மானிடர்களாக அவதரித்து, அந்த இன்ப, துன்ப லீலையை முற்றிலும் ஆடிக்காட்டியிருக்கிறார். இராமாயண காவிய நாயகனாகிய சக்கரவர்த்தி திருமகன் ஸ்ரீ ராமன்.

(தொடரும்....

## வைகாசிமாத குருபூசை தினங்கள்

| | | |
|---|---|---|
| 1. 06.05.2009 | சித்திரை 23 புதன் | |
| | உமாபதி சிவாச்சாரியார் குருபூசை | |
| 2. 28.05.2009 | வைகாசி 14 வியாழன் | |
| | சேக்கிழார் குருபூசை | |
| | நமிநந்தியடிகள் குருபூசை | |

**உலகம் ஓர் அழகான புத்தகம் அதை வாசிக்க முடியாதவனுக்கு குறைந்த பயனே உண்டு.**

உ

# சைவக்குடும்பம் - ஒழுகலாறு

**திரு குமாரசாமி சோமசுந்தரம் அவர்கள்**

சைவக்குடும்பம், சைவ ஆசாரங்களையும் சைவப் பழக்க வழக்கங்களையும் மேற்கொண்டு சைவநெறியில் வாழும்போதுதான், உண்மையான சைவக் குடும்பமாகத் திகழும். தாய் தந்தையர்கள், மற்றும் வயதுவந்த குடும்ப உறுப்பினர்கள் எவ்வாறு நடந்து கொள்கின்றார்களோ, அவர்களைப் பார்த்தே சிறு குழந்தைகளும் நடந்து கொள்வர். சிறுபராயத்தில், குழந்தைகளின் பிஞ்சு உள்ளங்களில் எவை ஆழமாகப் பதிந்து விடுகின்றனவோ, அவற்றின் விளைவுகளாகவே அவர்களின் குணங்கள், நடத்தைகள், வாழ்க்கைமுறைகள் அமைகின்றன. ஒருமுறை ஒரு சிறுவன் தனது தந்தையுடன் அரிச்சந்திரன் நாடகத்தைப் பார்த்தான். உண்மையை நிலைநாட்டுவதற்காக அரிச்சந்திர மன்னன் செய்த தியாகங்களைக் கண்ணுற்றான். உண்மையே வெல்லும் என்ற பாடத்தைக் கற்றுக்கொண்டான். இவையனைத்தும் அச் சிறுவனின் பிஞ்சு மனத்தில் ஆழப் பதிந்துவிட்டன. அன்றுமுதல், தனது உயிரே போனாலும், உண்மையிலிருந்து விலகுவதில்லை, பொய் பேசுவதில்லை என்ற உறுதியான தீர்மானத்தை எடுத்தான், அதைத் தனது வாழ்க்கையில் நிறைவேற்றினான். அந்தச் சிறுவன்தான், பின்னர் உலகம்போற்றும் உத்தமர் மகாத்மா காந்தியடிகள் ஆகப் பரிணமித்தவன்.

சிறுவர்களின் உள்ளங்களில் மனித மேம்பாட்டுக் குணங்களை வளர்ப்பதற்குப் பெற்றோர்கள் ஆவன செய்ய வேண்டும். உண்மை, அன்பு, தர்மம், பணிவு, அமைதி, இன்னா செய்யாமை, பிறருக்கு இடைஞ்சல் தராமை போன்ற நற்பண்புகளைக் குழந்தைகளுக்குச் சொல்லிக்கொடுக்கவேண்டும். தாமும் முன்மாதிரியாக நடந்துகாட்டவேண்டும். இம் மனித மேம்பாட்டுக் குணங்கள் பெற்றோர்களில் நிறைந்திருத்தல் அவசியம். வீட்டில் உள்ள சுவாமி அறையில் குழந்தைகளுடன் பெற்றோர்களும் சேர்ந்து இறைவணக்கம், தியானம், பஜனை என்பனவற்றில் சிலநிமிட நேரமாவது ஈடுபடுவதன்மூலம் குழந்தைகளைத் தெய்வபக்தி, தெய்வசிந்தனை உள்ளவர்களாக்கலாம்.

எமக்கு எந்த நேரமும் உதவுவதற்குப் பரம்பொருளாகிய இறைவன் இருக்கிறான். என்ற மனத்திட்பத்தைக் குழந்தைகளின் உள்ளங்களில் பதிய வைக்கப் பெற்றோர்கள் தவறக்கூடாது. ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையாது என்பது ஆன்றோர் வாக்கு. குழந்தைகள் நல்லவர்களாக வளர்வதற்குப் பெற்றோரின் அன்பும் கண்டிப்பும் அளவாகத் தேவை. நல்ல புத்திமதிகளை அவ்வப்போது கூறவேண்டும். சில பெற்றோர்கள் புத்தியீனமாகப் பிள்ளைமேல் அன்பைப் பொழிவதாக எண்ணி, பிள்ளையை அதன் மனம்போனபடி நடக்க விட்டு, பிள்ளையைக் கெடுக்கிறார்கள்.

அதிகாலையில் பிள்ளைகள் நித்திரைவிட்டெழ வேண்டும். காலைக்

**ஆன்மிக விழிப்புப்பெற்றவன் பயத்திலிருந்து நீங்கியவனாவான்.**

கடன்களை முடித்து, நீராடி, இறைவனை வணங்கி உணவருந்திப் பாடசாலைக்கு நேர காலத்தோடு செல்லவேண்டும். பாடசாலையில் ஆசிரியர்களுக்குக் கீழ்ப் படியவேண்டும் என்றும், சகமாணவரோடு அன்பாகவும், பண்பாகவும் பழகவேண்டும் என்றும், பெற்றோர் தமது பிள்ளைகளுக்குப் புத்திமதிகள் கூறவேண்டும். பாடசாலையில் பாடங்களைச் சிரத்தையோடு கற்கவேண்டும். ஆசிரியர்கள் மெச்சும்படி பிள்ளைகளின் ஒழுக்கம் அமையவேண்டும். சில பணம்படைத்த பெற்றோர் கைச்செலவிற்கெனப் பிள்ளைகளுக்குப் பணம் கொடுத்துவிடுகிறார்கள். இச்செயல் பிள்ளைகளைக் கெட்டுப் போவதற்கு வழிவகுக்கிறது. இவற்றைத் தவிர்த்துப் பெற்றோர் தங்கள் குழந்தைகளுக்கு மன அடக்கம், புலனடக்கம், உண்மை பேசுதல் போன்ற நல்லொழுக்க முறைகளைச் சொல்லிக் கொடுக்க வேண்டும்.

மாலையில் பிள்ளைகள் கை கால் அலம்பி, முகங்கழுவி, இறை வணக்கம் செய்து, பாடங்களைக் கற்க வேண்டும். பெற்றோர் கற்பதற்கு உதவ வேண்டும். வேறு பராக்குகளில் பிள்ளைகளின் புலன்கள் செல்லல் ஆகாது. கல்விகற்கும் பருவம், பிரமச்சாரியம் என்று இந்துக்கள் கொள்வர். கற்பன கற்று, வாழ்க்கைக்கு ஆயத்தம் செய்யும் பருவம். இப்பருவம், பயனுள்ள வகையில் அமையப் பெற்றோர்களினதும், ஆசிரியர்களினதும் உதவி பிள்ளைக்குத் தேவை. வளர்ந்துவரும் பிள்ளைகளின் அறிவாற்றல்களையும், அபாரசக்தியையும் முறைப்படி வழிப்படுத்தாத காரணத்தினால் சிறார்களின் ஒழுக்கக்குறைவு அதிகரித்து வருவதை அவதானிக்கின்றோம். இதனை உணர்ந்து பெற்றோர்கள், ஆசிரியர்கள், சமூகப் பெரியோர்கள் அனைவரும் ஒழுக்கசீலம், தெய்வநம்பிக்கை நிறைந்தவர்களாக பிள்ளைகளும் இளைஞர்களும் வளர்ந்துவர முயற்சிகள் மேற்கொள்ள வேண்டும்.

---

## சிவஸ்ரீ முருகுப்பிள்ளை கடவுள் சுவாமிகளின் 104ஆவது ஜெயந்தி தின விழா

**"அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்**
**அன்பே சிவமாவதாரும் அறிகிலார்**
**அன்பே சிவமாவதாரும் அறிந்தபின்**
**அன்பே சிவமாய் அமர்ந்திருந்தாரே"**

நிகழும் விரோதி வருடம் சித்திரை 15ம் நாள் 28.04.2009 செவ்வாய்க்கிழமை சிவஸ்ரீ முருகுப்பிள்ளை கடவுள் சுவாமிகளின் (மௌனகுரு) 104ஆவது ஜெயந்தி தின விழா தொண்டைமானாறு செல்வச்சந்நிதியில் சுவாமிகளின் அருட்பிள்ளைகள், அடியார்கள், அன்பர்களால் கொண்டாட இருப்பதால் அத்தருணம் யாவரும் வருகைதந்து சுவாமிகளின் அருளாசி பெற்றுய்யுமாறு அன்பால் அழைக்கின்றோம்

அன்று செல்வச்சந்நிதி முருகப்பெருமானுக்கு விசேட அன்னாபிஷேகம் சுவாமிகளின் வாசஸ்தலத்தில் பூஜை, பஜனை, பிரார்த்தனை நடைபெற்று தொடர்ந்து சந்நிதியான் ஆச்சிரமத்தில் மகேஸ்வர பூசை நடைபெறும்.

*கடவுள் சுவாமிகளின் அடியார்கள்.*

---

**நிலத்தை நம்பி வாழலாம் நிழலை நம்பி வாழக்கூடாது.**

உ

(தொடர்ச்சி...

# சைவ சமய பக்தி இலக்கியங்களின் அடிப்படைகளும் பயன்பாடுகளும்

வாகீசகலாநிதி கனகசபாபதி நாகேஸ்வரன் M.A அவர்கள்

"இசைக்குறிப்புக்களும், தமிழ்ப் பற்றும், இயற்கை வருணனையும் மிகவுடையன சம்பந்தரது பாடல்கள். எளிமையும், சொல்லணிப்பாடலும் இவர் தேவாரத்துள் மிக்கன. சமண பௌத்த மதக் கண்டனங்களைச் சம்பந்தரது பதி கங்களிற் காணலாம். சம்பந்தரது தேவா ரக் குறிப்புக்களைக் கொண்டே அவ்வூரில் பிற்காலச் சோழர் கற்கோயில் கட்டவும், திருமுறையோதவும் ஏற்பாடு செய்தனர். இவ்விரு செயல்களுமே சைவம் அழி யாமல் நின்றமைக்கும் வளர்ந்தமைக்கும் காரணங்கள். அவற்றிற்கு வித்திட்டன தேவாரவிலக்கியங்கள்." 23.

சைவ பக்திப் பேரிலக்கியங் களுட் சுந்தரர் பாடல்கள் நிலையாமை யையும் உலகத் துன்பத்தையும் மிகவாக வற்புறுத்துவன. தம்மைச் சிவனின் 'மீளா அடிமை' என்று குறிப்பிடும் சுந்தரர் தோழமையுணர்வுடன் சிவனிடம் முறை யீடு செய்துள்ளார். சுந்தரர் பாடல்களிலே வரலாற்றுச் சான்றுகள் பொதிந்துள்ளன. சமயக்காழ்ப்பும் தெளிவாகக் காணப் படுகிறது. வாழ்க்கையில் மிகவும் அடிபட்டமையால் அப்பர், சம்பந்தர் போன்று அவ்வளவு பாடல்களைச் சுந்தர ரால் எழுத முடியவில்லை. 24 என்றும் சிலர் கூறுவர்.

பக்தி இலக்கியப்பரப்பில் மாணிக்கவாசகரின் திருவாசகமும் திருக் கோவையாரும் எட்டாந் திருமுறையுள் அடங்குவன. நாயக- நாயகி பாவத்தில் பாடப்பட்டது திருவாசகம் என்பது இலக் கிய வரலாற்றாசிரியர்களது கருத்தாகும். சிவபெருமானே திருவாசகத்தை எழுதி னார் என்பது அதன் வரலாறு. 'திருவாச கத்திற்கு உருகாதார் ஒரு வாசகத்திற்கும் உருகார்' என்பது உண்மை. இராமலிங்க வள்ளலார், திருவாசகத்தைப் பாடினால் அது எப்படி இனிக்கும் என்று பாடுகிறார். "நற்கருப் பஞ்சாற்றினிலே தேன்கலந்து பால்கலந்து செழுங்கனித் தீஞ்சுவை கலந்து, ஊன் கலந்து உயிர் கலந்து உவட்டாமல் இனிப்பதுவே" என்பது வள்ளலாரின் அனுபவம்.

தமிழிலக்கிய வரலாற்றிலே பக்தி இலக்கியங்கள் தோற்றம் பெற்றமைக் கான காரணங்கள் பிரதானமானவை. இறைவன் பற்றிய உணர்ச்சி பொங்கி எழுவதற்கான பிரதான காரணம் சைவ வைணவ மதங்களின் எழுச்சியும் அரச ஆதரவும் எனலாம். முன்னைய காலங் களிலே வரையறையற்ற காதல், காமம், வாழ்க்கை நிலையாமையை அளவு கடந்து வற்புறுத்தியமை, உலகியலின் பங்களை இழிவுடன் வெறுத்து ஒதுக் கியமை, துறவை வற்புறுத்தியமை, பெண்களை இழிவுபடுத்தியமை, சமய வாழ்வையும் உலகியல் வாழ்வையும் ஒன்றோடொன்று தொடர்பற்ற இரு துரு வங்களாகக் கொண்டமை, நடைமுறை வாழ்வுக்குப் பொருந்தாத கோட்பாடுகள்

என்பன காரணமாகச் செழுமையும், வளப்பமுமுடைய பக்தி இலக்கியங்கள் தோற்றம்பெற்றன.

சைவாலயங்கள்தோறுஞ் சென்று ஆலய வழிபாட்டினை மேற்கொண்டபோது பக்தி கனிந்த திருப்பாடல்களை இசை யோடு கலந்து வழங்கியதன்மூலம் தமி ழரின் பாரம்பரியக் கலைகள் அழிந்து விடாமல் பேணப்பட்டது. தலமகிமை, பிரதேசமகிமை, அழகு என்பவற்றையும் பொருளாக அமைத்துப்பாடிய உத்தி யானது மக்களது உள்ளங்களில் நிலவும் பிரதேச உணர்வைப் பயன்செய்து ஆலயங்களைப் போற்றவும், பேணவும், வழிபடவும் மனச்சாந்தி பெறவும் வழி செய்தது'. புராண இதிகாசக் கதைகள் பக்திப்பாடல்களில் இணைத்ததன்மூலம் சமய நம்பிக்கையும் சமய அறிவும் வழங் கப்பட்டன.

சங்ககால அகத்திணை மரபு பல்லவர் காலப் பக்திப்பாடல்களில் சிற் சில மாற்றங்களுடன் இடம்பெற்றன. உலகியலின்பம் இறையின்ப பக்திக்கு வழிகோலியது. 'இறைக்காதல்' அன்புடன் வெளிப்படுத்தப்பட்டது. உலகியற் காதல் தெய்வீகக் காதலாகப் பரிணமித்தது. ஆன்மீக வெளிப்பாடு, உணர்ச்சிப் பெருக்கு, எளிமை, இனிமை, ஓசைநயம், யாப்பமைதி, சந்தக்கொழிப்பு என்பன பக்திப்பாடல்களின் சிறப்புக்களாகும். பாடல்கள் பதிகங்களாயமைந்தன. அவை தீக சமயங்களான சமண, பௌத்த மதக் கொள்கைகளையும் அவர்களது போலி வேடங்களையும் தயவுதாட்சண்யமின்றி உக்கிரமாகக் கண்டனஞ் செய்தமை பக்தி இலக்கிய நெறியின் மிகப் பிரதான அம்சமாயிற்று. "நாமார்க்கும் குடியல் லோம் நமனை அஞ்சோம்" என்ற அப்பரது பக்தி வைராக்கியம் சிவனைச் சிக்கெனப்பிடித்து உய்யும் வழியைக் காட்டியது. சைவ இலக்கியங்களே-திருமுறைகளே "அற்புதங்கள்" பல வற்றையும் செய்துள்ளமை பக்தி இலக் கியத்தின் தனித்துவ அம்சம் எனலாம். சென்ற காலத்தின் பழுதிலாத் திறனை விளக்கும் 'பக்தி இலக்கியங்களை' வியந்தும், முயன்றும் பின்பற்றி இன்பமாய் வாழ்வை அமைத்து வளத்துடன் வாழ முயல்வோமாக.

(முற்றும்)

**கயிலைக் காட்சி கண்ட காரைக்கால் அம்மையார்**

சொல்லாட்சி அழகுடன் பக்திச் சுவையும்
சொட்டச் சொட்டப் பதிகம் பாடிக்
கல்லான மனதையும் கனியச் செய்த
காரிகை காரைக் காலம் மைதானே
எல்லாமே வல்ல இறைவனின் அந்த
எழிலுருவம் காணக் கயில யங்கிரி
செல்லாமல் திருவா லங்காட் டினிலே
சென்று கண்ட அம்மை தானே

*கவிஞர் வ. யோகானந்தசிவம் அவர்கள்*

**கண்ணீர் என்பது துயரத்தின் மௌனமொழி.**

உ

# பாத்திரமறிந்து பிச்சைகொடு

**திரு கே.எஸ். சிவஞானராஜா அவர்கள்**



மூர்த்தி, தலம், தீர்த்தம், எளிமை, புதுமை, பழைமை, தானம், சுதந்திரம், அசரீரி, அற்புதம், ஆறுதல், ஆரோக்கியம், ஆசீர்வாதம், மனிதம், புனிதம், பேரின்பம், ஆத்மதிருப்தி, அன்னதானம், மாங்கல்ய விருத்தி, சந்தான விருத்தி, சாஸ்திர விருத்தி, நிம்மதி, சமத்துவம், தன்னை அறிதல், ஆணவமலநீக்கம், தோஷ நிவாரணம், பாவநீக்கம், மன்னிப்பு யாவுமே ஒருங்கேயமையப்பெற்ற திருத்தலமே தொண்டைமானாறு செல்வச்சந்நிதி முருகன் ஆலயமாகும். ஏனைய ஆலயங்களிலும் பார்க்கச் சற்று வித்தியாசமான பேறுடையதாக சந்நிதி விசேடம் பெறுகிறது. இதனாலன்றோ அங்கு ஐம்பது அன்னதான மடங்கள் வரை இருந்ததாக வரலாறுகள் சான்றுபகருகின்றன. அவை அனைத்துமே சந்நிதி முருகநாமத்துடன், தத்தம் அறப்பணிகளை மேற்கொண்டு வந்தன. தற்போது யாவுமே ஆவணங்களாக மிளிர, சந்நிதியான் ஆச்சிரமம் ஒன்றேதான் நேர்த்தியாகவும், சீராகவும் அடியார்களுக்கு ஏற்ற பாத்திரமாகவும், காத்திரமாகவும் செயற்படுகிறது. ஒரு ஆச்சிரம வாழ்வுக்குரிய அத்தனை சிறப்புக்களையும், தகைமைகளையும் தன்னகத்தே கொண்டு, அதனது புனிதம் கெடாது, நிமிர்ந்து செயற்படுகிறது என்றால், அது சந்நிதி முருகனின் திருவருட் கடாட்சமேயாகும்.


இலங்கையில், அறப்பணிகளென்றாலும் சரி, அன்னதானப் பணியென்றாலும் சரி, அறிவுத்தானமென்றாலும் சரி, மருத்துவப் பணியென்றாலும்சரி ஒரு சாதாரண மனிதனாகத் தன்னை வெளிக்காட்டி, சந்நிதியானை முன்னிலைப்படுத்தி, சந்நிதியான் ஆச்சிரமத்தை நிருவகித்து இல்லையென்னாது ஈகின்ற, பாத்திர மறிந்து பணிசெய்கின்ற ஒரு அவதார புருஷரை' முருகன் இவ்வுலகிற்கு அளித்துள்ளான். அவர் விருப்பு வெறுப்பு அற்றவர். மிகவும் எளிமையானவர். நல்லூர் எஜமான்போல எல்லாம் அறிபவர். முருக அம்சமானவர். முருகனைத் திருப்பணிகளால் அலங்கரிப்பவர். இயற்கையோடு சமாந்தரமாகப் பயணிப்பவர். தற்பெருமைக்கு இடமளிக்காதவர். இத்தகு சிறப்பு வாய்ந்தவர்தான் மோகனதாஸ் சுவாமிகள். அவரிடம் சேர்ப்பிக்கின்ற ஒவ்வொரு சதமும் வீண்போவதில்லை. ஏழை வயிற்றுக்கும் வறுமைக்குமே செல்கிறது. வசதியுள்ளவர்களுக்கு வயிறு முட்டக் கொடுப்பதிலும் பார்க்க, வழியற்ற ஏதிலிகளுக்குத் தினமும் உணவூட்டுகின்ற ஓர் அட்சய பாத்திரமாக ஆச்சிரமம் விளங்குகின்றது. இப்பாத்திரம் குறைவுபடாது நிரம்ப ஆவன புரிவீர்களாக.

**பயத்தை வெளிக்காட்டினால் அது அபாயத்தை எதிர்கொண்டு அழைப்பது ஆகும்.**

உ

(தொடர்ச்சி...

# மோகனதாஸ் சுவாமிகளின் வட இந்திய ஸ்தல யாத்திரை



**காலம்: 21.07.2008 திங்கள். இரவு 9.30 மணி**

**இடம்: எழும்பூர் ரயில் நிலையம்.**

எமது பயணக்கட்டுரையின் தலைப் பினைக்கருதி நானும் என்னோடு இணைந்த அனைவரும் தென் மாநிலத்தைவிட்டு வட மாநிலத்தை நோக்கிய எமது பயணத்தின் ஆரம்பக் கட்டமாக 21.07.2008 திங்கள் பகல் பொழுது உடல் அசதிபோக விடுதி யில் தங்கியிருந்து நாம் செல்லும் வட இந்தியத் தலயாத்திரையின்போது எம் மால் மேற்கொள்ளப்படவேண்டிய ஒழுங்கு களை மேற்கொண்டு அன்று இரவு 9.30 மணியளவில் தமிழ்நாடு மாநிலம் விட்டு நீங்கி, பீகார் மாநிலம் புவனேஸ்வர் நோக்கி எமது நீண்ட புகையிரதப் பயணம் சென்னை எழும்பூர் ரயில் நிலையத்திலிருந்து ஆரம்பமானது. இலங்கையிலிருந்து எம்முடன் வட இந்திய யாத்திரைக்காக வந்திருந்த 12 பேருடன் சென்னையிலிருந்து இன்னமும் 5பேர் ஆண்களும் 5பேர் பெண்களுமாக 10பேர் இணைந்து கொண்டனர். இவர் களைவிட சரளமாக ஹிந்தி பேசக்கூடிய 1 வழி காட்டி, தென் இந்திய அரிசிச் சோறும் ஏனைய உணவு வகைகளும் தயாரிப்பதில் கைதேர்ந்த 2 சமையற்காரர் கள், அமைப்பாளர் திரு ஸ்ரீரெங்கநாதன் ஆகியோர் மேலதிகமாக பங்கு கொண்ட னர்.

வழிநெடுகிலும் எமக்குவேண்டிய

**கடவுள் நமக்கு நாக்கைக் கொடுத்திருப்பது இன்சொற்களைக் கூறுவதற்கே.**

சமையற் பாத்திரங்கள், அரிசி முதலான சமையற் சாமான்கள், தனிநபர் பயணப் பைகள் ஆகியவற்றுடன் ரயிலில் ஏறுவது பெரும்பாடாக இருந்தது. பாத்திரங்களை யும், சாமான்களையும் சமையற்காரர் ரயிலில் ஏற்றுவதில் முனைப்புக் காட்டிய அதேவேளை நாம் பயணப்பைகளையும், பெண்களையும் பக்குவமாக (பெரிய தள்ளுமுள்ளுக்கிடையே) ரயிலில் ஏற்றி அவரவர் பதிவு இலக்க இருக்கைகளில் அமர்த்தும்வரை பெரிய பிரளயமே நடந் தேறியது. அப்பாடா! ஒரு விதமாக அவர வர் இடங்களில் அமர்ந்துகொண்ட சற்று நேரத்தில் நீண்ட விசில்ச் சத்தத்துடன் ரயில் புறப்பட்டது.

**காலம்: 22.07.2008 செவ்வாய் இரவு 8.30மணி**

**இடம்: தொடர் புகையிரத பயணம்.**

தொடர்ந்து 33 மணிநேர ரயில்ப் பயணம். புவனேஸ்வர் செல்லும் பயணம் மழையினாலும், மழையினால் ஏற்பட்ட வெள்ளத்தினாலும் ஓரளவிற்குமேல் பயணத்தைத் தொடரமுடியாத நிலையில், ரயில் திரும்பி ஒரு குறிப்பிட்ட தூரம்வரை வந்து, ஒரு சுற்றுப் பாதையில் பயணத் தைத் தொடர்ந்ததால் ரயில்ப் பயணத்தில் இவ்வளவு தாமதம் ஏற்பட்டது. சென்னை யிலிருந்து தயார்செய்து கொண்டுவந்த புளியோதரைச் சாதம் பயணம் முழுவதும் வயிற்றுப் பசியைப் போக்கியது. அத் துடன், ரயிலில் நாம் அடிக்கடி தேநீர் (அவர்கள் பாஷையில் "சாயா") வாங்கி அருந்திக் கொண்டோம். வாழைப்பழமும், ஏனைய சில பழவகைகளும் ரயிலில் தாராளமாகக் கிடைத்ததால் அவரவர் விருப்பத்திற்கு ஏற்றபடி பழங்களை வாங் கிப் பரிமாறிக்கொண்டனர். "பூரி" போன்ற எண்ணைவகையிலான சாப்பாடுகளைப் பொதுவாக ரயில்ப்பயண வேளைகளில் தவிர்த்துக்கொண்டோம். 22.07.2008 இரவு 8.30க்கு புவனேஸ்வர் வந்து சேர்ந்து விடுதிகளில் தங்கினோம். பொதுவாகவே விடுதிகளில் தங்கவேண்டிய வேளை களில் ஆண்கள் இருவர் அல்லது மூவருக்காக ஒவ்வொரு அறையும், பெண் களுக்கு விசேடமான தங்குமிட வசதி களும் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தன.

**காலம்: 23.07.2008 புதன். காலை 11.00 மணி**

**இடம்: புவனேஸ்வர்.**

காலைக் கடமைகளை முடித்துக் கொண்டு 11.00 மணிக்கு பூரி ஜெகந்நாதர் ஆலய தரிசனத்திற்காகப் புறப்பட்டோம். ஸ்ரீ புருஷோத்தம் (ஜகன்னாத்) சேத்திரம் ஒரிஷா மாநிலத்தின் கடற்கரைக்கு அண் மித்ததாக, வளைந்து வளைந்து செல் கின்ற வைதரணி நதிக்கு நடுவில் இக் கோயில் அமைந்துள்ளது. தென்கிழக்கு ரயில்வேயின் புகழ்பெற்ற ஸ்ரீ புருஷோத் தம் ரயில் நிலையத்திலிருந்து 2கி.மீ தூரத்தில் இந்தப் புண்ணிய ஸ்தலம் உள்ளது. ரிக்ஷா வண்டி அல்லது குதிரை வண்டி அல்லது மோட்டார் காரில் கோயிலை அடையலாம்.

ஒரிஷா மாநிலத்தின் முத்திரை யாக அமைந்துள்ள கோபுர அமைப்பு

இங்கும் உண்டு. மொத்தமான உருண்டை வடிவ அமைப்பும், வரிச் செதுக்கல்களும் அந்த மாநில கட்டிட அமைப்புக்கே உரித்தான அற்புதமான கைவண்ணம் "புருஷோத்தபுரி" என்றும் "ஜகந்நாதபுரி" என்றும் அழைக்கப்பட்டு வந்த இத்திருத் தலம், காலப்போக்கில் "பூரி" என்றாகி விட்டது.

ஜெகந்நாதர் ஆலயத்தின் உச்சியில் உள்ள சக்கரம் "நீலச்சக்ரா" என்றழைக்கப்படுகிறது. இதன் உயரம் 214அடி. நான்கு புறமும் நான்கு வாசல்கள் கொண்டது இந்த ஆலயம். இவ்வாலயத்தின் நடுநாயகமாக அமைந் திருப்பது "ஸ்ரீமந்திர்" எனப்படுகின்ற ஜகந் நாதரின் (கிருஷ்ணரின்) சந்நிதி.

வருடத்தின் 12 மாதங்களிலும் 12விதமான மாறுபட்ட உற்சவங்கள் நடை பெறும் இடம் இது. ஸ்ரீநாராயணமூர்த்தி சர்வ அலங்காரங்களுடன் பக்தர்களுக்கு அருள் பாலிக்கிறார். ஸ்ரீ பகவானுக்கு முன்பாக ஒரு தனிச் சந்நிதியில் "கால் விலங்கு ஹனுமான்" காணப்படுகிறார். திடீரென ஒருநாள் அனுமதியில்லாமல் ஹனுமான் அயோத்தி போய்விட்டதால் அவருக்கு கால் விலங்கு போடப்பட்டதாக ஸ்தல புராணம் கூறுகிறது.

சுமார் 800 ஆண்டுகளுக்கு முன் னர் கட்டப்பட்ட ஜகந்நாதர் ஆலயம் சிவன், விஷ்ணு, பிரம்மா, சக்தி என எல்லாத் தெய்வ உருவங்களையும் கொண்டவராக பக்தர்கள் வழிபடுகிறார் கள். மூலவிக்கிரகம் அமைந்துள்ள இடத்தைச் சுற்றியுள்ள குறுகலான பாதை யில் ஒருவரின் பின் ஒருவராகச் சென்று வழிபட வேண்டும். சாதாரணமாக நாம் மற்றக்கோயில்களில் பார்க்கக்கூடிய பட்டுத்துணி அலங்காரங்கள், நகை சோடனைகள் போன்றவை இங்கில்லை. இங்கு மரக்கட்டைகளாலான உருவ அமைப்புக்களே காணப்படுகின்றன. இவையே ஆலயம் முழுவதும் உள்ள மூலவிக்கிரகங்களாகவும் காணப்படு கின்றன. ஆண்டுதோறும் ஒரு கோடி மக்கள் வந்து தரிசித்துச் செல்கின்ற இடம் என்பதைச் சிந்திக்க மெய் சிலிர்க்கிறது. விஷ்ணு ஆலயமாக இருந்தபோதும், இங்கு சிவராத்திரியை கொண்டாடும் முறை சைவ- வைணவ ஒற்றுமைக்கு ஒரு முத்திரையாக அமைகிறது.

ஒருநாளைக்கு காலையிலிருந்து மாலைவரை பத்தாயிரம்பேர் வரைக்கும் கோயிலில் உணவு வழங்கப்படுகிறது பண்டிகைக் காலமாக இருந்தால் இந்த எண்ணிக்கை ஒரு இலட்சத்தைத் தாண் டும். கோயில் நைவேத்தியம் வெளியில் விலைக்குக் கிடைக்கும். அதனால் பூரிக்கு வரும் யாத்திரிகர்கள் பலரும் ருசியான உணவுக்கு இதை நம்பியே வருகிறார்கள்.

ஆலய தரிசனத்தின்பின் கோன் ராக் சந்திரபாகு கடற்கரையைப் பார்க்கப் புறப்பட்டோம். அழகான நீண்ட கடற்கரை யும், உடலைத் தழுவிச் செல்லும் தென் றற் காற்றும் களைத்துப் போயிருந்த எமக்கு புத்தூக்கத்தைத் தந்தது. ஸ்ரீ ஜெகந்நாதர் ஆலயத்திலிருந்து 3 கி.மீ தூரத்தில் இருக்கிறது ஸ்ரீ லிங்கேஸ்வரர் ஆலயம். லிங்க வடிவில் இறைவனின் தரிசனம் கண்டு உள்ளம் நிறைந்தது. மனம் ஆறுதலடைந்தது.

அடுத்து, அசோகச் சக்கரவர்த்தி பெயரில் அமைக்கப்பட்டுள்ள மிகப் பிரம்

**துன்பத்தை எதிர்க்கத் துணியாதவன் வாழ்க்கையில் தோல்வியே அடைவான்.**

மாண்டமான ஒரு நூதனசாலையைப் பார்க்க முடிந்தது. அசோகச் சக்கரவர்த்தி பயன்படுத்திய அத்தனை பொருட்களும் காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தமையைப் பார்த்து வியந்து நின்றோம். அவரது தலைக்கிரீடம், மார்புக்கவசம், இடுப்புப் பட்டி, வீரவாள் என்பன போன்ற உடமை களும் இன்னும் பலவும் அந்த நூதன சாலையில் காணப்பட்டன.

(தொடரும்...

## கேள்வி ~ பதில்

**கோயிலுக்கு வெளியே அமர்ந்து பிச்சை எடுப்பவர்களுக்கு, தெய்வவழிபாடு முடிந்த பின்புதான் தானம் செய்யவேண்டுமா?**

கோயிலுக்கு செல்லவேண்டும் என்று தீர்மானித்தால், கடவுளைப்பற்றிய சிந்தனையில் மூழ்கியிருப்போம். அப்போது வேறெந்த அலுவலிலும் ஈடுபடுவது முறையில்லை.

கடவுளிடம் பக்தி வேண்டும். செயற்பாட்டில் பற்று வேண்டும். கடவுளை நினைக்கும் மனம் வேறொன்றில் திருப்பிவிடப்பட்டால், கடவுள் வழிபாடு சிறக்காது. ஏழைகளுக்குத் தானம் அளிப்பது சமூகதர்மம். அதை எப்போது வேண்டுமானாலும் செய்யலாம்.

கடவுள் வழிபாட்டுக்கு குறிப்பிட்ட நேரம் உண்டு. ஆகையால், கடவுளை வழிபட்டபின் தானம் செய்யவும். தங்கள் சிந்தனைக்கு ஒரு வார்த்தை. ஒரு கோணத்தில் பார்த்தால் கோயில்முன் அமர்ந்திருக்கும் பிச்சை எடுப்பவர்களை நாம்தான் மறைமுகமாக ஊக்குவிக்கிறோம். நமது நல்லெண்ணத்தை அவர்கள் பயன்படுத்திக்கொள்கிறார்கள்.

பிச்சை எடுப்பது என்பது இழுக்கு. ஆனால் வேறுவழியின்றி அதில் தள்ளப்பட்டவர்களுக்கு உதவுவது நல்லதே. ஆனால், நமது கடமைகளில் ஒன்றாகக் கருதி அதை எப்பொழுதும் வளர்க்கக்கூடாது.

கல்யாணம் மற்றும் சடங்குகள் போன்றவற்றில் கடமை முடிந்த பிறகு பந்தி வைக்கிறோம். பூஜை முடிந்த பின்னர் சுண்டல் விநியோகிக்கிறோம். வெற்றிலை, பாக்கு வழங்குகிறோம். தெய்வ வழிபாட்டோடு இணையாத எந்தச் சடங்கையும் நமது பண்பாட்டில் காணமுடியாது. கடமையை ஆற்றிய பிறகு கொடை என்பது பொருத்தம்.

**மனச்சாட்சியை மதிக்காதவனை எந்த விசயத்திலும் நம்பமுடியாது.**

உ

# வேண்டுதல்கள்

திருமதி யோகேஸ்வரி சிவப்பிரகாசம் அவர்கள்

அபிராமியன்னைமீது அதீத பக்தி கொண்டவர் அபிராமிப்பட்டர். அன்னை தன் பக்தனைக் காப்பதற்காக அமாவாசைத் தினத்தையே பூரணை நாளாக்கிக் காட்டிய கதை நாமெல்லோரும் அறிந்ததே. அவர் பாடிய அபிராமியம்மைப் பதிகத்தில் பக்திபூர்வமாக அவர் செய்யும் வேண்டுதல்கள் பாடிப்பாடிச் சுவைக்க வேண்டியவை. அவற்றுள் "மிகையுந்துரத்த வெம்பிணியுந் துரத்த" என ஆரம்பிக்கும் பாடல், கலைக்கக் கலைக்க களைக்கக் களைக்க நாம் ஓடுவதை உணரும்போதெல்லாம் எனது உள்ளத்தினுள் நிற்கும். அப்பாடலிலே

**நாவரண்டோழக் கால் தளர்ந்திடும் என்னை**
**நமனும் துரத்துவானோ?**

என அவர் கேட்பார். அதற்கு முதற்பாடலிலே அவர் அபிராமியன்னையிடம்

**மாகோர காலன் வரும்போது தமியேன்**
**மனங்கலங் கித்தி யங்கும்**
**அப்போது வந்துன் அருட்போது தந்தருள்**

என நமன் துரத்தும் நேரத்தில் வந்துதவுமாறு ஒரு வேண்டுதலும் செய்துள்ளார்.

பெரும்பாலான அடியவர்கள் இவ்வாறு ஒரு பாடலில் ஒரு வேண்டுதலைச் செய்வதுதான் வழமை. ஆனால் ஒருசிலர் ஒரே பாடலில் பலவற்றை ஒருசேர வேண்டி நிற்பதையுங் காணலாம். அந்த ஒரு சிலருள் அபிராமிப்பட்டரும் ஒருவர். அபிராமியம்மைப் பதிகப் பாடல்களில் அவர் அவ்வாறு வேண்டியுள்ளார். அப்படி வேண்டும்பொழுதும் வெவ்வேறு யுக்திகளையும் கையாண்டுள்ளார்.

ஒரு பாடலில் தனக்கு வேண்டாதவற்றையெல்லாம் வரிசைப்படுத்தி அவற்றைத் தனக்கு வேண்டாம் எனக்கேட்டுள்ளார்.

**வஞ்சகக் கொடியோர்கள் நட்புவேண் டாமலும்**
**மருந்தினுக் காவேண் டினும்**
**மறந்துமோர் பொய்ம்மொழி சொல்லாமலுந் தீமையாம்**
**வழியினிற் செல்லா மலும்**
**விஞ்சுநெஞ் சதனிற் பொறாமைதரி யாமலும்**
**வீண்வம்பு புரியா மலும்**
**மிக்கபெரி யோர்கள்சொலும் வார்த்தைதள் ளாமலும்**
**வெகுளியவை கொள்ளா மலும்**
**தஞ்சமென நினை[து] உபய கஞ்சந்து தித்திடத்**
**சர்வகா லமுமெனைக் காத்தருள வேண்டினேன்**

தீமை இலகுவாக வியாபிக்கும். ஒரு துளியளவு இருக்கும் விடத்தைக்கூட ஒரு குடம் பால் நல்லதாக மாற்றும் திறனற்று, அத்துளி கலந்ததும் நஞ்சாகிவிடுகிறது. தீயவரின் நட்பும் இவ்வாறே நல்லோரைக் கெடுத்துவிடும். ஆகவே தீய நட்பு வேண்டாமென்று விட்டார்.

'நன்மையின் பொருட்டுப் பொய் கூறலாம்' என்று கூறுவோரும் உள்ளனர். ஆனால் பட்டர்பிரானோ மருந்துக்காகவேனும் மறந்துகூடப் பொய் கூறக்கூடாதெனக் கேட்டுள்ளார்.

தீயவழியிலே செல்லக்கூடாது. பொறாமைப்படக்கூடாது. வம்பு செய்யக்கூடாது. பெரியோர் சொல்லைத் தட்டக்கூடாது. கோபப்படக்கூடாது.

இவ்வாறு கூடாதவற்றையெல்லாங் கூறி அவற்றை வேண்டாம் என வேண்டியவர் மற்றொன்றையும் வேண்டினார். இறைவனை வணங்குவதில் நாட்டமேற்பட அவனுடைய அருள் வேண்டும். அதனால் "உனது இரு தாமரை மலர்ப்பாதங்களையும் தஞ்சமென்று துதித்திட எப்பொழுதும் என்னைக் காத்தருள வேண்டும்" எனவும் வேண்டுதல் செய்தார்.

சபையிலே இருந்து உணவருந்தும்போது, தனக்குத் தேவையானவற்றைத் தனது இலைக்குப் பரிமாறும்படி கேட்காது பக்கத்திலிருப்பவரின் இலைக்குப் பரிமாறும்படி கேட்பது ஒரு வழமை. பின்வரும் பட்டரின் பாடல் இந்தவகையான வேண்டுதல் போன்று தோன்றுகிறது.

**சகலசெல் வங்களுந் தரும் இமய கிரிராச**
**தனயைமா தேவி! நின்னைச்**
**சத்யமாய் நித்யமுள் ளத்தில்து திக்குமுத்**
**தமருக்கு இரங்கி மிகவும்**
**அகிலமதில் நோயின்மை கல்விதன தானியம்**
**அழகுபுகழ் பெருமை இளமை**
**அறிவுசந் தானம்வலி துணிவுவாழ் நாள்வெற்றி**
**ஆகுநல் லூழ்நு கர்ச்சி**
**தொகைதரும் பதினாறுபேறும்தந் தருளிநீ**
**சுகானந்த வாழ் வளிப்பாய்**

என்ற பாடலில் தொடர்ந்து அன்னையைப் பலவாறு போற்றும் அவர் பாடலின் ஆரம்பத்திலேயே "சகல செல்வங்களும் தரும் தேவி" என ஏற்றவகையில் புகழ்ந்து அழைத்து "உன்னைத் தினமும் உள்ளத்திலே உண்மையாக வணங்கும் உத்தமருக்கு மிகவும் இரங்கி, பதினாறுபேறும் அருளி, சுகானந்த வாழ்வளிப்பாய்" எனப் பாடியுள்ளார். 'பதினாறும் பெற்று பெருவாழ்வு வாழ்க" என வாழ்த்தும்போது குறிக்கும் பேறுகளை இதில் அவர் வரிசையாகக் கூறியுள்ளார்.

இப்பாடல் "உன்னை வழிபடுகின்றவர்களுக்குப் பதினாறு பேறும் அருள்வாய். நானும் உன்னை உண்மையாக வணங்குபவன் எனவே எனக்கும் இவற்றை நீ அளிப்பாய்" எனக்கூறுவதுபோன்று அமைந்துள்ளது. பார்த்ததும் அம்மையைப் போற்றும்

**சோம்பலைத் தடுக்க வேண்டுமானால் அதிகமாக உண்பதைத் தவிர்க்க வேண்டும்.**

பாடல்போலத் தோன்றினாலும் இதுவும் ஒரு வேண்டுதலே.

**கலையாத கல்வியும் குறையாத வயதுமோர்**
**கபடுவா ராத நட்பும்**
**கன்றாத வளமையுங் குன்றாத இளமையும்**
**கழிபிணியி லாத உடலும்**
**சலியாத மனமும்அன் பகலாத மனைவியும்**
**தவறாத சந்தானமும்**
**தாழாத கீர்த்தியும் மாறாத வார்த்தையும்**
**தடைகள்வா ராத கொடையும்**
**தொலையாத நிதியமும் கோணாத கோலுமொரு**
**துன்பமில் லாத வாழ்வும்**
**துய்யநின் பாதத்தில் அன்பும்உத விப்பெரிய**
**தொண்டரொடு கூட்டு கண்டாய்**

என்ற பாடலில் நேரடியாகவே வேண்டியவற்றை நிரலிட்டு வேண்டியுள்ளார்.

நாம் ஒன்றைக்கேட்டு வரமாகப் பெற்றபின் அதில் குறையிருந்தால் பயனற்றுப்போய்விடும். எனவே அக்குறையற்றதாக வரங்கேட்டார் பட்டர்பிரான்.

கல்வியைக் கற்றபின் அதனைப் போற்றி வைத்திருப்போர் நம்முள் எத்தனைபேர்? சிந்தித்துப் பாருங்கள். கற்றதைச் சிலையில் எழுத்தாக நிலைத்திருக்க வைத்து அது கலையாது காப்பாற்றி வந்திருக்கிறீர்களா? பெரும்பாலோர் அதை மறந்து ஏதேதோ செய்துகொண்டிருக்கிறோம். பட்டரோ கலையாத கல்வியை வேண்டுகிறார். வயது ஒவ்வொன்றாய் குறைகிறதே. குறையும் வயதை வரமாகப் பெற்று என்ன பயன்?

முன்னைய பாடலில் வஞ்சகக் கொடியோரின் நட்பு வேண்டாமென்றார். இப்பாடலில் கபடுவாராத நட்பு வேண்டுமென்கிறார். நட்பின் நடுவே கபடம் வந்து கவ்விக்கொள்வதுமுண்டு. பல்கலைக்கழகத்திற்குச் செல்லும்போது நல்ல நண்பர்களாகச் சென்றவர்கள், மற்றவரைவிடச் சிறந்த பெறுபேறு பெறவேண்டுமென்னும் போட்டி வந்ததும் அந்த நட்பினுள் கபடம் புகுந்துவிட நட்பை மறந்துவிடுகின்றனர். பணியகத்தில் நல்ல நண்பர்களாக இருந்தவர்கள் பதவி உயர்வு பெறுவதற்காக அந்த நட்பைப் பறக்கவிட்டு விடுகின்றனர். இத்தகையதாக இல்லாது நின்று நிலைக்கத்தக்க நட்பையே வரமாகப் பெறவேண்டும்.

இவ்வாறு கேட்கும் ஒவ்வொன்றிலும் வரக்கூடிய குறையைத் தவிர்த்து அவ்வரத்தைக் கேட்கும் சிறப்பை இப்பாடலிலே காணலாம். ஒரு சுகானந்தப் பெருவாழ்வு வாழ்வதற்கு வேண்டிய அனைத்தையும் ஒரே பாடலிலே அபிராமிப்பட்டர் வேண்டிப் பாடியுள்ளார். தன் வேண்டுதல்களைத் தெரிவிப்பதற்கு வெவ்வேறு வழிவகைகளையும் கையாண்டுள்ளார். எனினும் அவரது மூன்று வேண்டுதல்களும் உள்ளுர ஒரே வகையானவையே.

**முயற்சியால் கிடைக்கும் பயனே இன்பங்கள் அனைத்திலும் மிக இன்பமானது.**

உ

(தொடர்ச்சி...

# இந்துசமயத்தில் பெண்கள்

**செல்வி S.K. சிந்துரா (கிழக்குப் பல்கலைக்கழகம்)**

இந்துசமய இலக்கியங்கள் பெண்கள் ஆற்றிய பங்களிப்புக்களை விபரிக்கின்றன. அந்த வரிசையில் இல்வாழ்விலே வீட்டிலிருந்து பெண்கள் ஆற்றும் அறச்செயல்கள் யாவையென,

கம்பராமாயணத்தில் சீதாப்பிராட்டி வாயிலாக;

**"அருந்தும் மெல்லடகு ஆரிட அருந்தும் என்றழுங்கும்**
**விருந்து கண்டபோது என்னுறுமோ என விம்மும்**
**மருந்தும் உண்டு கொல்யான் கொண்ட நோய்க்கு"**

எனக் கூறுகின்றது.

இன்றைய நிலையில் இரு பாலாரும் வேலைக்குச் சென்று திரும்பும் அவசர வாழ்வில் இந்த அறநெறிகள் எவ்வாறு இல்லங்களிற் பேணப்படுகின்றன? பேண நேரம் கிடைக்குமா என்ற பிரச்சினைகளையும் எதிர்கொள்ள வேண்டி உள்ளது. ஆனாலும் இப்பண்புகள் அன்று இல்லத்தில் ஒளிவிட்டதுபோன்று தொழில் புரியும் பெண்கள் இன்று தமது அறப் பணிகளை சமூகப்பணிகள் வரை விரிவு படுத்தியிருப்பது அவர்களின் அறவாழ்வு பணிகளின் தொடர்ச்சிக்கு ஒரு எடுத்துக் காட்டாகின்றது எனலாம்.

துறவு நெறியில் அறம்பேணும் பெண்களையும் சமயவழிநின்று கடமைகளை ஆற்றி, கணவனையும், குழந்தைகளையும்கூட அறவாழ்வில் ஒன்றி நிற்கச் செய்த பெண்களையும் நமது இந்துசமய இலக்கியங்கள் ஊடாகக் காணலாம். எடுத்துக்காட்டாக; சைவ நாயன்மார் அறுபத்துமூவரில் ஒருவரான காரைக்கால் அம்மையார் "தென்னிந்திய இசையின் தாய்" என புகழப்படுபவர். இவர் நாயன் மார்கட்கு முன்பே சைவ உலகிற்கு பக்தி இலக்கியத்தை ஆக்கித் தந்தவர்.

இளமையிலே திருமணமாகி துறவு பூண்டவர் காரைக்கால் அம்மையார். திருமணமாகாமலே இளமையில் துறவுக்கோலம் கொண்டவர் திலகவதியார். பிறருக்காக தன் அன்பையும், சேவையையும், தன் சுகத்தையுமே வழங்குவது பெண்மையின் இயல்பு என்பதனை இப்பெண்மணியின் வாழ்வு அறிவிக்கின்றது. அறநெறியும் சமய உணர்வும் தன்னோடு நின்றுவிடாது காலம் காலமாகத் தொடரவேண்டுமென எண்ணித் தனது சகோதரருக்காக உயிர் சுமந்து வாழ்ந்த மங்கையர் திலகமாக விளங்குகிறார்.

அடுத்து சோழர் காலத்தில் கணவரின் வெறுப்பிற்கு ஆளாகாமல்த் தான் பேணிக்காத்த சைவநெறி தன்னோடு மாத்திரமன்றி தனது நாட்டிலும் அந்த அறநெறி செழித்து வளரவேண்டுமெனப் பணிசெய்தவர் மங்கையர்க்கரசியார். மற்றும் அரசகுலப் பெண்களில் சோழர்கால அரண்மனை அரசிகளும் ஆலயப்பணிகளிலும் பொதுப்பணிகளிலும் அறப்

பணிகளிலும் ஈடுபட்டிருந்தமையினை அக்காலக் கல்வெட்டுக்கள் காட்டுகின்றன. வானவன்மாதேவி, குந்தவை நாச்சியார், வீரமாதேவி போன்றவர்கள் குறிப்பிடத் தக்கவர்கள்.

மேலும் பெரியபுராணத்தில்; திரு நீலகண்டரின் மனைவி களவொழுக்கத் திற் சென்ற கணவனைத் திருத்தியது மட்டுமல்ல, "எம்மைத் தீண்டுவீராகில் திரு நீலகண்டம்" என்று தன்னை மட்டுமல்ல தன்போன்ற பெண்களையும் சேர்த்துச் செய்த சத்தியம் பெண்மையின் அற ஒழுக்கத்தை வளர்க்கக் காரணமானது. சிறுத்தொண்டர் மனைவி பெற்ற மகனைத் தியாகம் செய்த பண்பு வியக்கத்தக்கது. இவ்வாறாக சைவப் பெண்களின் தியாக மும் பக்தியும் தான் அவர்களின் புகழினை இன்றுவரை நிலைபெறச் செய்துள்ளன.

அடுத்து விருந்தோம்பல் என்னும் அறப்பண்பினை பேணுவதற்காக பெண் கள் செய்த தியாகங்கள் அனேகம். தாலியைக்கொடுத்து நெல்வாங்கிய குங்குலியக்கலய நாயனார் மனைவி, பஞ்சவடிப்பூணூலிற்காக தனது கூந்தலை அரிந்து அளித்த மானக்கஞ்சாறர் மகளின் தியாகம்...... என அடுக்கிக்கொண்டே போகலாம்.

இப்படியாகக் கல்வியாலும் ஒழுக் கத்தாலும் தியாகத்தாலும் சைவப் பண்பாட்டு அம்சங்களைப்பேணி வளர்த்த மங்கையர் வரலாறுகள் இன்றைய பெண் குலத்தவர்கட்கு முன்மாதிரியானவை.

மேற்கூறப்பட்டவாறு நாம் அன்றைய காலப் பெண்கள் இந்துமதத்திற்கு ஆற்றிய பங்களிப்புக்களை இந்துமத இலக்கியங்களை அடிப்படையாகக் கொண்டு நோக்கினோம்.

அடுத்து 19ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியிலிருந்து இன்றுவரை பெண் களின் பங்களிப்புக்கள் இந்து சமயத்தில் எவ்வாறு செல்வாக்குச் செலுத்துகின்றது என சுருக்கமாக பார்ப்போமாயின்;

**"மங்கையராகப் பிறப்பதற்கே நல்ல**
**மாதவம் செய்திட வேண்டுமம்மா– அவர்**
**பங்கயக் கைநலம் பார்த்தல்லவோ**
**பாரில் அறங்கள் வளருதம்மா"**

என்றார் கவிமணி தேசியவிநாயகம் பிள்ளை.

இந்துமதம் காலத்தின் மாற்றங் களிற்கும், அறிவு வளர்ச்சிக்கும் ஏற்ப பற்பல ஞானியரைத் தோற்றுவித்து தன்னைத்தானே புதுப்பித்துக்கொள்வது ஒவ்வொரு வரலாற்றுக் கால கட்டங்களி லும் நிகழ்ந்துவரும் உண்மையாகும். சமுதாயத்தில் மாற்றங்கள், சிந்தனைகள், மாறுபடும்போது வாழ்க்கை நிலைகளிலும் மாற்றங்கள் ஏற்படுகின்றன. பெண்கள் வாழ்விலும் காலநிலைக்கேற்ப பல மாற் றங்கள் ஏற்படுவது தவிர்க்கமுடியாதது. இந்துமதம் பெண்களிற்கு வழங்கியுள்ள உரிமைகளைச் சரியாகப் புரிந்து கொள் ளாதும், அவற்றினை அறியாதும் இருந்த காரணத்தினால்த்தான் அன்னிய மதச் செல்வாக்கிற்கும் நாகரிகத்திற்கும் உட்

பட்டு இந்துப் பெண்கள் தடுமாறும்நிலை ஏற்படுகின்றது.

இந்துமதம் பெண்களிற்கு வழங்கிய உயர்வினையும், மேன்மையினையும் மீளாய்வு செய்து அவற்றினை நிலை பெறச் செய்தனர் நவீனமத சீர்திருத்த வாதிகள். அவர்களில் இராஜராம் மோகன் ராய், தயானந்த சரஸ்வதி, ஸ்ரீ இராம கிருஷ்ண பரமஹம்சர், சுவாமி விவேகானந்தர் போன்றோர் பெண்களின் அறவாழ்வுப் பணிகளையும், சேவைகளையும் மீண்டும் நிலைபெறச் செய்வதில் பெரும் பங்காற்றினர்.

அன்றைய காலம் முதல் இன்றுவரை பெண்களின் வலிமையைக் குறைத்து மதிப்பீடு செய்வதற்கும் அவர்களைப் பழிவாங்குவதற்கும் ஆடவர்களிடம் உள்ள ஒரே ஒரு ஆயுதம் பெண்களின் தூய்மையை (கற்பினை) அழிப்பது தான் என்றே பலரும் நினைத்து வந்துள்ளனர். ஆனால் அது தவறு. இதனை மகாத்மாகாந்தி;

"பெண்கள் பலவீனமானவர்கள் என்று நினைப்பது பெண்கட்கு ஆண்கள் இழைக்கும் அநீதியாகும். பலம் என்பதை மிருகத்தனமான பலம் எனக்கருதினால் ஆண்களைவிட பெண்கள் இத்தகைய பலம் குறைந்தவர்கள்தான். ஆனால் பெண்களின் பலத்தை அறநெறியாக ஆன்மீக சக்தியாகக் கருதினால் ஆண்களைவிடப் பெண்களே மேலானவர்கள்" என்றார்.

அடுத்து பாரதிகண்ட பெண்மையை எடுத்துக்கொண்டால் நற்குடிப் பெண்களின் நாணத்தோடுகூடிய நல்லறம், வீரம், சுதந்திரம் இவையே பெண்கட்கான அணிகலன்கள் என்றார்.

**"ஞான நல்லறம் வீர சுதந்திரம் பேணுநற்குடிப்
பெண்ணின் குணங்களாம்"**

என்பதே பாரதியின் அறிவுரையாகும். நல்ல உயர்ந்த பண்பொழுக்கத்தையும் அறவாழ்வினையும் கொண்ட பெண்களால் மாண்புயர் மக்களையும் பெற்றுத்தர முடியும். நிலம் பண்புடையதாக இருந்தால் அதில் விளையும் பயிர்களும் செழித்து வளர்வதுபோல ஞானமும் கல்வியறிவும், வீரமும் நல்ஒழுக்கமும் உள்ள பெண்களால் விஞ்ஞானிகளை மட்டுமன்றி மெய்ஞானிகளையும் சித்தர்களையும் இந்த உலகிற்கு அளிக்கமுடியும்.

அடுத்து பிற்பட்ட காலத்திலும் சில பெண்மணிகள் உயர்வான அறப்பணிகளை ஆற்றி முத்திரை பதித்துச் சென்றுள்ளனர். தமிழகத்தில் தூய அன்னை சாரதாதேவியார், அன்னை கஸ்தூரிபாய் போன்றவர்களும் யாழ்ப்பாணத்தில் சீமாட்டி லீலாவதி அம்மையார், சுன்னாகம் செல்லாச்சி அம்மையார் போன்றவர்கள் குறிப்பிடத்தக்கவர்கள்.

குறிப்பாக யாழ்ப்பாணத்தில் சிவத்தமிழ்ச் செல்வி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி அம்மையார்; சிறுவர் இல்லம், முதியோர் இல்லம், கல்விப்பணியில் சைவ சித்தாந்த ஆய்வு நூலகம், அறக்கொடை நிதியம் எனத் தனது அறப்பணிகளை பன்முகப் பரிமாணத்தில் வளர்த்துச் சென்றவர் ஆவார்.

இன்றைய நிலையில் பெண்கள்

இந்துப் பாரம்பரியத்தைப் பேணுமுகமாகத் தமது நடை உடை பாவனையில் தமது பண்பாட்டை பிரதிபலிக்கும் வகையில் வாழவேண்டும். அடக்கம் என்பதனை அடிமைத்தனம் எனத் தவறாகக் கருதக் கூடாது. அலங்காரம் செய்வதில் தவறில்லை. அலங்காரம் என்று நினைப் பது சிலவேளைகளில் அலங்கோலமாக வும் ஆகிவிடுகின்றது. அதுமட்டுமன்றி ஆணுக்குப் பெண் சமமாக இன்று அறி வியல் முதல் அனைத்துத் துறைகளிலும் பெண்கள் பணியாற்றுகின்றனர். பெண்கள் இன்று கல்வியாளர்களாக, காவல்த்துறை அதிகாரிகளாக, விமான ஓட்டுநராக, மருத் துவர்களாக, நாட்டினை ஆள்பவர்களாக.... ஆண்கட்கு சமமாகப் பணிபுரிந்து தலைமையேற்று நடத்தும் அளவிற்கு முன்னேறிவிட்டனர்.

ஆனாலும் இவற்றினால் பெண் களிற்கு உள்ள பிரச்சினைகள் தீர்ந்து விட்டதா? வெளிவாழ்வில் பொருள்வளத் தில் முன்னேறியவர்கள் பலரும் அக வாழ்வில் பல வழிகளில் துன்பப்பட்டுத் தவிக்கின்றனர். ஆணுக்குப் பெண் சமம் ஆவதால் பிரச்சினைகள் தீர்ந்து விடு வதில்லை. ஆண்கள் தமது அதிகாரப் போக்கினால் பெண்களை துன்புறுத்து கின்றனர். ஆனால் இதனை தவிர்க்க முடியாது. இதற்காக ஆண்களைப் பகைத்தால் பெண்ணின் பெருமை உயர்ந்து விடுவதில்லை.

எனவே ஆண்- பெண் எனும் பேதங்களைக் கடந்து "மனிதம்" எனும் உயர் ஆன்மீக நேயத்துடன் வாழக்கற்றுக் கொண்டால் பிரச்சினைகள் அன்பினாலும் சேவையினாலும் தீர்ந்துவிடும். ஒவ்வொரு வரும் தமது எண்ணம், சொல், செயல் என்பவற்றில் கவனமாக இருக்கவேண்டும்.

இவற்றைத் தொகுத்து நோக்கும் போது, இந்துசமயப் பெண்கள் ஒழுக்கத் திலும், அறவாழ்விலும், ஆன்மீகத்திலும் தமது சொந்தப்பண்பாட்டில் காலூன்றி நிற்பதுடன் பிறருக்கும் அதனைப் பகிர்ந்து அன்பிலும், அறத்திலும் நிலைபெறுவதே உயர்வான பெண்மணிகள் வாழ்விலிருந்து நாம் கற்றுக்கொள்ளும் பாடமாகும். எனவே இன்றைய இந்துமதப் பெண்கள் ஒவ்வொருவரும் நம் முன்னோர் வாழ்ந்த வழிநின்று, வீடும் சமூகமும் நாடும் பெருமையடைய அறப்பணிகளை ஆற்றவேண்டும்.

(முற்றும்)

## அங்கையில் வேலேந்தி வருக

கிண்கிணி சதங்கை ஒலித்திட வருக
தண்கழல் சிலம்பு அலம்பிட வருக
கண்ணெதிர் கடம்பு விளங்கிட வருக
சந்த மகுடங்கள் ஒளிந்திட வருக
கொங்கு குறமங்கை குலவிட வருக
பொங்கு முகத் தாமரை பொலிந்திட வருக
கஞ்சமலர் செங்கை காட்டி வருக
தஞ்சமென்ற அடியார் தாங்கிட வருக
அஞ்சேல் என்றருள்புரி சந்நிதியானே
அங்கையில் வேலேந்தி வருகவே.

*கா. கார்த்திகேசு*

**ஒருவரிடம் இல்லாத குணங்களை அவரிடம் இருப்பதாகச் சொல்லிப் புகழாதே.**

உ

# தொண்டர்தம் பெருமை சொல்லவும் பெரிதே!

திரு ஆ. மகேசு அவர்கள்

தொண்டர்களுடைய பெருமையை அவர்களுடைய குணாம்சங்களை எடுத்துக்கூறுவதென்பது மிகக் கஷ்டமான பணியாகும். ஏனெனில் தொண்டர்களும் சாதாரணமாக மனிதர்களைப்போல இருந்தாலும் அவர்களுடைய சிந்தனை, சொல், செயல் யாவும் இறைவனை நோக்கியதாகவும், இறைவனுடைய திருவருளைப் பெற்றுவிட வேண்டுமென்ற துடிப்பு உள்ளவர்களாகவே வாழ்ந்தார்கள் என்பதற்கு அவர்களுடைய நூல்கள் சான்று பகர்கின்றன. ஏன் இன்றுங்கூட அவ்வாறான நிலையே காணப்படுகின்றது.

இதற்கு உதாரணமாக கடந்த மாசிமாதம் 27.02.2009இல் சந்நிதியான் ஆச்சிரமத்தில் மாசிமாத ஞானச்சுடருக்குரிய வெளியீட்டுரை மதிப்பீட்டுரை என்பவை நிறைவுபெற்ற பின்னர், ஞானச்சுடருக்குரிய ஆக்கங்களை வழங்கியோருக்கான விருதுகள் வழங்கும் நிகழ்வை ஆச்சிரமத்தின் சுவாமிகள் மோகனதாஸ் அவர்கள் நெறிப்படுத்திக்கொண்டிருந்தார்கள். இப்பணிகள் நடைபெற்றுக்கொண்டிருந்தவேளை, சுவாமி அவர்கள், "இப்போது பேசுவது மோகனதாஸ் அல்ல" என்ற வார்த்தைப் பிரயோகங்களை உதிர்த்தார்கள். அவ்வாறாயின் அங்கே அந்த வார்த்தைகளை உதிர்த்தவர் யார்? என்ற வினா நம்மிடையே எழலாம் அல்லவா!

இதிலென்ன சந்தேகம்! அதாவது முருகப்பெருமானே மோகனதாஸ் சுவாமிகள் வடிவத்தில் வந்து காட்சி கொடுத்திருக்கின்றார் என்றுதானே ஏற்றுக்கொள்ள வேண்டும். இதனையே திருவருட்பயன் ஆசிரியர் உமாபதி சிவாச்சாரியார் தமது நூலிலே அழகாகக் கூறியுள்ளார்.

**"பார்வையென மாக்களை முன் பற்றிப்பிடித்தற்காம்**
**போர்வையெனக் காணார் புவி"**

பழக்கப்பட்ட மிருகத்தைக் கொண்டு ஏனைய விலங்குகளைப் பிடிப்பதுபோல, பக்குவப்பட்ட ஆன்மாக்களை ஆட்கொள்ள இறைவன் மனித வடிவிலே வருகின்றான் என்பதை நாம் உணர்வதில்லை. எனவே மனிதவடிவிலே எம்மை ஆட்கொள்ள இறைவன் எந்நேரமும் வருவான் என்பதை ஒருபோதும் மறக்கக்கூடாது. ஆகவே நாம் ஒவ்வொருவரும் அதற்காய பணிகளைச்செய்து இறைவன்தாள் அடைவோமாக.

மேலும் மோகனதாஸ் சுவாமி அவர்களின் நெறிப்படுத்தலில் பிரதி வெள்ளி தோறும் அன்னதானப்பணி நடைபெற்றுவருவதை நாமறிவோம். சிறப்பாக அங்கே பணியாற்றுகின்ற தொண்டர்கள் ஒவ்வொருவரும் மேற்கொள்ளுகின்ற பணியைப் பார்க்கின்றபோது,

**"குறிப்பிற் குறிப்புணர் வாரை உறுப்பினுள்**
**யாது கொடுத்தும் கொளல்"**

**ஆசையை வெறுத்தவனால் எல்லாவற்றையும் எதிர்த்துநிற்க முடியும்.**

என்ற வள்ளுவப்பெருமானுடைய வாக்கு ஞாபகத்திற்கு வருகின்றது. அதாவது மோகனதாஸ் சுவாமிகள் கருதியதை அவர் கூறாமலே, அவரது உளக்குறிப்பை அறிந்து செயற்படும் தொண்டர்களுடைய பெருமையை எவ்வாறு அழைப்பது?

ஆக; இறைவன் சந்நிதானத்திலே இறைபணி செய்கின்ற தொண்டர்கள் யாராக இருந்தாலும், அவர்கள் என்ன தொண்டினைச் செய்தாலும் சரி அவர்கள் எல்லோரும் வணக்கத்திற்குரியவர்களே!

## குகனின் பூர்வ ஜென்மம்

கங்கைக்கரையில், ஒரு முனிவர் மாதவம் புரிந்துகொண்டிருந்தார். அங்கே மன்னன் ஒருவன் வேட்டையாட வந்தான். அவன் விட்ட அம்பு, குறி தவறி முனிவர் ஒருவரைக் கொன்றுவிட்டது. அதனால் மன்னனுக்குப் பிரம்மஹத்தி பிடித்துவிட்டது. மன்னன் பயந்தான். கங்கைக் கரையில் தவம் செய்துகொண்டிருந்த முனிவரிடம்போய் பிரம்மஹத்தி நீங்கப் பிராயச்சித்தம் கேட்கப் போனான். மன்னன் போனபோது முனிவர் ஆச்சிரமத்தில் இல்லை. முனிவரின் பன்னிரெண்டு வயது மகன்தான் இருந்தான். அவன் மன்னரை வரவேற்று விவரம்கேட்க, மன்னன் "உன் தந்தையான முனிவரிடம் பிரம்மஹத்தி நீங்கப் பிராயச்சித்தம் கேட்கலாம் என்று வந்தேன். அவர் இங்கு இல்லாததால் பெரும் ஏமாற்றம் அடைந்தேன்" என்றான்.

"மன்னா! வருந்தவேண்டாம். பிரம்மஹத்தி தீர நான் வழி சொல்கிறேன். என்னைச் சிறுவன் என்று எண்ணிவிட வேண்டாம். சிறுவனாயிருந்தாலும், என் கையில் விளக்கு எடுத்துப்போனால் இருட்டு நீங்கிவிடும்தானே? ஆகவே, விளக்கிற்குத்தான் உயர்வே தவிர, அதை எடுத்துச்செல்பவருக்கு உயர்வு இல்லை. அதுபோல, சிறுவனாக இருந்தாலும் நான் பிராயச்சித்தம் சொல்கிறேன். கங்கையில் நீராடி வடதிசையில் நின்று சித்தத்தை ஒருமுகமாக்கிக் காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி 'முருகா! முருகா! முருகா! என்று மூன்றுமுறை சொல்லுங்கள். உங்களைப்பிடித்த பிரம்மஹத்தி நீங்கும்" என்றான்.

மன்னனும் அப்படியே செய்து பிரம்மஹத்தி நீங்கப்பெற்று முனிவர் மகனை வணங்கி நாடு திரும்பினான். இதன்பின், முனிவர் அங்கு வந்தார். அங்கு தேர்ச்சுவடுகள் இருந்தன. அதைக்கண்ட முனிவர், "யார் வந்தது?" என்று மகனிடம் கேட்க, அவனும் நடந்ததை எல்லாம் கூறினான்.

அதைக்கேட்ட முனிவர், கண்கள் சிவக்கக் கோபத்துடன், "மூடனே! என்ன காரியம் செய்துவிட்டாய். உனக்கு முருகபக்தி இருக்கிறதா? அடாத காரியம் செய்துவிட்டாயே. நீயா என் மகன்? மலை அளவு அடுக்கியுள்ள பஞ்சுக்குவியலைக் கொளுத்த ஒரு தீக்குச்சியே போதுமே? மூன்று தீக்குச்சிகளா வேண்டும்? முருகா என்று ஒருமுறை சொன்னால், கோடி பிரம்மஹத்தி பாவம் தீருமே? ஒரு பிரம்மஹத்தியைப் போக்க, மூன்று முறை முருகா முருகா, என்று கூறவேண்டுமா? முருக நாமத்தின் பெருமையை நீ அறியவில்லை. அதனால் நீ வேடனாகப் பிறக்கக் கடவது" எனச் சாபமிட்டார்.

முனிவரின் மகன் நடுங்கித் தந்தையை வணங்க, அவர் மனம் இரங்கி,"நீ கங்கைக் கரையில் வேடர்குலத் தலைவனாகப் பிறப்பாய். முருகனுடைய நாமங்களில் ஒன்றான குகன் என்ற பெயருடன் விளங்குவாய். இராமனுடைய நண்பனாக வாழ்ந்து முடிவில் முருகனுடைய திருவடி சேர்வாய்" என்று அருள் புரிந்தார். அதன்படி குகன் என்ற வேடனாகப் பிறந்தான் முனிவரின் மகன்.

**மற்றவர்களைக் குறைகூறுவதன்மூலம் என்ன பயனை எதிர்பார்க்க முடியும்.**

உ

(தொடர்ச்சி...

# 2009ஆம் ஆண்டு நித்திய அன்னப்பணிக்கு உதவிபுரிந்தோர் விபரம்

| | | | |
|---|---|---|---|
| திருமதி யோகேஸ்வரி சிவப்பிரகாசம் | | கோப்பாய் | 5000. 00 |
| V. சிவகுமார் | நா. ஜெகநாதன்மூலம் | ஊரெழு (லண்டன்) | 1மூடை அரிசி |
| மா. தங்கவேல் | பலாலி போடிங்றோட் | பருத்தித்துறை | 2500. 00 |
| செ. விக்னேஸ்வரி | பெரேரா லேன் | கொழும்பு | 1000. 00 |
| சச்சியா இரும்பகம் | சங்கரத்தைச்சந்தி | வட்டுக்கோட்டை | 1மூடை அரிசி |
| ஜெ. கஜவேணி | தொட்டிலடி | சங்கானை | 2000. 00 |
| S. மிகிந்தலா | கட்டைவேலி | கரவெட்டி | 1200. 00 |
| வ. செல்வராசா | கட்டைவேலி | கரவெட்டி | 1000. 00 |
| Dr V. பாலகிருஸ்ணன் | குடும்பம் | கரணவாய் | 1000. 00 |
| S. வசந்தகுமார் | கிராம சேவையாளர் | உரும்பராய் | 1மூடை அரிசி |
| பா. சுதாகரன் | கற்பக விநாயகர் ஸ்ரோர்ஸ் | உரும்பராய் | 1மூடை அரிசி, மரக்கறி |
| சு. தம்பிராசா | தோப்பு | அச்சுவேலி | 1000. 00 |
| உதயராசா தாரணி | | கோண்டாவில் வடக்கு | 5000. 00 |
| பொ. சந்திரமோகன் | ஓசன்ட்றேட்ஸ் | யாழ்ப்பாணம் | 2000. 00 |
| Dr R. பாக்கியநாதன் | பொன்னையா வைத்தியசாலை | கல்வியங்காடு | 1000. 00 |
| தி. தவபாக்கியராசா | | அச்சுவேலி | 1மூடை சம்பா |
| க.கு.க பல்பொருள் வாணிபம் | | யாழ்ப்பாணம் | 1மூடை தீட்டல் |
| ஈஸ்வரன் ரேடர்ஸ் | கஸ்தூரியார்வீதி | யாழ்ப்பாணம் | 40k உருளைக்கிழங்கு, 1புட்டி வெங்காயம் |
| திரு சின்னவன் | திருநெல்வேலி | | 1புட்டி வெங்காயம், 40k உருளைக்கிழங்கு. |
| க. கனகலிங்கம் | | கனடா | 10000. 00 |
| திரு கலியாணசுந்தரம் | | கொழும்பு | 1000. 00 |
| நாகம்ஸ் நிறுவனம் | | சுன்னாகம் | 3000. 00 |
| சு. பரமேஸ்வரி | | | 1மூடை அரிசி |
| து. ஞானஸ்கந்தன்மூலம் | நிரோஜன் நிமேஸ் | லண்டன் | 5000. 00 |
| S. விமலன் (சதாசிவம் நினைவு) | அந்திரான் | கரவெட்டி | 2000. 00 |
| S. சிவாஜினி | அந்தணத்திடல் | உடுப்பிட்டி | 2000. 00 |
| Dr பொன் சின்னத்தம்பிமூலம் மோகானந்தன் பிரதீபன், லக்ஸ்மன் | சீலாப்புலம் | வதிரி | 5000. 00 |
| இரவீந்திரராசா அஞ்சனா | | கொழும்பு | 10000. 00 |
| பாலச்சந்திரன் செந்தூரன் | | கனடா | 10000. 00 |
| R. சசிதரன் குடும்பம் | | திருகோணமலை | 1000. 00 |
| T. சாந்தி | சந்நிதி கிளினிக் | கொழும்பு | 4500. 00 |

அறிவு ஆழமான கடல்போன்று அமைதியாய் இருக்கும்.

| | | | |
|---|---|---|---|
| சிவகுமார் கோகிலா | மூத்தவிநாயகர் கோவிலடி | கரவெட்டி | 5000. 00 |
| ஸ்ரீதரன் வதனி | | சுவிஸ் | 5000. 00 |
| வை. துரைராசா | ஒஸ்காலேன் | உரும்பிராய் | 5000. 00 |
| திரு உதயகுமார் | | கனடா | 60 டொலர் |
| நாகமுத்து கந்தசாமி | வல்வெட்டி | வல்வெட்டித்துறை | 5000. 00 |
| வேணி ஸ்ரோர்ஸ்மூலம் நா. யுவராசா | | கொழும்பு | 5000. 00 |
| திரு ராசேந்திரா குடும்பம் | | காரைநகர் | 5000. 00 |
| பொ. நேசதுரை | அம்பன் | குடத்தனை | 5000. 00 |
| கு. தியாகராஜசர்மா (நீர்வைமணி) | | நீர்வேலி | 3000. 00 |
| பொ. ஞானச்சந்திரன் | கோணாவளைலேன் | கொக்குவில் | 1000. 00 |
| ர. சிவராணி | வியாபாரிமூலை | பருத்தித்துறை | 1500. 00 |
| செ. அரியானந்தம் | வன்னியசிங்கம்வீதி | தாவடி | 3000. 00 |
| து. தயாநிதி | | கனடா | 5000. 00 |
| நா. கந்தசாமி | | வல்வெட்டி | 5000. 00 |
| ம.க. ஸ்ரீதரன் இளை. கணக்காளர் | | உடுவில் | 1000. 00 |
| செ. அகிலன் | | கொழும்பு | 1000. 00 |
| திரு திருமதி பஞ்சாட்சரநாதன் | பழவத்தை | வல்வெட்டி | 5000. 00 |
| ஜெ. பிரேமகாந்தன் | | அல்வாய் | 1000. 00 |
| ஆ. மகேசு | தும்பளை | பருத்தித்துறை | 1000. 00 |
| S. ஈஸ்வரன் | டச்றோட் | சித்தங்கேணி | 5000. 00 |
| திருமதி சோதிமுத்து செல்லத்துரை | மகாத்மாவீதி | நெல்லியடி | 1000. 00 |
| ச. இளங்குமரன் | | கனடா | 2000. 00 |
| திரு சோமஸ்கந்தமூர்த்தி | | கொழும்பு | 225. 00 |
| மா. பத்மநாதன்மூலம் சற்குணராசா கலைச்செல்வி (நோர்வே) | | நவாலி | 3000. 00 |
| கீர்த்தினி யோகன் | | இலண்டன் | 1000. 00 |
| சி. நவரெத்தினம் | மிதிலை | கரணவாய் | 1000. 00 |
| ஆ. விநாயகமூர்த்தி | சாளம்பை | கரணவாய் | 1000. 00 |
| செ. சிவசுப்பிரமணியம் | மில் ஒழுங்கை | மல்லாகம் | 2000. 00 |
| Dr. எழிலினி | பிள்ளையார்வீதி | திருநெல்வேலி | 2000. 00 |
| செல்வி S. ஸ்ரீரங்கநாயகி | தாதி உத்தியோகத்தர் | யாழ் | 3000. 00 |
| பொ. முத்தையா நினைவு | | கோண்டாவில் | 2000. 00 |
| ஸ்ரீதரன் குடும்பம் ஸ்ரீராம் | இத்தாலி (மீசாலை கிழக்கு) | | 10000. 00 |
| செல்லம்மா நாகமுத்து | | மட்டுவில் | 1000. 00 |
| ரங்கநாதன் அங்கதன் | நெல்லியோடை | அச்சுவேலி | 1000. 00 |
| K. பிரபாகரன் மேகலா குடும்பம் | லண்டன் | மானிப்பாய் | 3000. 00 |
| K.K. யோகேந்திரன் | உடபயகதிர்காமம் | புலோலி | 3000. 00 |
| வினோதா சற்குணராசா | | அவுஸ்திரேலியா | 10000. 00 |

(தொடரும்....

# திருவிளையாடற்புராண வசனம்

**ஆறுமுகநாவலர்**

**படலம்: 5**

## தடாதகைப் பிராட்டியார் ~ திருமணப்படலம்

திருவருள் வடிவமாகிய தடாதகைப் பிராட்டியார் அரசு செய்துகொண்டிருக்கும் காலத்தில் அவருக்குத் திருமண வயது வந்தது. கன்னிப்பருவம் வந்தும் இன்னமும் விவாகம் நடைபெறவில்லையே எனத் தாய் காஞ்சனமாலை பெரிதும் கவலை கொண்டாள். தடாதகைப் பிராட்டியோ, "தாயே! நீ நினைத்த எண்ணம் ஆம்பொழுது ஆகும். வருந்தவேண்டாம். நான் எண் திசையுஞ் சென்று என் வெற்றியை நாட்டி மீளுவேன். நீ இங்கேயே இரு" எண்திசைப் போருக்குப் புறப்படத் தயாரானாள்.

யானை, குதிரை, தேர், காலாள் என நால்வகைச் சேனையும் சூழ்ந்துவர, தான் ஒரு தேரிலும், சுமதி என்னும் மந்திரி ஒரு தேரிலுமாக வடதிசை நோக்கிச் சென்று பல வடதிசை மன்னர்களையும் வென்று, கடைசியில் திருக்கைலாய மலையை வளைத்துக்கொண்டார்கள். கைலாய மலைப்படை வீரர்களைத் தடாதகைப் பிராட்டியாரின் படைவீரர்கள் விரட்டியடிக்க அவர்கள் திருநந்தி தேவரிடம் சென்று விண்ணப்பம் செய்தனர். நந்திதேவர் பூத கணங்களை ஏவியபோதும் அவர்களும் தோற்று மீண்டனர். இது கண்ட நந்திதேவர் கைலாசபதியாகிய சிவபெருமானை வணங்கி நடந்தவற்றைக் கூறினார். பரமசிவன் புன்னகை செய்து படைக்கலங்களைத் திருக்கரத்தில் எடுத்துக்கொண்டு இடபவாகனத்தின் மேலேறி யுத்த களத்திற்குச் சென்றார். அங்கு பெண்சிங்கம்போல் நிற்கும் தமது தேவியாருடைய (தடாதகைப்பிராட்டி) திருவுருவத்தையும் வீரத்தையும் எதிர்கண்டார். தடாதகைப் பிராட்டியும், வீரக்கழல் கட்டிய திருவடியும், புலித்தோலாடையும், மழுப்படை ஏந்திய திருக்கரமும், திருவெண்ணீறணிந்த திருமார்பும், சடாமுடியும், தன்னை நேருக்குநேர் நோக்குகின்ற பெருங்கருணைத் திருநோக்கும் பெற்ற தன்னுடைய வலப்பாதியை எதிர்கண்டார். கண்டபொழுது நடுவிலுள்ள ஒரு தனம் மறைந்தது. உடனே போர்க்குணம் மாறி, உள்ளத்தில் அச்சம் மடம் நாணம் உதிக்க, முன்னைய அன்புவந்து குடிகொள்ள தலைகுனிந்து நின்றாள்.

முன்னாளில் தோன்றிய அசரீரி வாக்கினை அறிந்திருந்த சுமதி தடாதகைப் பிராட்டியை வணங்கி, "தாயே! இந்தக் கைலாசபதியே உன் மணவாளன்" என்றாள். பிராட்டியார் பேரன்பு பெருக நின்றார். கைலாசபதி பிராட்டியை நோக்கி, "நீ திக்கு விஜயத்தின் பொருட்டு புறப்பட்டபோதே நாம் மதுரையைவிட்டு உன்னைப்பிரியாது தொடர்ந்து வந்தோம். அடுத்துவரும் சோமவாரத்திலே சுப லக்கினத்திலே உன்னை விவாகஞ் செய்ய வருவோம். நீ மதுரைக்குப் போ" எனத் திருவாய் மலர்ந்தருளினார். அது கேட்ட தடாதகைப் பிராட்டியார் மனம் மலர்ந்து மதுரையை அடைந்து திருமாளிகை புகுந்தார்.

திருமணநாள் நெருங்கிற்று.

**உண்மையான அறிஞனிடம் பிறரைத் தாழ்மையாக எண்ணும் எண்ணம் இருக்காது.**

மந்திரிமார் திருக்கல்யாண ஓலையெழுதி நாற்றிசை மன்னர்களுக்கும் அழைப்பு விடுத்தனர். மதுரையெங்கும் மணமுரசு அறைவித்தனர். மணமுரசொலி கேட்ட மதுரை நகர மக்கள், பெருமகிழ்ச்சி கொண்டு, இந்திரனுடைய அமராவதி நகரமே நாணும் வண்ணம் மதுரை நகரை அலங்கரித்தனர். பெரிய மண்டபத்தின் நடுவே சிவபெருமானும் தடாதகைப் பிராட்டியாரும் எழுந்தருளும்பொருட்டு ஒரு நவரெத்தின சிங்காசனமும், முன்பாக யாக குண்டமும் அமைத்து, அதைச் சுற்றிவர அனைவரும் அமரும் வண்ணம் இடமும் அமைத்தனர். திருமண நாளும் வந்தது. நாற்றிசை மன்னர்களும் தத்தம் பரிவாரங்களுடன் மதுரை வந்து தமக்கு ஒதுக்கப்பட்ட விடுதிகளிற் சேர்ந்தனர்.

அங்கே, கைலாயத்தில் கைலாச நாதர் தமது திருமண சோபனத்தை அனைவருக்கும் அறிவித்தார். முனிவர் களும், தேவர்களும், மற்றையோரும் திரு மணச்செய்தியறிந்து தத்தம் மகிழ்வினைத் தெரிவித்துக்கொண்டனர். சிவபெருமான் திருமணக்கோலம் கொள்ளும்பொருட்டு ஒரு திருமண்டபத்தினுள்ளே சென்றதும், குபேரன் மெய்யன்புடனே திருமண அலங் காரங்கள் செய்வித்தான். வேதங்களும் தேவர்களும் பிரம்மா விஷ்ணுவும் தீண்டற் கரிய திருமேனியை தன் கைகளினால் திருமணக்கோலம் செய்து பெரும் தவப் பயனைப் பெற்றான் குபேரன். பின், சிவ பெருமான், குண்டோதரனுடைய முதுகின் மேலே திருவடியை வைத்து இடப வாகனத்தில் ஏறி மதுரை நகர்ப்புறத்தை அடைந்தார். அங்கு பெண்கள் ஆராத்தி எடுத்து திருமண மண்டபம் நோக்கி அழைத்துச்சென்றனர். சிவபெருமான் திருநந்தி தேவரின் கையைப்பற்றிக் கொண்டு இடபவாகனத்தினின்றும் இறங்கி, பிரம்மா விஷ்ணு இருவரதும் கைகளைப் பற்றிக்கொண்டு, தேவர்கள் பூமாரி பொழிய உள்ளே சென்று இரத்தின சிங்காசனத் தின்மீது வீற்றிருந்தருளினார்.

மகளிர் தடாதகைப் பிராட்டியை நீராட்டுவித்து, வஸ்திரம் சாத்தி அழைத்து வர, இலக்குமியும் சரஸ்வதியும் பிராட்டி யாரின் அருமைத் திருமேனியைத் தீண்டி திருமணக்கோலம் செய்வித்தனர். பின்னர், பிராட்டியாரின் இருபக்கமும் நின்று கரம் பற்றி இரத்தினச் சிங்காசனம் அருகே அழைத்து வந்தனர். பரமசிவனைக் கண்ட உடனே நாணி ஒதுங்கி அவர் பக்கத் திலே அமர்ந்தனர். பிரம்மதேவர் தமது திருக்குமாரர்களுடன் அக்கினி காரியங் கள் அனைத்தையும் செய்தார். மகா விஷ்ணு, சிவபெருமானுடைய திருக்கரத் திலே தடாதகைப் பிராட்டியாருடைய திருக்கரங்களை வைத்து வேத மந்திரம் சொல்லித் தத்தம் செய்து கொடுத்தார். தேவர்கள் பூமாரி பொழிந்தனர். முனிவர் கள் அரகர தோத்திரம் இசைத்தனர். திருக்கல்யாணத்தைத் தரிசித்த யாவரும் பேரின்ப வெள்ளத்தில் மூழ்கினர்.

அதன்பின், சிவபெருமான் மதுரை யில் நல்லாட்சி செய்து காட்டத் திருவுளங் கொண்டு, தாம் சௌந்தரபாண்டியனாகி, தேவ கணங்கள் மானுடராகி ஏவல் செய்ய அரசு செய்தருளினார். சிவனைப் பூசித்தலே வேதநெறியென அரசர்களுக்கெல்லாம் உணர்த்தும்பொருட்டு, நடுவூரென்று ஒரு நகரஞ்செய்து, அதிலே ஒரு ஆலயம் அமைத்து சிவலிங்கம் ஸ்தாபித்து வணங்கி நின்றார். எல்லோரும் உய்யும் வண்ணம் தம்மைத்தாமே பூசித்து நின்ற அந்தச் சிவலிங்கத்தின் பெருமையை யாவர் அளக்கவல்லார்!

**உறுதியுடைய உத்தமருக்கு உலகம் வளைந்து கொடுக்கிறது.**

# வாசகர் கடிதம்

ஞானச்சுடர் தைமாத இதழில் குப்பிழானும் சித்தர் சரவணமுத்துச் சுவாமிகளும் என்ற 'மாதாஜி' அவர்களின் கட்டுரை கண்டேன். நானும் குப்பிழானில் பிறந்தவன் வளர்ந்தவன் என்றவகையில் பெருமிதம் அடைந்தேன்.

சித்தர் சரவணமுத்துச் சுவாமிகளைப்பற்றி நான் பெரிதாக எதுவும் அறிந்திருக்கவில்லை. என்றாலும் குப்பிழான் வட எல்லைக்கருகில், (இப்போது பாதுகாப்பு வலயம்) இருந்த சமாதி கோயில் என்ற சிறு கோயிலுக்குச் சென்றிருக்கிறேன். அப்போது அங்கே வெள்ளைச் சேலையுடனிருந்த "சுவாமி அம்மா" அவர்களைப் பார்த்திருக்கிறேன்.

நான் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் (1967- 1969) படித்த காலங்களில், அங்கு படித்துக்கொண்டிருந்த ஆத்மீக நாட்டங்கொண்ட வேறு ஊர்களைச் சேர்ந்த நண்பர்கள் சிலர், நான் குப்பிழானைச் சேர்ந்தவன் என அறிந்துகொண்டு சித்தர் சரவணமுத்துச் சுவாமிகளைப்பற்றி என்னிடம் விசாரிப்பதுண்டு. குப்பிழானைச் சேர்ந்தவனாயிருந்தும் அவரைப்பற்றி அறிந்திராத என் நிலையை எண்ணி வெட்கப்பட்டதுண்டு.

'மாதாஜி' குறிப்பிட்டவாறு அக்காலங்களில் குப்பிழான் தனிக்கிராமமாக இருக்கவில்லை. ஏழாலை வடக்கு, புன்னாலைக்கட்டுவன் வடக்கு, மயிலிட்டி தெற்கு என்றெல்லாம் இன்றைய குப்பிழானின் பகுதிகள் பிளவுண்டிருந்தன. அவ்வாறே அழைக்கவும் பட்டன. 1964 மட்டிலேயே குப்பிழான் தனிக்கிராமமாக்குவதற்கான "தொடர்பாடல்கள்" நடந்துகொண்டிருந்தன. இம் முயற்சியில் எனது தந்தையாரும் ஏதேதோ விதங்களில் தொடர்புபட்டிருந்தார். இத்தகைய சூழலை வைத்து நான் 'விசித்திர உலகம்' என்றோர் சிறுகதையையும் எழுதிஉள்ளேன்.

குப்பிழான் தனிக்கிராமமானதை ஒட்டி ஒரு பெருவிழா, குப்பிழான் விக்கினேஸ்வரா வித்தியாசாலையில் நடந்தது. விழாவையொட்டி குப்பிழான் சந்திச்சூழல் விழாக்கோலம் பூண்டிருந்தது. அதனையொட்டி 'குப்பிழான் கிராமோதயம்' என்றோர் மலரும் வெளியிடப்பட்டது. அம்மலரில் குப்பிழான் என்ற பெயருக்கான காரணம் மாதாஜி குறிப்பிடுவதைப் போலல்லாது, வேறு விதமாகக் குறிப்பிடப்பட்டிருந்தது. 'குப்பிழாய்' என்றோர் ஒருவகைப்பூண்டு அப்பகுதியில் பரவலாகக் காணப்பட்டதாகவும், அதனாலேயே கிராமத்திற்கு குப்பிழான் என்ற பெயர் வந்ததாகவும் அதில் எழுதப்பட்டிருந்தது.

குப்பிழானில் அவதரித்த காசிவாசி செந்திநாதையர்பற்றி 'மாதாஜி' சரியாகவே குறிப்பிட்டிருக்கிறார். சைவசித்தாந்தத்தின் குறுக்கே நின்ற புதர்களையும், செடிகளையும், கொடிகளையும் அகற்றியவர் என்று பண்டிதமணி கணபதிப்பிள்ளை குப்பிழான் கிராமோதயம் மலரில் செந்திநாதையருக்கு புகழாரம் சூட்டுகின்றார். அதே பண்டிதமணி வேறோர் இடத்தில் செந்திநாதையரை உறங்காவிரதம் பூண்டவர் என்று வர்ணிக்கிறார்.

ஆனால் இசைவல்லார் செல்லத்துரைபற்றி எழுதவந்த மாதாஜி, 19ஆம் நூற்றாண்டின் ஆரம்பப்பகுதியில் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் பண்ணிசை பயின்றவர் எனக் குறிப்பிடுவது தவறானது. 20ஆம் நூற்றாண்டின் ஆரம்பப்பகுதி என்பதையே அவர் இவ்வாறு மாறி எழுதியிருக்கலாம். 1960களின் தொடக்கத்தில், குப்பிழான் கற்கரைக் கற்பக விநாயகராலய வெளிமண்டபத்தில், எனது தூரத்து உறவினரான இசைவல்லார் செல்லத்துரையிடம் மற்றச் சிறுவர்களுடன் நானும் சிலகாலம் பண்ணிசை பயின்றுள்ளேன்.

ஞானச்சுடரில் வெளியாகிய மாதாஜியின் கட்டுரைக்கு வலுச்சேர்க்கும் சில தகவல்களைத் தரவேண்டுமென்ற பேரவாவினால் இக்குறிப்புக்களை எழுதுகின்றேன். யோகர் சுவாமிகள், கடையிற் சுவாமிகள்போல, சரவணமுத்துச் சித்தர் பரம்பரை பற்றியும் வெளிஉலகம் அறிய வகைசெய்யும் மாதாஜியின் கட்டுரைகள் தொடரவேண்டுமென ஆசைப்படுகின்றேன்.

*குப்பிழான் ஐ. சண்முகன்.*

நம்பிக்கைத் துரோகம் செய்பவன் மாபெரும் குற்றவாளி.

# அருட்கவி சீ. விநாசித்தம்பிப்புலவர்.....

செல்வி தி. வரதவாணி அவர்கள்

இறைவன் தன்னால் நேரே சென்று அருள்புரிய வேண்டிய விடயங்களுக்காகச் சில பிறவிகள் எடுக்கின்றார். அவ்வாறான ஒரு அருட்பெரியவரே நம் அருட்கவி விநாசித்தம்பி ஐயா என்பது எமக்குத் தெரிந்ததே. இன்றும் தம் அன்பர்களுக்கு எவ்வாறு மனோன்மணி உள் நின்று நடமாடும் தெய்வமாக அருள் புரிந்தாரோ அதேபோன்று லிங்கத்துள் ஐக்கியமாகி சமாதிநிலை எய்திய பின்னரும் அவர்களைக் கைவிடாது காப்பாற்றி வருகின்றார்.

ஓர் அன்பர் ஐயா அவர்களிடம் எப்படியும் இரண்டு கிழமைக்குள் ஒரு தடவையாவது ஆசீர்வாதம்பெற வருவதற்கு தவறுவதில்லை. ஒரே ஒரு மகள் அவருக்கும் லண்டனில் திருமணம் நிச்சயித்து ஐயாவின் ஆசீர்வாதத்துடன் திருமணமும் நடந்தேறியது. ஒரு மாதத்திலேயே மகள் வெளியூரை அடைந்து விட்டார். எதுவித குறையுமின்றி இங்கு பெற்றோரும் வெளியூரில் மகளும் சந்தோசமாக வாழ்ந்தார்கள். சில நாட்களில் அருட்கவி ஐயாவும் சமாதிநிலை பெற்ற பின்னர் இங்கு வாழும் பெற்றோரும் கோவிலுக்கு வருவதைத் தவிர்த்துக் கொண்டனர்.

இப்படியே ஒன்றரை வருடம் கழிந்தது. ஒருநாள் மகள் ரூபி அலறிய வண்ணம் தொலைபேசியில் மருமகன் தொலைக்காட்சி பார்த்தவண்ணமே செயலற்று இப்பொழுது வைத்திய சாலையில் இருக்கிறேன் சுய நினைவு அற்றநிலையிலேயே இப்பொழுதும் இருக்கிறார் என்றார். இங்கு பெற்றோர் மகளின் புலம்பலால் செய்வதறியாது மனம் கலங்கினர்.

நாட்களும் நகர்ந்து 3 கிழமை ஆகிவிட்டது. சுவாமி அறையில் ஐயாவின் படத்தையும் வைத்துப் பூஜிக்கும் அக் குடும்பத்தலைவி அருட்கவி ஐயா அருளிய மனோன்மணி கவசத்தையும் பாடி ஐயாவிடம் மனம்விட்டுக்கூறி அழுதார். அன்று மகள் பேசியபோது ஒருமுறை அருட்கவி ஐயாவின் கோவிலுக்கு போய் வாருங்கள் என்றார். தாயும் நானும் இன்று அதைத்தான் நினைத்துக்கொண்டிருக்கிறேன். எதற்கும் நாளை போகிறோம் என்றார். அவ்வாறே அடுத்தநாள் இடம் பெற்ற ஞாயிற்றுக்கிழமை மதிய பூசையிலும் அன்னதான வைபவத்திலும் கலந்து கொண்டனர். ஐயா ஏதாவது கவலை என்று கூறினால் என்ன என்றாலும் மனோன்மணி அம்மனைக்காட்டி அவவிடம் கூறிவிட்டுச் செல்லுங்கள் என்பார். அதுபோலவே மருமகனின் திடீர் பரிதாப நிலையையும் அம்மாவிடம் கூறி அழுதனர்.

இது இடம்பெற்ற அன்று மகள், தன்னையும் கணவரையும் ஐயா தன் இரு கைகளாலும் தலையில் வைத்து ஆசீர்வதித்ததுபோன்று கனவு கண்டேன் என்றார். 2 நாட்களின் பின்னர் கோமாநிலையில் இருந்த மருமகன் கண்ணை விழித்துப்பார்த்தார். அடுத்தநாள் ஓரளவு கதைத்தார். இவ்வாறு சிறிது சிறிதாக சுகம் பெற்றார். இன்று பழைய மாதிரி சந்தோசமாக இருக்கிறார்கள். ஐயா சமாதி

அடைந்த பின்னரும் அருள் புரிவார். மனிதனே மரணிக்கிறான். மகான்கள் மரணிப்பது இல்லை. இறைவனை நம்பியோர் என்றும் கைவிடப்படார் என்பதுபோல ஆன்மீக அருளாளர் அன்பும் என்றும் எம்மைக் காப்பாற்றும் என்பது உறுதி.

**இந்த இலைக்கு மகத்துவம் அதிகம்**

**வெற்றிலையின் சிறப்பு**

இறைவனுக்கு நிவேதனம் என்றால் முதலிடம் பெறுவது வெற்றிலைதான். துளசி, வில்வம், அறுகு, திருநீற்றுப் பச்சிலை போன்ற இலைகள் எல்லாம் மிகுந்த மகத்துவம் பெற்றிருந்தாலும்கூட அவை மலர்களைப்போல இறைவனுக்குப் பூஜை செய்யத்தான் பயன்படுத்துகிறோம். ஆனால், ஓர் இலை ரகத்தில் நைவேத்தியமாகப் படைக்கப்படுவது வெற்றிலை மட்டுமே.

வெற்றிலையில் ஊடகத்தன்மை உள்ளது. எண்ணங்களையும் சக்திகளையும் கடத்தும் ஆற்றல் பெற்றுள்ளது. வெற்றிலை நிறைய அடுக்கி, அதில் ஓர் இலையைத் தேர்ந்தெடுத்து, தேர்ந்தெடுத்துக் கொடுப்பவருடைய ஜாதகத்தையும், விதியையும் சொல்லி எழுதித்தந்த அருமையான சோதிடர்கள்கூட ஒரு காலத்தில் இருந்தார்கள். அப்படியென்றால் வெற்றிலையில் ஓடும் ரேகைகள் சாதாரணமானவையல்ல என்பது புரிகிறது அல்லவா!

இறைவனுக்கு நிவேதிக்கும் வெற்றிலை அழுகல் இல்லாமல் ஓட்டை இல்லாமல் சுத்தமானதாக இருக்கவேண்டும். வெற்றிலையின் நுனியில் லக்ஷ்மி, நடுவில் சரஸ்வதி, காம்புப் பகுதியில் சக்தி ஆகியோர் வாசம் செய்வதாக சொல்வாரும் உளர்.

இன்னும் வியக்கத்தக்க ஒரு சிறப்பையும் வெற்றிலை பெற்றிருக்கிறது. வெற்றிலையின் காம்புப் பகுதியை கவனித்துப் பாருங்கள். காம்பிலிருந்து வளைந்து செல்லும் இலை அமைப்பு மிகப்பெரும் இயற்கை அதிசயம். இலை வளைவு வலதுபக்கம் அதிகமாக இருந்தால் அது ஆண் வெற்றிலை. இடது பக்கம் அதிகம் வளைந்திருந்தால் அது பெண் வெற்றிலை. இலையில் ஆண் வகையும் பெண் வகையும் பெற்றிருப்பதால் வெற்றிலை நிவேதனம் என்பது ஆன்ம நிவேதனம் ஆகிறது.

இரண்டுபக்கமும் சம அளவு கொண்ட வெற்றிலை சுமார் 20 சதவீதம்தான் இருக்கும். அப்படிப்பட்ட வெற்றிலையை இறைவனுக்கு படைப்பது மிக விசேடமானது. தவிர, இலையை பார்க்கும்போது தெரியும் பச்சை நிறம் சக்தி. தாம்பூலம் தரித்தால் சிவப்பாக- ருத்ரமாக மாறுகிறது. அது சிவம்.

வெற்றிலையின் பின்பக்கமுள்ள நரம்புப்பகுதி, உடலில் இருக்கும் சக்திமிக்க செல்களை (வெள்ளை அணு) அழித்துவிடும் அதனால்தான் அந்த நரம்பை எடுத்துவிட்டு தாம்பூலம் தரிக்கவேண்டும். இதைவிட வெற்றிலையின் மேல்ப்பாகம் ஸ்ரீதேவியும், அடிப்பாகம் மூதேவியும் இருக்கும் என்றும் சிலர் சொல்வதுண்டு.

வெற்றிலைக்கு உண்ட உணவை ஜீரணமாக்கும் மருத்துவகுணம் உண்டு. சுமங்கலிப் பெண்களுக்கு மங்கலத் தன்மையையும், தாய்மையடைந்த பெண்களுக்கு (கல்சியம் கூட்டும்) மருத்துவம் கலந்த மங்கலத் தன்மையையும் தருகிறது வெற்றிலை.

இதைத் தாம்பூலமாக மற்றவர்களுக்கு தரும்போது காம்புப் பகுதி நம் பக்கமும், நுனிப்பகுதி எடுத்துக்கொள்பவர் பக்கமும் இருக்கவேண்டுமென்பது சாஸ்திர விதி. தவிர தட்சணையாகத் தரும்போது (குரு, குருக்கள், வயது முதிர்ந்தோர்) நுனிப்பகுதி நம் பக்கமும், காம்புப் பகுதி எடுத்துக்கொள்பவர் பக்கமும் இருக்கவேண்டும் என்பதே முறை.

*-வல்வைச் செல்வம்-*

**சோம்பேறித்தனம்தான் பொறுமை என்ற பெயரில் தவறாகக் கணிக்கப்படுகிறது.**

உ

# ஞானச்சுடர் வேலன் அருட்சிறப்பு வெண்பா

**திரு வ. சிவநேசன் அவர்கள்**

### காப்பு

வல்லைப் பெருவெளியில், அல்லல, வினைதீர்த்து
அடியவரைக், காத்தருளும், ஐங்கரனே - உன்தம்பி
ஞானச்சுடர், வேலன், அருட்புகழைப் பாட
அருள்சேர்ந்த, இதமான, செஞ்சொற்கள் தா

### வெண்பா

செந்தாமரை, மேலே, செல்லக், குமரனென
அருட்கோலம் காட்டி நிற்கும், அழகேசா- உன்தன்
திருக்கரத்தின் வேலழகு பெருஞ்சிறப்பாய்க் காட்சிதர
ஞானச்சுடர், முகப்பழகு, அருள்விளங்கநில்.

ஞானச்சுடர், முகப்பு, அடியவரைக் கவர்ந்திழுக்க
நடுவில் வரும் விடயங்கள் எமை உருக்க - முடிவாக
பின்புறத்தின் கோயிற்படம் தலங்காட்ட
வருகின்ற ஞானச்சுடர், சந்நிதியான் படைப்பென்றறி

ஞானச்சுடர், ஒளியாலே ஞாலத்தோர் வாழ்வினிலே
தீபச் சுடர், ஏற்றிவைக்கும் குமரேசா - உன் அருளால்
கலியுகத்தின், கொடுமைகளை, கதிரவன் முன் பனியாக்க
சந்நிதியில், அருள் செறிந்த கதிரவனாய் நில்

தேடிவந்து, பாடிப், பணிந்தொழும், அடியவர்க்கு
நாடி வரங்கொடுக்கும் நாயகனே - உன்பதியின்
அருட்பெருமை, சிறப்பாகி, மேலோங்க, மனம் நினைந்து
கருணை சேர், கதிர்காமக், கந்தனாகி, நில்

வாயில் முகப்பினிலே கதிர்காமக் காட்சிதந்து
பூவரசின், நீழல்தனை உகந்த புண்ணியனே - உன்பெருமை
சொல்லில் அடங்காத சோதியென நானறிவேன்
மறவேன், உன் திருவடிகள் என்றும் சரண்

ஆடம்பரமற்ற அருள் செறிந்த பூசைதனை
அன்புடனே ஏற்றருளும் குமரேசா என்றும்
உன்பதியில், பழம்பெருமை பேணிவருகின்ற வழிபாட்டால்
அருட் பெருமை, அகிலமறி உண்மை என்றறி

கதிர்காமப் பெரும்பதிக்கும் சந்நிதியாம், திருப்பதிக்கும்
பல்லாண்டு காலத் தொடர்புண்டு - இன்றும்
கதிர்காம உற்சவத்தில் கலந்துகொள்ள வேல்வடிவில்
வேலனுப்பும் பூசை அருளின்பப் பூசை என்றறி.

ஆற்றங்கரை வேலன் அரசாளும் சந்நிதியில்
வாயில் முகப்பழகு தனியழகு - சிறப்பாக
மலைபோன்ற கோபுரமேல் நாதமணி ஒலி எழுப்ப
அட்டதிக்கும், அப்பன் அருள் செறியும் அறி

ஆதிமூல வேலழகும் அபிஷேகச் சிறப்பழகும்
அடியவர்கள் மனமுருக்கும் அருட்காட்சி - இவ்வுலகில்
அடியவர்கள் துயர்துடைத்து அருள்வழங்கும் பதிகளிலே
தலைசிறந்த பெரும் பதியாம், சந்நிதிப் பதிஎன்றறி

தாயாகித் தந்தையைப்போல் எமைத் தாங்கும் சந்நிதியான்
பதிப்பெருமை சொல்லில் அடங்காது - சந்நிதியில்
அன்னக்கொடி பிடித்து ஆலிலையில் அமுதேற்று
அமுதளிக்க ஆச்சிரமம் அருள்பொங்க அமைந்தபுகழ் அறி

அருள் நிறைந்த அறப்பணிகள் அத்தனையும் தப்பாமல்
செய்துவரும் ஆச்சிரமம் அருள்பொங்க - இப்புவியில்
சைவத்தின் தலைசிறந்த அருட்பீடமாக மேலோங்க
ஞானச்சுடர் வடிவேற் சுந்தரனே திண்ணமென அருள்.

---

**முருகா**

தமிழில் "முருகா" என்ற மந்திரம் சிறந்தது. மொழியில் "குமார" என்ற மந்திரம் சிறந்தது. பஞ்சாட்சரத்தில் "சிவ" என்பது சிறந்ததுபோல் சடாட்சரத்தில் "குமார" என்பது சிறந்தது. இம்மந்திரத்தை ஒருமுறை கூறினால் தீயில் பஞ்சு எரிவதுபோல சகல வினைகளும் எரிந்துபோகும். உள்ளம் உருகி இந்த மந்திரத்தை உரைப்போர் இந்திரலோகத்தையும் ஆட்சி செய்வார்கள். எமனிடம் சேரமாட்டார்கள். மீண்டும் வந்து பிறக்கமாட்டார்கள். முருகன் திருவடியில் சேர்ந்து பேரின்பப் பெருவாழ்வைப் பெறுவார்கள்.

---

**இழந்த நேரத்தை மீண்டும் கண்டெடுக்க முடியாது.**

# ஔவையார் அருளிச்செய்த ஆத்திசூடி

## மூலமும் உரையும்

*93. மெல்லின் நல்லாள் தோள் சேர்.*

ப-ரை. மெல்- மெல்லிய, இல்- (உன்) மனையாட்டியாகிய, நல்லாள்- பெண்ணினுடைய, தோள்- தோள்களையே, சேர்- நீ புணர்.

இதனாலே பிறர் மனைவியர், பரத்தையர் என்கின்ற இவர்களுடைய தோள்களை ஒருபோதும் புணராதே என்பது பெறப்படும்.

*94. மேன்மக்கள் சொற் கேள்.*

ப-ரை. மேன்மக்கள்- மேன்மையாகிய மனிதருடைய, சொல்- சொல்லை, கேள்- நீ கேட்டு நட.

*95. மைவிழியார் மனை அகல்.*

ப-ரை. மை விழியார்- மை தீட்டிய கண்களையுடைய வேசிகளது, மனை- வீட்டை, அகல்- (நீ ஒருபோதும் கிட்டாமல்) அகன்று போ.

*96. மொழிவது அறமொழி.*

ப-ரை. மொழிவது- சொல்லப்படும் பொருளை, அற- (சந்தேகம்) நீங்கும்படி, மொழி- நீ சொல்லு.

*97. மோகத்தை முனி.*

ப-ரை. மோகத்தை (நிலையாத பொருள்களின் மேலதாகிய) ஆசையை, முனி- நீ கோபித்து விலக்கு.

*98. வல்லமை பேசேல்.*

ப-ரை. வல்லமை- (உன்னுடைய) சாமர்த்தியத்தை, பேசேல்- (நீ புகழ்ந்து) பேசாதே.

*99. வாது முற் கூறேல்*

ப-ரை. வாது- வாதுகளை, முன்- (பெரியோர்) முன்னே, கூறேல்- நீ பேசாதே. (வாது- தருக்கம்)

*100. வித்தை விரும்பு.*

ப-ரை. வித்தை- கல்விப் பொருளையே, விரும்பு- நீ விரும்பு.

*101. வீடு பெற நில்.*

ப-ரை. வீடு- மோட்ஷத்தை, பெற- அடையும்படி, நில்- (அதற்குரிய ஞான வழியிலே) நில்.

*102. உத்தமனாய் இரு.*

ப-ரை. உத்தமனாய்- (நற்குண நற்செய்கைகளினாலே எல்லாரினும்) மேலானவனாகி, இரு- நீ இரு.

*103. ஊருடன் கூடி வாழ்.*

ப-ரை. ஊருடன்- ஊரவர்களுடனே, கூடி- (சுபா சுபகன்மங்களிலே) அளாவி, வாழ்- நீ வாழு.

*104. வெட்டெனப் பேசேல்*

ப-ரை. வெட்டு என- கத்தி வெட்டைப்போல, பேசேல்- நீ (ஒருவரோடுங் கடினமாய்) பேசாதே.

*105. வேண்டி வினை செயேல்.*

ப-ரை. வேண்டி- (யாதொரு பிரயோசனத்தை) விரும்பி, வினை- தீவினையை, செயேல்- (நீ ஒருவருக்கும்) செய்யாதே.

*106. வைகறைத் துயில் எழு.*

ப-ரை. வைகறை- (நீ தினந்தோறும்) விடியற் காலத்திலே, துயில்- நித்திரையை விட்டு, எழு- எழுந்திரு.

*107. ஒன்னாரைத் தேறேல்.*

ப-ரை. ஒன்னாரை- பகைவர்களை, தேறேல்- (நீ ஒருபோதும்) நம்பாதே.

*108. ஓரஞ் சொல்லேல்.*

ப-ரை. ஓரம்- பக்ஷபாதத்தை, சொல்லேல்- (நீ யாதொரு வழக்கிலும்) பேசாதே.

(முற்றும்)

## முதல்வனின் கொண்டாட்டம்

கந்தனுக்கு அபிஷேகம்
கந்தனுக்கு அலங்காரம்
முந்திவரும் வினை நீக்கும்
முதல்வனின் கொண்டாட்டம்

பார்த்த இடம் யாவிலுமே
பக்தர்களின் திருக் கூட்டம்
சேர்த்த கரம் கூப்பி நிதம்
கேட்டிடுமே மன்றாட்டம்

வேப்பிலையும் தோரணமும்
வாயிலை அலங்கரிக்கும்
கையிலே தாங்கி நிற்கும்
வேலெந்தன் வினை தீர்க்கும்

காவடியும் பாற்குடமும்
நேர்த்திகளை நிறைவேற்றும்
வாசலிலே வழங்கும் அன்னம்
வந்தபசிப் பிணி போக்கும்.

**கோமகன்**

உ

# செய்திச் சிதறல்கள்

- கைதடி ஸ்ரீ சச்சிதானந்த ஆச்சிரமத்தில் அமைந்துள்ள ஈழத்து காசி லிங்கேஸ்வரப் பெருமான் அருள் ஞானமிகு மாதாஜி லிங்கேஸ்வரர் ஆலயத்தில் நாட்டில் அமைதியும் சாந்தியும் வேண்டி பன்னிரு திருமுறைப் பிரார்த்தனை 30.03.2009 தொடக்கம் 25.04.2009 வரை இடம்பெற்றது.

- திருவாவடுதுறை ஸ்ரீஸ்கந்த பரம்பரை சூரியனார் கோயில் ஆதீன இரண்டாவது குருமூர்த்திகளான அருள்திரு வீழிச்சிவாக்கிர யோகிகள் குருபூசைவிழா 30.03.2009 அன்று வெகு விமரிசையாக கொண்டாடப்பட்டது.

- நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்தின் ஸ்தாபகரும் முதலாவது குரு மஹா சந்நிதானமுமாகிய ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத தேசிக பரமாசார்ய சுவாமிகளின் 28ஆவது குருபூசை தினம் 02.04.2009 வியாழக்கிழமை ஆதீனத்தில் நடைபெற்றது.

- புலோலி ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் ஆலயத்தில் 03.04.2009 வெள்ளியன்று ஸ்ரீராமநவமி வெகு சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

- யாழ்ப்பாணத்து யோகர் சுவாமிகளின் குருபூசைதின விழா 05.04.2009 அன்று யாழ் மாவட்டத்தில் பல்வேறு இடங்களிலும் வெகு சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

- அன்னை அருள்மலர் நூல் வெளியீடு 05.04.2009 அன்று வெளியிடப்பட்டது. இந்நூல் அமரத்துவமடைந்த அருட்கவி கலாநிதி சீ. விநாசித்தம்பிப்புலவர் அவர்களால் அருளிச் செய்யப்பெற்றது.

- அகில இலங்கை இந்துமாமன்றம் நடாத்தும் நிறைமதிநாள் கருத்தரங்கும் கருத்தாடலும் நிகழ்வு- (03) மன்ற மண்டபத்தில் 09.04.2009 அன்று "பெரியபுராணம் காட்டும் வாழ்வியல்" எனும் கருப்பொருளில் இடம்பெற்றது. இந்நிகழ்விற்கு கருத்துரைஞர்களாக திரு கு. ரஜீவன், திருமதி நாச்சியார் செல்வநாயகம் அவர்களும் கருத்தாடல் இணைப்பாளர்களாக கவிஞர் சோ. பத்மநாதன், செல்வி செல்வஅம்பிகை நடராஜா, திரு ம.பா. மகாலிங்கசிவம், திரு ச. லலீசன் அவர்களும் இணைந்து பங்காற்றினார்கள். இந்நிகழ்வானது ஒவ்வொரு மாதமும் ஒழுங்குபடுத்தப்பட்டு நடாத்தப் படுகின்றது.

- தொண்டைமானாறு ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயத்தில் புதிதாக இணையத்தளம் ஒன்று 10.03.2009 வெள்ளியன்று அங்குரார்ப்பணம் செய்துவைக்கப்பட்டது. www. sannithy. com என்ற இணையத்தள முகவரியூடாக ஆலயம் சம்பந்தமான விபரங்களை பெற்றுக்கொள்ள முடியும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

- தெல்லிப்பளை துர்க்காதேவி தேவஸ்தானத்தில் இலவச சித்த ஆயுள்வேத வைத்தியசாலைக்குரிய புதிய கட்டிடத்தை 10.04.2009அன்று பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ. கேதீஸ்வரன் திறந்து வைத்தார்.

- அகில இலங்கை சைவப்புலவர் சங்கத்தால் நடாத்தப்படும் சைவப்புலவர், இளஞ்சைவப்புலவர் தேர்வுகள் இவ்வாண்டு மே மாதம் 09,10,11ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது.

- வல்வெட்டித்துறை மூத்த பிரஜைகள் அவை 19.04.2009 அன்று அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது. இந்நிகழ்வில் T. கிருபாகரன், S. சுரேந்திரா, T. துஷ்யந்தன் ஆகியோர் பங்குபற்றினர்.

- நல்லைக்கந்தனின் வருடாந்த மகோற்சவ தினத்தையொட்டி யாழ் மாநகராட்சி மன்ற சைவ சமய விவகார குழுவினரின் ஏற்பாட்டில் 17ஆவது நல்லைக்குமரன் மலர் வெளியிடப்படவுள்ளது. அம்மலருக்கான ஆக்கங்கள் யூன் 30ஆம் திகதிக்கு முன்னர் அனுப்புமாறு கேட்கப்பட்டுள்ளது.

- யாழ் மாவட்டத்தின் பல இந்து ஆலயங்களிலும் மன்றங்களிலும் திருநாவுக்கரசு நாயனார் குருபூசை 20.04.2009 திங்கட்கிழமை பக்திபூர்வமாக நடைபெற்றது.

- சந்நிதியான் ஆச்சிரமத்தினால் வருடாவருடம் வெகு விமரிசையாக கொண்டாடப்படும் வைகாசிப்பெருவிழா இவ்வருடமும் 05.06.2009 அன்று ஆச்சிரம மண்டபத்தில் பல விஷேட நிகழ்வுகளுடன் கொண்டாடப்பட உள்ளது.

- வல்வை ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலய வருடாந்தப் பெருவிழா 25.04.2009 ஆரம்பமாகி 08.05.2009 வெள்ளி ரத உற்சவமும் 09.05.2009 தீர்த்த உற்சவமும் இடம்பெறும்.

உ

# நரை

**வாரியார் சுவாமிகள்**

**கறுத்த குஞ்சியுமே நரையாமிட:**

இளமையில் கறுத்திருந்த தலைமயிர் முதுமையில் பஞ்சுபோல் நரைத்து வெண்மையாகிவிடும். மனிதன் இந்த நரையையுடையவன் ஆதலின் "நரன்" என்ற நாமத்தை உடையவனானான். மனிதனைத் தவிர வேறு எந்த உயிர்களுக்கும் நரைப்பதில்லை. காக்கை, பன்றி, யானை, கரடி முதலிய உயிர்கட்கு மயிர் எப்போதும் கருமையாக இருப்பதை உற்றுநோக்குமின்.

சிலர் நரைக்கத் தொடங்கியவுடன் வருந்தவும் செய்கின்றனர். "வயது என்ன? முப்பதுதானே ஆகிறது? இதற்குள் நரைத்துவிட்டதே? தேன் பட்டுவிட்டது போலும்" என்பர். "பித்த நரை" என்பர். எல்லாம் இறைவனுடைய திருவருள் ஆணையால் நிகழ்கின்றன. "அவனன்றி ஓரணுவும் அசையாது", அரிது அரிது மானுடராதல் அரிது", "எண்ணரிய பிறவிதனில் மானுடப் பிறவிதான் யாதினும் அரிது அரிது" என்ற ஆன்றோர்களது திருவாக்கின்படி உயர்ந்த பிறவியாகிய இந்த மனிதப் பிறவிக்கு நரையை ஏன் ஆண்டவன் தந்தனன்? மற்ற உயிர்களுக்கு உள்ளதுபோல் மனிதனுக்கும் மரண பரியந்தம் மயிர் கடுமையாக இருக்கும்படி ஏன் அமைக்கக் கூடாது? அதனால், அருமையும் நஷ்டமும் இராவே. சிலர் வெளுத்த மயிரைக் கறுக்க வைக்கப் பெரிதும் முயல்கின்றனர். அதற்காக அரிய நேரத்தையும் செலவழிக்கின்றனர். அன்பர்கட்கு இது நன்கு சிந்தித்து உய்வதற்குரிய சிந்தனையாகும்.

மனிதனைத் தவிர ஏனைய பிறப்புக்களெல்லாம் பகுத்தறிவின்றி உண்டு உறங்கி வினைகளைத் துய்த்துக் கழிப்பதற்கு மட்டும் உரியனவாம். மனிதப்பிறவி அது போன்றதன்று. எத்தனையோ காலம் அரிதின் முயன்று ஈட்டிய பெரும் புண்ணியத்தால் இப்பிறவி கிடைத்தது.

**"பெறுதற்கரிய பிறவியைப் பெற்றும்**
**பெறுதற்கரிய பிரானடி பேணார்"**

என்பர் திருமூலர்.

இத்தகைய அருமையிலும் அருமையாகிய பிறவியைப் பெற்றுப் பிறவியின் பயனாகிய பிறவாமையைப் பெறுதற்குரிய சாதனங்களை மறந்து அவநெறிபுக்கு அலைந்துழலா வண்ணம் இவ்வுடம்பு ஒரு படித்தாக இராது என்றும், முதுமையும் மரணமும் விரைந்து நெருங்கி வந்துகொண்டிருக்கின்றன என்றும் நினைவு கூர்தற்பொருட்டு இறைவன் நமக்கு நரையைத் தந்திருக்கிறான். நரை ஒரு பெரிய பரமோபகாரமான சின்னமாகும். நரைக்கத் தொடங்கியதிலிருந்தாவது மனிதன் தன்னை மாற்றியமைக்க வேண்டும்; மனிதனுடைய வாழ்க்கை மாறுதல் அடைந்து சன்மார்க்க

**பலர்முன் பயனில்லாதனைக் கூறுபவன் அனைவராலும் வெறுக்கப்படுவான்.**

நெறியில் நிற்போர் நரைக்கத் தொடங்கிய பின் அதில் மூழ்கித் திட்டமாக நிற்கவேண்டும். "ஐயனே! நரை வந்துவிட்டதே! இனி, விரைந்து முதுமையும் மரணமும் வருமே! கூற்றுவன் பாசக்கயிறும் வருமே! இது காறும் என் ஆவியீடேத்தற்குரிய சிந்தனையை ஏழையேன் செய்தேனில்லை. இனியாவது அதில் தலைப்படுவேன். என்னைத் திருவருளால் ஆட்கொண்டருள்வாய்" என்று துதிக்க வேண்டும்.

நரை வந்தும் நல்லுணர்வின்றி அலையும் மனிதர் மிகவும் கீழ்மக்களாவர். இதுபற்றிச் சங்ககாலத்துப் புலவராகிய நரிவெரூஉத்தலையார் கூறுகின்றார்.

**"பல்சான் றீரே பல்சான் றீரே**
**கயல்முள் அன்ன நரைமுதிர் திரைகவுள்**
**பயனில் மூப்பின் பல்சான் றீரே**
**கணிச்சிக் கூர்ம்படைக் கடுதிற லொருவன்**
**பிணிக்குங் காலை இரங்குவீர் மாதோ**
**நல்லது செய்தல் ஆற்றீ ராயினும்**
**அல்லது செய்தல் ஓம்புமின் அதுதான்**
**எல்லாரும் உவப்பது அன்றியும்**
**நல்லாற்றுப் படூஉம் நெறியுமா றதுவே.**

**-புறநானூறு-**

**இதன் கருத்து:**

"மீன்முள் போல நரைத்து திரைத்த தாடையுடன்கூடி ஒரு பயனுமில்லாமல் மூத்துக் கிடக்கும் பலராகிய மூத்தோர்களே! மழுவைத் தாங்கிய கூற்றுவன் இனி விரைவில் வருவான். அப்போது நீங்கள் வருந்துவீர்கள். நல்லது செய்தல் இனி உங்கள் தளர்ந்த வயதில் முடியாமலிருக்கலாம். ஆயினும், நல்லது அல்லாததாவது செய்யாமலிருக்க முயலுங்கள். அதுதான் இனி எல்லோரும் மகிழக்கூடியது. அந்தப் பழக்கம் ஒருகால் உங்களை நல்லது செய்யும் நன்னெறியில் விட்டாலும் விடும்"

கருமை நிறம் தாமத குணம், வெண்மை நிறம் சத்துவ குணம்; வயது ஏற ஏற சத்துவகுணம் அடையவேண்டும் என்ற குறிப்பை உணர்த்தவும் இறைவன் நமக்கு நரையைத் தந்தருளினான். நன்கு சிந்தியுங்கள்; ஒரேநாளில் திடீரென்று எல்லா மயிர்களும் ஒன்றாக நரைத்து விடுவதில்லை. ஒவ்வொன்றாக நரைக்கிறது. அங்ஙனம் நரைக்குந்தோறும் நல்லுணர்வு பெறவேண்டும். ஒவ்வொரு தீக்குணத்தையும் விட வேண்டும்.

"நத்துப் புரைமுடியீர் நல்லுணர்வு சற்றுமலீர்" என்று வள்ளியம்மையார் கிழவடிவில் வந்து தன்னை விரும்பிய முருகவேளைக் குறித்துக் கூறினார். இவற்றையெல்லாம் நுனித்துணர சுவாமிகள் "கறுத்த குஞ்சியுமே நரையாமிட" என்று அருள் செய்தனர்.

**அறிவுக்கு முன் கர்வம் வரும். வீழ்ச்சிக்குமுன் திமிர் வரும்.**

உ

# பெரிவாயின் முள்ளியாரின் ஆசாரக்கோவை

### பாயிரம்

**ஆர் எயில் மூன்றும் அழித்தான் அடிஏத்தி**
**ஆரிடத்துத் தான் அறிந்த மாத்திரையான் ஆசாரம்**
**யாரும் அறிய அறனாய மற்றவற்றை**
**ஆசாரக் கோவை எனத் தொகுத்தான், தீராத்**
**திருவாயி லாய திறல்வண் கயத்தூர்ப்**
**பெருவாயின் முள்ளி என்பான்.**

வலிமை மிக்க திரிபுரம் என்னும் மூன்று பறக்கும் கோட்டைகளை தன் நெற்றிக் கண்ணால் அழித்த சிவபெருமான் திருவடி தொழுது, வேத நூல்களில் விரித்துரைக்கப்பட்டவற்றில் நான் கற்றுணர்ந்த ஒழுக்க நெறிகளை என்னைப்போலவே எல்லாரும் அறியவேண்டும் என்பதற்காக - அந்த அறநெறிகளை - ஆசாரக்கோவை எனத் தொகுத்துள்ளேன்; தீராத வளமுடைய, திருமகளின் வாயில்போல விளங்கும், சிறந்த வண்கயத்தூர் என்னும் ஊரினனான பெருவாயில் மகனான முள்ளி என்பவனாகிய நான்.

ஆர்- வலிமை; எயில்- கோட்டை; ஆரிடம்- வேதநூல்; மாத்திரை- அளவு; ஆசாரம்; ஒழுக்கம்; திருவாயில்- திருமகள் வாழுமிடம்.

### 1. ஒழுக்கத்துக்கு உயிரான எட்டு

**நன்றி அறிதல் பொறை உடைமை இன்சொல்லோடு**
**இன்னாத எவ்வுயிர்க்கும் செய்யாமை கல்வியோடு**
**ஒப்புரவு ஆற்ற அறிதல் அறிவுடைமை**
**நல்லினத் தாரோடு நட்டல் இவைஎட்டும்**
**சொல்லிய ஆசார வித்து.**

பிறர் செய்த உதவியை உணர்ந்து அதற்கு நன்றி பாராட்டுதல், பொறுமை உடையவராயிருத்தல், இனிய சொற்களையே பேசுதல், எந்த உயிர்க்கும் துன்பம் தரும் எதையும் செய்யாதிருத்தல், கற்றறிதல், உலகத்தோடு ஒட்டிவாழ எண்ணுதல், அறிவுடைய பெரியோரைத் துணையாகக் கொண்டிருத்தல், நல்ல குணம் உடையவர்களோடு நட்புக்கொண்டிருப்பது என்னும் எட்டு உயர் பண்புகளே ஒழுக்கத்தின் உயிர் நாடியாகும்- ஒழுக்கநெறி என்னும் உயர்விளைச்சலுக்கு- விதையாகும்.

பொறை- பொறுமை; இன்னா- துன்பம்; ஒப்புரவு- உலக ஒழுக்கம்; வித்து- விதை.

## 2. ஒழுக்கமுடன் வாழ்வதால் என்ன பயன்?

**பிறப்பு நெடுவாழ்க்கை செல்வம் வனப்பு**
**நிலக்கிழமை மீக்கூற்றம் கல்வி நோயின்மை**
**இலக்கணத்தால் இவ்வெட்டும் எய்துப என்றும்**
**ஒழுக்கம் பிழையாதவர்.**

உயர்குடியில் பிறக்கும் பெருமை, நீண்டநாள் உயிர் வாழ்தல், செல்வச் சிறப்பு, அழகிய தோற்றம், நிலத்துக்கு உரியோராதல், சொல்லாட்சி, கல்வி அறிவு, நோயற்ற வாழ்வு- என உயரிய வாழ்வுக்கு இலக்கணமாகக் கூறப்பட்ட எண்வகைச் சிறப்பினையும், ஒழுக்கநெறி தவறாது நடப்பவர்கள் வாழ்வில் சிறப்பு அடையப்பெறுவார்கள்.

வனப்பு- அழகு; கிழமை- உரிமை; மீக்கூற்றம்- மேலான சொல்;
பிழையாதவர்- தவறாதவர்.

## 3. காக்க வேண்டிய கடமைகள்

**தக்கிணை வேள்வி, தவம், கல்வி இந்நான்கும்**
**முப்பால் ஒழுக்கினால் காத்துய்க்க உய்யாக்கால்**
**எப்பாலும் ஆகாக் கெடும்.**

கற்பித்த ஆசிரியருக்குக் காணிக்கை தருதல், வேள்வி செய்தல், தவம் மேற்கொள்ளுதல், கற்றறிதல் ஆகிய நான்கினையும்; அறம் பொருள் இன்பம் என வகுத்த முப்பால் கூறும் வழியில் காத்து வளர்க்கவேண்டிய கடமையாகக் கொள்க. அப்படிக் கொள்ளாவிட்டால் எவ்விடத்தும் இவற்றால் உண்டாகும் பயன் கிடைக்காமல் பாழ்படும்.

தக்கிணை- காணிக்கை; உய்த்தல்- கொள்ளுதல்.

## 4. காலையில் எழுக ~ பெற்றோரைத் தொழுக

**வைகறை யாமம் துயில் எழுந்து தான் செய்யும்**
**நல்லறமும் ஒண்பொருளும் சிந்தித்து வாய்வதில்**
**தந்தையும் தாயும் தொழுது எழுக என்பதே**
**முந்தையோர் கண்ட முறை.**

விடியற்காலைப் பொழுதில் விழித்தெழுந்து, தான் அன்று செய்யவேண்டிய நல்லறப் பணிகளையும், உயர்ந்த பொருள் பற்றியும் எண்ணி ஆராய்ந்து, தவறாது தாய் தந்தையைத் தொழுது எழவேண்டும் என்பதே நம் முன்னோர் கண்ட வாழ்க்கை முறையாகும்.

வைகறை- விடியும் அதிகாலைப் பொழுது; யாமம்- நேரம்; ஒண்- சிறந்த;
வாய்வதில்- தவறாது.

(தொடரும்...

**உண்மையான வள்ளல் எவனோ அவனே உண்மையான அரசன்.**

உ

# சந்நிதியான்

**திரு ந. அரியரத்தினம் அவர்கள்**



புலம்பெயர்ந்தவர்கள் உடலால் புலம்பெயர்ந்து சென்றாலும் உள்ளத்தால் இந்த மண்ணைப்பற்றியும் தமது உறவுகளைப்பற்றியுமே சிந்திப்பவர்களாக வாழ்ந்துகொண்டிருக்கின்றனர்.

புலம்பெயர்ந்து சென்றுள்ள ஒவ்வொருவரிலும் இந்த உணர்வுகள் எந்தளவுக்கு செயற்படுகின்றது என்பதற்கு இலண்டனுக்கு புலம்பெயர்ந்து சென்று அண்மையில் ஜெனிவாவில் தனது தாயக மண்ணுக்காக தன் உயிரைக் காணிக்கை ஆக்கிய முருகதாஸ்மூலம் இதனை நன்கு உணர்ந்துகொள்ள முடிகின்றது.

இதேபோன்று இங்கிருந்து புலம்பெயர்ந்து வேறு நாடுகளுக்குச் செல்கின்ற நிலையிலும் எமது மண்ணில் வாழ்கின்ற மக்கள் இங்குள்ள ஆலயங்கள், இங்கே தாம் வணங்கிய குலதெய்வங்கள் என அனைத்தையும் தமது உள்ளங்களிலேயே உள்வாங்கி அவ்வாறான தாயகம் சார்ந்த ஆன்மீக உணர்வுகளுடனேயே வாழ்ந்து கொண்டிருக்கின்ற ஏராளம் மக்களையும் நாம் காண முடிகிறது.

அதுமட்டுமல்ல இதற்குமேலே ஒருபடி சென்று தனக்கிருந்த ஆன்மீக ஈடுபாட்டினால் திரும்பிவந்து தனது சொத்து சுகம் அனைத்தையும் இந்த மண்ணுக்கே காணிக்கையாக்கி இறுதியில்

**தன்னைப் பூரணமாய் அறியாதவன் ஒருநாளும் பிறரைச் சரியாக அறியமாட்டான்.**

சந்நிதியானது மண்ணிலேயே சங்கமம் ஆகிய அன்பர் ஒருவரது உருக்கமான வாழ்வியல் நிகழ்வை அடியார்களுடன் பகிர்ந்துகொண்டிருக்கின்றோம்.

சொந்த இடம் கைதடி. குடும்பத்தில் இளையபிள்ளை பெயர் வேலாயுதம். தனது படிப்பை பரமேஸ்வராக் கல்லூரி விடுதியில் தங்கிக் கற்றுக் கொண்டவர். இளமையில் துடிப்புள்ள இளைஞனாக மட்டுமன்றி எந்த முடிவையும் தானே தீர்மானித்துச் செயற்படும் ஒரு விஷேட இயல்புள்ளவராகவும் இவர் காணப்பட்டார்.

தனது துணையையும் தனது விருப்பத்தின்படியே தேடிக்கொண்டார்கள். கிளிநொச்சிப் பாற்சாலையில் முகாமையாளராகச் செயற்பட்ட வேலாயுதம் வேலையில் சுறுசுறுப்பும் ஆற்றலும் நிறைந்தவராகக் காணப்பட்டார்கள். கிளிநொச்சிப் பாற்சாலை விரிவடைந்து தொழிற்துறை சார்ந்த ஒரு அமைப்பாக மாற்றமடைந்தபொழுது அதில் முக்கிய துறையான பயிரிடல்ப் பகுதிக்குப் பொறுப்பான முகாமையாளராகவும் செயற்பட்டார்கள்.

திரு வேலாயுதம் கிளிநொச்சி பாற்சாலையில் கடமையாற்றிக்கொண்டு இருக்கும் காலகட்டத்தில் 1988ஆம் ஆண்டளவில் சந்நிதியான் ஆச்சிரமத்துடன் அவருக்குத் தொடர்பு ஏற்பட்டது. காரைநகரைச் சேர்ந்தவரும் தபால் அதிபருமான தியாகராஜா அவர்களுடன் சந்நிதியானைத் தரிசிக்க வந்த வேலாயுதம் திரு தியாகராஜா அவர்களின்மூலம் சந்நிதியான் ஆச்சிரமத்துடன் தொடர்புகளை ஏற்படுத்திக்கொண்டார்கள்.

ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயமே தஞ்சமென ஆலயத்திலும் ஆலயச்சூழலிலும் தங்கியிருக்கின்ற அன்பர்களின் உணர்வலைகள், ஆச்சிரமத்தில் இடம் பெறுகின்ற நித்திய அன்னதானப்பணியின் சிறப்பு, அந்த அன்னதானத்தால் பயன் அடையும் அடியார்களது உள்ளம் அடைகின்ற திருப்தி என்பவை தொடர்பாக திரு வேலாயுதம் மேலோட்டமாக அல்லாமல் சற்று ஆழமாகத் தனது பார்வையை செலுத்தமுற்பட்டார்கள்.

ஸ்ரீ செல்வச்சந்நிதி முருகனை வழிபடவருகின்ற அடியவர்களுக்கும், பல்வேறு மக்களுடன் ஆலயமே தஞ்சமென ஆலயத்தில் தங்கியிருக்கின்ற அன்பர்களுக்கும் சந்நிதியான் ஆச்சிரமத்தில் தொடர்ச்சியாகவும், நேர்த்தியாகவும், நிறைவாகவும் அன்னதானச் செயற்பாடுகள் இடம்பெறுவதை திரு வேலாயுதம் அவதானித்தார்கள்.

இங்கே இடம்பெறுகின்ற நித்திய அன்னதானப்பணியினூடாக மனிதாபிமானம், மனித தர்மம் என்பவை எல்லாம் எவ்வளவு தூய்மையாகவும் அடக்கமாகவும் நிறைவு செய்யப்படுகின்றன என்பதையும் திரு வேலாயுதம் அமைதியாக மீட்டுப்பார்த்தார்கள்.

அதேநேரம் வேண்டியவற்றை வேண்டுவோர்க்கு அள்ளிவழங்கும் கலியுகக்கந்தன் சந்நிதிமுருகனை தான் வழிபட ஆரம்பித்தது தொடக்கம் தனது உள்ளத்தில் ஏற்பட்டுள்ள அமைதி, சாந்தி, அதுமட்டுமல்ல அவனை உள்ளம் உருகி வழிபடுவதனூடாகக் கிடைக்கின்ற அருட்கடாட்சம் என்பவற்றை எல்லாம் திரு வேலாயுதம் அனுபவத்தால் உணர்ந்துகொண்டார்கள்.

இவை எல்லாம் திரு வேலாயுதம்

அவர்களுடைய உள்ளத்தில் ஆழமாகப் பதிந்து அவருடைய உள்ளத்தைத் தொடுகின்ற விடயங்கள் ஆகிவிட்டதால் சந்நிதியானுடனும், சந்நிதியான் ஆச்சிர மத்துடனும் தனது தொடர்புகளை மேலும் இறுக்கமானதாக ஆக்கிக்கொண்டார்கள்.

1980 ஆம் ஆண்டு தசாப்தத்தின் இறுதிப்பகுதியிலிருந்து யாழ் குடாநாட்டில் பல்வேறு நெருக்கடிகள் உருவாக ஆரம் பித்துவிட்டன. A9 வீதியினூடாக போக்கு வரத்து சிக்கலடைய ஆரம்பித்தது. யாழ் குடாநாட்டில் அரிசித்தட்டுப்பாடு ஏற்படத் தொடங்கியது. இடப்பெயர்வு, வேலை இல்லாப் பிரச்சினை, பொருளாதாரப் பிரச்சினை, மற்றும் சமூகப்பிரச்சினைகள் போன்றவற்றை எல்லாம் மக்கள் முதன் முறையாக எதிர்கொள்ள ஆரம்பித்தனர்.

இக்காலகட்டத்தில் காலமறிந்து, தேவை அறிந்து சந்நிதியான் ஆச்சிரமம் சந்நிதியானைத் தரிசிக்கவருகின்ற அடி யவர்களுக்காகவும், சந்நிதியானே தஞ்ச மென ஆலயச்சூழலில் தங்கியிருக்கின்ற அன்பர்களுக்காகவும் தனது நித்திய அன்னதானப்பணிகளைச் சிறிது சிறிதாக விரிவுபடுத்திச்செல்ல ஆரம்பித்தது. இவ் வாறான ஒரு சூழ்நிலையில்த்தான் திரு வேலாயுதம் சந்நிதியான் ஆச்சிரமத்துடன் தொடர்புகளை ஏற்படுத்திக்கொண்டார்கள். அதுமட்டுமல்ல அங்கே இடம்பெற்றுக் கொண்டிருந்த நித்திய அன்னதானப் பணிகளுக்கும் முடிந்தளவு உதவிகளை யும் செய்ய முன்வந்தார்கள்.

இக்காலத்தில் யாழ்குடாநாட்டில் மோசமான அரிசித்தட்டுப்பாடு நிலவிய தால் ஆச்சிரமத்தின் சுவாமிகள் சில தொண்டர்களுடன் கிளிநொச்சிக்குத் துவிச் சக்கரவண்டியில் சென்று அங்கே நெல் லைச் சேகரித்துவந்து இங்கே அரிசி யாக்கி அன்னதானச் செயற்பாட்டை முன் எடுக்கவேண்டிய கட்டாய சூழ்நிலையும் ஏற்பட்டது. அத்தகைய செயற்பாடுகளின் பொழுது ஆச்சிரமத்தின் சுவாமிகளுடன் இணைந்து திரு வேலாயுதம் கிளிநொச்சி யில் பல அன்பர்களிடம் சென்று ஆச்சிர மத்திற்கு நெல்லினை சேகரிப்பதற்குத் தனது மனப்பூர்வமான பங்களிப்பை வழங்க முன்வந்தார்கள். அதுமட்டுமல்ல கிளிநொச்சியில் தனக்குச் சொந்தமாக இருந்த 5 ஏக்கர் வயற்காணியிலிருந்து குத்தகையாகக் கிடைக்கும் நெல்லினை ஆச்சிரமத்திற்கு கிடைப்பதற்கும் ஒழுங்கு களை மேற்கொண்டார்கள்.

1990ஆம் ஆண்டு தசாப்தத்தின் ஆரம்பப்பகுதியில் கிளிநொச்சிப் பகுதி யிலும் இராணுவ நெருக்கடிகள் ஏற்பட ஆரம்பித்தன. இந்தச்சூழ்நிலையில் திரு வேலாயுதம் தாவடியைச் சேர்ந்த திரு நடராஜா அவர்களிடம் தனது பொறுப்புக் களை ஒப்படைத்துவிட்டு கொழும்புக்குச் சென்று அங்கே தமது நிறுவனத்தின் தலைமைக் காரியாலயத்தில் ஆறுமாதம் அளவில் கடமையாற்றினார்கள்.

ஆனாலும் அந்த வேலையில் திருப்தி அடையாத திரு வேலாயுதம் இலங்கையிலிருந்து புலம்பெயர்ந்து இலண்டனுக்குச் சென்று அங்கே தனக் குப் பொருத்தமான வேலையைத் தேடிக் கொண்டார்.

ஆம் எல்லோரையும்போலவே தாயகமண்ணில் வாழமுடியாத நிலையில் தாயகத்தில் இருந்து புலம்பெயர்ந்து சென்ற ஒரு சராசரி மனிதனாகவே திரு வேலாயுதம் இலண்டனுக்குப் புலம் பெயர்ந்து சென்றார்.

ஆனால் நாம் அறிந்தவரை ஒரு சராசரி மனிதன் செய்யத் துணியாத அளவுக்கு, செய்யமுடியாத அளவுக்குத் தாயகமண்ணில் இறை பணிக்காக அவர் செய்த பொருள் உதவிகள் ஒரு வித்தியாசமான வியத்தகு விடயமாகவே அமைந்துள்ளது.

அதுமட்டுமல்ல சந்நிதியானிடம் அளவுகடந்த பக்திகொண்டிருந்த திருவேலாயுதம் உலகத்தில் எல்லாவிதமான அன்பையும்விட இறைவனிடம் நாம் செலுத்துகின்ற அன்புதான் உண்மையானது. உத்தமமானது, நிலையானது என்பதைத் தனது வாழ்வியல் அனுபவத்தால் நன்கு உணர்ந்து கொண்டார்கள்.

அவ்வாறு உணர்ந்துகொண்டது மட்டுமல்ல அதனை உறுதிசெய்யும் வகையில் அவர் தனது வாழ்க்கையில் மேற்கொண்ட வித்தியாசமான செயற்பாடுகளையும் சந்நிதியில் அவர் மேற்கொண்ட விநோதமான அந்த முடிவினையும் அடியார்களுக்கு அடுத்த மலரில் வெளிப்படுத்துகின்றோம்.

(தொடரும்...

## முக்தி அடைய வழி

பக்தி செய்தால் எளிதில் முக்தி பெறலாம். நந்தனார் பாடுகிறார். "பக்தி பண்ணிக் கொண்டிருந்தால் முக்தி பெறலாமே"

நீங்கள் காட்டுக்குப்போக வேண்டாம், காய்கனி, கந்த மூலகங்களை உண்ணவேண்டாம், தலைகீழாக நிற்கவேண்டாம், அதெல்லாம் வழியில்லை.

சென்னையில் ஒரு தெரு உண்டு. தங்கசாலை என்றதெரு வழியாகச் சென்றுகொண்டே இருந்தால் அதே தெரு பாதிக்குமேல் திருவொற்றியூர் நெடுஞ்சாலையாக மாறிவிடும். அதுபோல இறைவனை நினைத்து நினைத்து, பயன் கருதாமல் உருகிய உள்ளத்துடன் பக்தி செய்தால் முக்தி வந்துசேரும். "முக்திக்கு வழி பக்தி" என்பதை உணர்ந்து எல்லோரும் பக்திசெய்ய வேண்டும்.

பக்தி என்பது வடசொல். அன்பு என்பது தென்சொல். இறைவனை அன்பு ஒன்றால்த்தான் அடையமுடியும். "பக்தி வலையில் படுவோன் காண்க" என்று கூறுகின்றார் மாணிக்கவாசகர். "அன்பெனும் பிடியுள் அகப்படும் மலையே" என்கின்றார் ராமலிங்க அடிகளார். "மூன்றுவேளை நன்றாகச் சாப்பிடுங்கள். நன்றாக ஆடை அணிந்து கொள்ளுங்கள். ஆபிசுக்குப் போய்க்கொள்ளுங்கள். ஆனால் உள்ளத்தில் பக்தி இருக்கவேண்டும். பக்தி இருந்தால் தெய்வம் உங்களைத் தேடிக்கொண்டு வரும். வேலை செய்தால் கூலி தானாக வரும்தானே? வேலைக்குத் தகுந்த கூலி நிச்சயமாகக் கிடைக்கும். சோம்பேறித்தனமாக இருந்தால் எவன் கூலி தருவான்? "ஓம் நமச்சிவாய நம" என்பதை விட ஒரு மகாமந்திரம் சைவர்களுக்குக் கிடையாது. "சிவாயநம என்று சிந்தித்திருப்போருக்கு அபாயம் ஒருநாளும் இல்லை" என்கிறார் ஔவையார். மற்றச் சமயத்தவர்கள் அவரவர் தெய்வங்களின் மகாமந்திரங்களைத் தினசரி சொல்லி ஜெபசக்தி பெறவேண்டும். நித்திய வாழ்க்கையில் ரயிலில் போகிறபோதும், பஸ்ஸில் போகிறபோதும், காரில் போகிறபோதும், சைக்கிளில் போகிறபோதும் அல்லது எந்த வாகனத்தில் பிரயாணம் செய்யும் போதெல்லாம் உங்கள் வாழ்நாளில் எத்தனைக் கெத்தனை மகாமந்திரங்களை விடாமல் சொல்லிக்கொண்டே வந்தால் அத்தனைக்கத்தனை மகாமந்திரம் கடைசியாக உங்கள் ஆத்மா பிரியும்போது ஒரு தொகையாக வரும். நாமும் எப்பொழுதும் மகா மந்திரங்களை ஓதிக்கொண்டிருப்போம்.

சோம்பலைப் போக்கு அப்போதுதான் நீ சுதந்திரமான மனிதனாகிறாய்.

# திருக்கடவூர்

# திருக்கடவூர் மயானம்

**திரு வல்வையூர் அப்பாண்ணா அவர்கள்**

குறித்த நாளும் வந்தது. யமன் பாசக்கயிற்றை வீச மார்க்கண்டேயர் சிவ லிங்கத்தைக் கட்டிப்பிடித்துக் கொண்டார். எமனின் பாசக்கயிறு மார்க்கண்டேயரை யும் லிங்கத்தையும் சுற்றி வீழ்ந்தது. லிங்கத்தைப் பிளந்து வெளியே வந்த இறைவன் 1. தன் இடது காலால் காலனை உதைத்தார். யமன் செத்து வீழ்ந்தான்.

பாலகனின் அன்புக்கும் பக்திக்கும் கட்டுப்பட்டு காலனையே சம்ஹாரம் செய்த காலசம்ஹார மூர்த்தி யாகச் சிவப்பரம்பொருள் திருக்கடவூரில் எழுந்தருளி இருக்கிறார். திருக்கடவூர் (திருக்கடையூர்) மயிலாடுதுறையிலிருந்து 20 கி.மீ தூரத்தில் உள்ளது. சீர்காழி-தரங்கம்பாடிச் சாலையில் பயணித்தால் நேராக திருக்கடவூரை அடையலாம். குங்குலியக்கலய நாயனார் காரி நாயனார் பிறந்து வாழ்ந்து முத்திபெற்ற இடமும் இதுவே.

அஷ்டவீரட்டான ஸ்தலங்களுள் ஒன்றான திருக்கடவூரின் ராஜகோபுரம் வானளாவ உயர்ந்து நின்று நம்மை வரவேற்கிறது. ஏழு நிலைகள் கொண்ட ராஜகோபுரத்தில் நிறையவே அழகுமிகு சுதைச் சிற்பங்கள். அண்மையில் வர்ணம் பூசப்பட்டிருப்பதால் சிற்பங்கள் தகதக வென ஜொலித்துக்கொண்டிருந்தன.

ரிஷப வாகனத்தில் பரமேஸ்வரி சமேத பரமேஸ்வரன் நடுநாயக மாக வீற்றிருக்க, பாற்கடலைக் கடைதல், கஜ சம்ஹாரம், சிவபாதவிருதயர் தோளில் திருஞானசம்பந்தர் ஸ்தல விஜயம், இன்னும் ....... இன்னும்....... எத்தனை..... எத்தனை.... வரலாறு கூறும் சுதைச் சிற் பங்கள் கோபுரத்தின் நான்கு பக்கங்களி லும் கோபுரத்தின் பிற்பக்கம் உள்ள ஒரு அழகுருவான சுதைச்சிற்பம் நம் கண் ணையும் கருத்தையும் கவருகின்றது. "அப்பர் பெருமான் எங்குற்றார்" என்று ஞானசம்பந்தர் கேட்க, "அடியேன் தங் களைச் சுமக்கும் பாக்கியம் பெற்று இங்குற்றேன்" என்றபடி அப்பர் பெருமான் நான்கு பேருடன் தானும் ஒருவராக சிவிகை சுமந்துவரும் காட்சி தத்ரூபமாக கண்முன்னே தெரிகிறது.

---

**1. ஸ்தலத் திருப்புகழ்- பாடல் ௭- வரி 16, "..... சிவபத்தினி கூற்றினை மோதிய பத சத்தினி...." திருப்புகழ்**

**ஸ்தலத் திருப்புகழ்- பாடல் 11- வரி 21, "........ கூற்றுவனைக் காய்ந்த அபிராமி....." திருப்புகழ். இறைவன் அர்த்தநாரீஸ்வரர் ஆனதாலும், வாரியார் சுவாமிகளின் வளம் மிகுந்த பொழிப்புரையின்பாலும் அம்பிகையே யமனைக் காலால் உதைத்தார் என்பது கருத்தில் கொள்ளப்படவேண்டும்.**

---

அடுத்து, மேற்குப் பார்த்தபடியான "முனீஸ்வரன் கோபுரம்" என்று அழைக்கப்படுகின்ற உட்கோபுரம். இடையே திறந்த அகன்ற பிரகாரத்தை வலம் வந்தால் கிழக்கே ஒரு சிறிய கோபுரமும் "அமிர்தபுஷ்பகரணி" தீர்த்தக்குளமும் தெரிகிறது. தெற்குவீதி முழுவதும் அழகிய நந்தவனம். தமிழ்நாட்டின் வேறு எந்தக் கோயிலிலும் நாம் பார்க்கமுடியாத அழகுச்சோலை யாக நந்தவனத்தைப் பராமரிக்கிறார்கள். மாலை நேரத்தில் ஒரு மணிநேரம் மட்டுமே நந்தவனத்தின் உள்ளே செல்ல அனுமதியுண்டு. ஏனைய நேரங்களில் பிரகாரத்தில் நின்றபடியே நந்தவனத்தைக் கண்குளிரப் பார்த்து ரசிக்கலாம்.

தென்மேற்கு மூலையில் கிழக்குப் பார்த்தபடியுள்ள அபிராமி அம்பிகையின் தனி ஆலயம். அகிலாண்ட கோடி பிரமாண்ட நாயகியாம் பரமேஸ்வரி திருக்கடவூரில் அன்னை அபிராமியாக அருள் பாலிக்கும் இடம். அபிராமி என்றாலே "மேலான அழகுடையவள்" எனச் சான்றோர் பொருள் கூறுவர். பெயரிலும் அழகு... வடிவிலும் அழகு... அழகே உருவானவள் இந்த அபிராமி. அன்னையின் காதுகளில் ஒளிரும் தாடங்கம் (தோடுகள்) நம் கவனத்தை ஈர்க்கின்றன. தன் பக்தன் சுப்பிரமணிய ஐயருக்காக (அபிராமிப்பட்டர்) தாடங்கத்தைக் கழற்றி எறிந்து அமாவாசை நாளில் முழுநிலவை வரவழைத்தவள் இந்த அபிராமித்தாய். "அபிராமி அந்தாதி" பிறந்த வரலாறு அல்லவா இது!

உதிக்கின்ற செங்கதிரை உச்சித் திலகமெனத் தாங்கி நான்கு திருக்கரங்களுடன் நின்ற கோலத்தில் கிழக்கு நோக்கியபடியுள்ள அன்னை அபிராமியைக் கண்குளிரத் தரிசிக்கிறோம். அன்னையின் முன்மண்டபத்தில் "அபிராமி அந்தாதி" பாடல்கள் சலவைக் கல்லில் பொறிக்கப்பட்டுள்ளது. தனம் தரும் கல்வி தரும் ஒருநாளும் தளர்வறியா மனம் தரும்.... என அபிராமி அந்தாதி வரிகளை முணுமுணுத்தபடி சந்நிதியை வலம் வந்து அம்பிகையின் தரிசனத்தை நிறைவு செய்கிறோம்.

ஐந்து நிலைகள் கொண்ட உட்கோபுரத்தைத் தாண்டி உள்ளே நுழைந்தால் இரண்டாம் பிரகாரம் வருகிறது. பரிவார மூர்த்தங்களுடன் யாக சாலை, வாகன மண்டபம், தேவஸ்தான அலுவலகம் ஆகியவை இப் பிரகாரத்தில் உள்ளன. பிரகாரத்தின் ஒரு பக்கத்தில், சாதிமல்லிகைக் கொடி போன்றதான "பிஞ்சிலம்" செடி காணப்படுகிறது. இதுவே ஸ்தல விருட்சமாகும். வருடம் பூராவும் பூக்கும் தன்மையுள்ள "பிஞ்சிலம்" செடிப்பூக்கள் இறைவனுக்கு மட்டுமே அர்ச்சிக்கப்படுகிறது.

தென் பிரகாரத்தில் வடக்குப் பார்த்தபடி சிரித்த முகத்தோடு நம்மை வரவேற்பவர் யார்?.... யார் இவர்?...... ஓ.... அவர்தான் யமதர்மராஜா. மார்க்கண்டேயரைப் பிடிக்கப்போய் உதைவாங்கி வீழ்ந்த எமன் எப்படி இங்கே வந்தார்? எமன் இல்லாமல் உலகம் என்ன ஆவது? தேவர்களும் பூமாதேவியும் வேண்ட எமனுக்கு அருளும் உயிரும் வழங்கினார் இறையனார். இந்த இடத்தில் நின்றபடியே மகாமண்டபத்தில் வீற்றிருக்கும் கால சம்ஹார மூர்த்தியைத் தரிசிக்கலாம். இவருக்கும் அருகேயுள்ள உற்சவர் எமனுக்கும் "நிறைவான ஒரு வணக்கம்"

பொருள் கிடைக்கிறது என்பதற்காக தவறான வழியில் வாழ்க்கை நடத்தக்கூடாது.

செலுத்திக்கொண்டு அப்பால் நகருகிறோம். அறுபத்துமூவர், பள்ளியறை இவற்றினைக் கடந்து சில படிகள் ஏறி மூலவர் சந்நிதியை அண்மிக்க வேண்டும். சங்கு மண்டபம், அடுத்தது மகாமண்டபம்.

இங்குதான் அட்டவீரட்ட மூர்த்தியான "கால சம்ஹார மூர்த்தி" எழுந்தருளி உள்ளார். காலசம்ஹாரர் வலது திருக்காலை ஊன்றி, இடது திருக்காலைச் சற்றே தூக்கியபடி... நிறைந்த புன்முறுவலோடு காணப்படுகிறார். இறைவனின் திருவடியின்கீழ் வலப்பக்கத்தில் கூப்பிய கரங்களுடன் மார்க்கண்டேயர் நிற்கிறார். இடது பக்கம் அம்பிகை அருள் மிகு வாலாம்பாள் உள்ளார். காலசம்ஹார மூர்த்தியின் அருகே வெள்ளிப் பேழையில் மரகத லிங்கம் வைக்கப்பட்டுள்ளது.

காலசம்ஹார மூர்த்திக்கு தீபாராதனை நடைபெறும் எல்லா வேளையும் அர்ச்சகர்கள், சுவாமியின் பீடத்தை மூடியுள்ள வெள்ளித் தகட்டை நகர்த்துகிறார்கள். ஏன்? என்று அறியும் ஆவலில் கண்கள் விரிய உற்று உற்றுப் பார்க்கிறோம். உதைவாங்கிய எமன் உயிர் இழந்து தலைசாய்த்துக் கிடக்கிறான். பூதகணம் ஒன்று கயிறுகட்டி இழுத்துக் கொண்டிருக்கிறது. இந்தத் தோற்றம்தான் பீடத்தின் முற்பக்கம் காணப்படுகிறது. "அருள் பெற்ற எமதர்மன்" காலசம்ஹாரருக்கு நேர் எதிரே பிரகாரத்தின் தென் சுற்றில் உள்ளார். (நாம் ஏற்கனவே இவரைச் சந்தித்து முன் ஜாக்கிரதையாக "நிறைந்த வணக்கம்" செலுத்தினோமே! மறந்து போச்சா!)

அடுத்து, அர்த்த மண்டபத்துடன் கூடிய மூலவர் அமிர்தகடேஸ்வரரின் சந்நிதி. அமிர்தலிங்கேஸ்வரர், அமிர்த கடோற்பவர், அமுதகடேசர், அமிர்தேஸ்வரர் எனப் பல பெயருடன் மூலவர் லிங்கத் திருமேனியாக மேற்கு நோக்கியபடி உள்ள அற்புதத் திருத்தோற்றம். லிங்கத் திருமேனியை மார்க்கண்டேயர் இறுகத் தழுவிக்கொண்டபோது, அவரது கழுத்திலிருந்த உருத்திராட்சம் மாலை அழுந்திய தழும்பும், பாசக்கயிறு லிங்கவடிவின் மேல் பட்டதனால் ஏற்பட்ட தழும்பும் அப்படியே இருப்பதாக அர்ச்சகர்கள் கூறுகிறார்கள். 2. ஸ்தல வரலாறும் இதனை அழுத்திக் கூறுகிறது.

ஆயுள் ஹோமம், சஷ்டியப்பூர்த்தி, சதாபிஷேகம் (மணிவிழா) போன்ற பலவும் இந்த மகா மண்டபத்தில் நடைபெறுகிறது. நாம் தரிசனத்துக்குச் சென்றிருந்த வேளையில் பத்துக்கும் குறையாத 60 வயது தாண்டிய திருமணங்கள் மணவறை சோடனைகளுடனும், மேளதாளம்-வீடியோ- புகைப்படம் என்பவற்றுடனும் (பின்வீதி தவிர்ந்த) எல்லா வீதிகளிலும் வெகு ஜோராக் நடந்து கொண்டிருந்ததைக் காண முடிந்தது.

**2. இந்த விபரம் உள்ளிட்ட பல்வேறு தகவல்களையும் எமக்குத் தந்து உதவியவர் யாழ்ப்பாணத்துக் குருக்கள் என்று அங்குள்ளோரால் அழைக்கப்படுகின்ற ராசா ஐயர் ஆகும். இவரது பூர்வீகம் வடமராட்சி- கரணவாய்ப் பகுதி. ஏறத்தாழ முப்பது வருடங்களுக்கு முன்னரே திருக்கடவூர் சென்று குருக்கள் குழாமில் இடம்பிடித்து இன்று நல்ல ஸ்தானத்தில் இருக்கிறார். அவருக்கு நம்மைக் கண்டதும் பேசியதும் பேரானந்தம், நமக்கோ அவரது அன்பும் உபசரிப்பும் மறக்கமுடியாதவை.**

**பொறுப்புள்ளவன் புகழ் பெறுவான் இறுமாப்புள்ளவன் ஏமாறுவான்.**

மகாமண்டபத்தின் முன்பாக உள்ள சங்கு மண்டபத்தில் உற்சவ மூர்த்தங்கள் வைக்கப்பட்டுள்ளன. அதன் மேற்கு மூலையில் அருள்மிகு "கள்ள வாரணப் பிள்ளையார் அமர்ந்துள்ளார். இவர் மிகுந்த சக்தி வாய்ந்த பிள்ளையார். திருக்கடவூர்த் திருத்தலம் விநாயகருக் கான அறுபடை வீடுகளுள் ஒன்றாகும். முருகனின் அறுபடைவீடுகள் வெகு பிர சித்தம். முருகனுக்கு மூத்தவிநாயகப் பெருமானுக்கும் அறுபடை வீடுகள் உண்டு.

**கூறு திருவருணை சுப்பா முதுகுன்றம்**
**வீறு கடவூர் விண்முட்டும் – தேறு தமிழ்**
**மாமதுரை காசி மருவு திருநாரையூர்**
**வேழ முகத்து ஆறுபடை வீடு**

என்கிறது ஒரு பழந்தமிழ்ப் பாடல்.

| | | |
|---|---|---|
| திருவருணை (திருவண்ணாமலை) | - | செந்தூரப்பிள்ளையார் |
| முதுகுன்றம் (விருத்தாசலம்) | - | ஆழத்துப் பிள்ளையார் |
| கடவூர் | - | கள்ள வாரணப் பிள்ளையார் |
| மதுரை | - | முக்குறுணிப் பிள்ளையார் |
| காசி | - | துண்டீர விநாயகர் |
| திருநாரையூர் | - | பொல்லாப்பிள்ளையார் |

மூலவர் சந்நிதியின் சுவரின் சுற் றுப் பக்கங்களில் பிரம்மா, துர்க்கை, லிங்கோற்பவர், தட்சணாமூர்த்தி, விநாயகர் உள்ளனர். வழமையாக சண்டேஸ்வரர் இருக்கவேண்டிய இடத்தில் இல்லாமல் மூலவருக்குப் பின் பக்கமாக லிங்கோற் பவருக்கு அருகில் இருப்பது ஒரு வித்தி யாசமான அம்சம். இங்கே நவக்கிரக சந்நிதி இல்லை.

திருக்கடவூருடன் தொடர்புடைய இரண்டு தீர்த்தங்கள் உண்டு. எமன் தோற்றுவித்த "கால தீர்த்தம்" என்பது தற்போது "ஆனைக்குளம்" என்று அழைக்கப்படுகிறது. இது ஊரின் நடுவே உள்ளது. மற்றது "மார்க்கண்டேய தீர்த்தம்". இது "காசி தீர்த்தம்" எனப் படுகிறது. திருக்கடவூர் மயானத்தில் உள் ளது. அது என்ன? ....... திருக்கடவூர் மயானம். அதுவும் ஒரு சிவஸ்தலமே. இதனைப் புரிந்துகொள்ள அமைவிடத் தைச் சற்று உன்னிப்பாக நோக்குவோம்.

திருக்கடவூர் திருத்தலம் மேற்கே ஒரு பெரிய கோபுரத்துடனும், கிழக்கே ஒரு சிறிய கோபுரத்துடனும் இருப்பதை ஏற்கனவே பார்த்தோம். இந்தக் கிழக்கு கோபுரத்துக்குச் சரி நேராக (கிழக்காக) மண் பாதையினூடாக 2கி.மீ. தூரத்தில் இத் "திருக்கடவூர் மயானம்" உள்ளது. (இன்னமும் 2கி.மீ கிழக்காக பயணித்தால் சமுத்திரம் வருகிறது) மூவராலும் தேவா ரப் பாடல்பெற்ற சிறிய கோயில் இது. இந்த 2கி.மீ தூரப்பகுதியிலும், கோயில் சுற்றாடலிலும் ஆங்காங்கே சில வீடு களைப் பார்க்கலாம்.

திருக்கடவூர் மயானத்துக்கு இராஜகோபுரம் இல்லை. முகப்பு வாசல் மட்டுமே உண்டு. மூன்று நிலைகள் கொண்ட சிறிய உட்கோபுரம் ஒன்றுண்டு.

மூலவர் மேற்கு நோக்கிய சதுர ஆவுடையாருடன் கூடிய லிங்க வடிவம். "பிரம்மபுரீஸ்வரர்" என்னும் திருநாமம் கொண்ட மூலவர் அருகே தனிச்சந்நிதியில் அம்பிகை "மலர்க்குழல் மின்னம்மை" கிழக்கு நோக்கியபடி அருள் பாலிக்கிறாள். நடராஜசபை, பைரவர் சந்நிதி, சிங்காரவேலர் சந்நிதி எனச் சுற்றுப் பரிவாரங்களும் உள்ளனர். சிங்கார வேலர் சந்நிதிக்கு முன்பாக உள்ள மண்டபத்தின் மேல் விதானத்தில் பன்னிரு இராசிகளின் சித்திரம் சிதைவுற்று காணப்படுகிறது. இந்தத் தலத்தின் தீர்த்தமே "காசி தீர்த்தம்" எனப்படுகிறது. கோயிலின் தெற்குப்பக்கமாக வயல்களுக்கு நடுவே "மார்க்கண்டேய தீர்த்தம்" எனப்படுகின்ற காசி தீர்த்தம் கிணறு உள்ளது. இந்தக் காசி தீர்த்தக் கிணற்றிலிருந்துதான் தினமும் திருக்கடவூர் அமிர்தகடேஸ்வரரின் திருமஞ்சனத்திற்கு (அபிஷேகம்) தண்ணீர் கொண்டு செல்லப்படுகிறது என்பது மயானத்தின் விசேட செய்தியாகும். மார்க்கண்டேயர் கடவூர் அமிர்தகடேஸ்வரரை இந்தத் தீர்த்தத்தினால் அபிஷேகம் செய்து ஆராதித்ததால் "மார்க்கண்டேய தீர்த்தம்" எனப்பட்டது.

ஊழிக்கால முடிவில் பிரம்மன் சாம்பலாகி மீண்டும் உயிர்ப்பிக்கப்பட்டு படைப்புத் தொழில் வழங்கப்படும் இடம் என்பதால் "மயானம்" எனப் பெயர் பெற்றதாக கோயில் குறிப்புக் கூறுகிறது.

அமிர்த கடேஸ்வரரையும், பிரம்மபுரீஸ்வரரையும் தரிசித்த நிறைந்த மனத்துடன் புறப்படுகிறோம் அடுத்த திருக்கோயில் நோக்கி....

**"குழைகொள் காதினர் கோவண ஆடையர்**
**உழையர்தாங் கடவூரின் மயானத்தார்**
**பழையதம் அடியார் செய்த பாவமும்**
**பிழையும் தீர்ப்பர் பெருமான் அடிகளே"**

-அப்பர் பெருமான்-

## அட்டவீரட்டத் தலங்கள்

**கண்டியூர் பறியலூர் கடவூர் விற்குடி**
**அண்டர்க்கும் எட்டா அதிகை குறுக்கை**
**பண்டை யோர் புகழும் வழுவூர் கோவலூர்**
**விண்புகழ் தரும்அட்ட வீரட்டானமே.**

தனிப்பாடல்

| | | |
|---|---|---|
| 1. திருக்கண்டியூர் | - | பிரமன் சிரம் கொய்தது |
| 2. திருப்பறியலூர் | - | தக்கன் சிரம் கொய்தது |
| 3. திருக்கடவூர் | - | யமனை உதைத்தது |
| 4. திருவிற்குடி | - | சலந்தாசுரனைச் சங்கரித்தது |
| 5. திருவதிகை | - | திரிபுரத்தை எரித்தது |
| 6. திருக்குறுக்கை | - | மன்மதனை எரித்தது |
| 7. திருவழுவூர் | - | யானையை உரித்தது |
| 8. திருக்கோவலூர் | - | அந்தகாசுரனை சங்கரித்தது. |

**பெரும் திட்டங்கள் கூடச் சிறிய பொறுமையின்மையால் சிதறிவிடும்.**

உ

# வைகாசிமாத வாராந்த நிகழ்வுகள்

01-05-2009 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்

சொற்பொழிவு:- "ஆன்மீக வழியில் பெண்கள்"

வழங்குபவர்:- செல்வி விகவாம்பா விசாலாட்சி (மாதாஜி) அவர்கள்

---

08-05-2009 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்

விடயம்:- "பஜனை"

வழங்குபவர்கள்:- வல்வை முத்துமாரி அம்மன் பஜனைக் குழுவினர்

---

15-05-2009 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்

சொற்பொழிவு:- "பூமேல் மயல் போய்"

வழங்குபவர்:- சுவாமி சித்ரூபானந்தா அவர்கள்

[ஸ்ரீ சாரதா சேவாச்சிரமம், பருத்தித்துறை]

---

22-05-2009 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்

சொற்பொழிவு:- "தேவி பாகவதம்" (தொடர்)

வழங்குபவர்:- திரு அ. குமாரவேல் அவர்கள்

[சிரேஷ்ட விரிவுரையாளர், யாழ் கல்லூரி வட்டுக்கோட்டை]

---

29-05-2009 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்

## ஞானச்சுடர் 137ஆவது மாத வெளியீடு

## வைகாசி - 2009

வெளியீட்டுரை:- திரு சி. சிவபாலசிங்கம் அவர்கள்

[கிராம உத்தியோகத்தர், பொலிகண்டி]

மதிப்பீட்டுரை:- திரு துரை. கணேசமூர்த்தி அவர்கள்

[ஆசிரியர், யாழ்ப்பாணக் கல்லூரி]

பதிவு இல. Q.D/38/NEWS/2009

# ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலய முகப்புத் தோற்றம்
# 2009

